நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 193 | மார்ச் 23 - ஏப்ரல் 05, 2000 | விலை ரூபா 10. 00


## வவுனியாவில் மீண்டும் வரி!


## அரசு தப்பிப்பிழைக்க வழி?





## தலைநகரப் பாய்ச்சலில் தலை தப்பிய இலக்கு!





## நோர்வேயின் புதிய வெளிநாட்டமைச்சர் ஜக்லாண்ட் பேச்சுவார்த்தையில் ஆர்வமானவரா?



## பெண்களைத் தேடி வரும் பொலிசார்

நன்றி - நூலகத்திட்டம்



# சூடான பேட்டிக்குப் பின்னால்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இயக்குநரான நிஹால் கருணாரத்ன அவர்களின் பேட்டி கடந்த வாரம் சூடான விடயமாக இருந்தது.

கேள்விகளுக்கு அசட்டையாக அவர் பதில் அளித்த விதம், மற்றும் அவர் துணிந்து பத்திரிகைகளுக்குப் பேட்டி அளிக்க முன்வந்தமை பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் உலவுகின்றன.

பொலிஸ் தலைமையகத்தின் அறிக்கைப் புத்தகங்களின்படி நிஹால் கருணாரத்ன அவர்கள் ஒரு சாதாரண பொலிஸ் அதிகாரி பதவியை வகித்தாலும் இன்று அவர் 1700 பேர் கொண்ட ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் இயக்குனர் பதவியை வகித்து வருகின்றார். தம்மை ஒரு நேர்மையான, பண்பான அதிகாரியாக இனம் காட்டிக் கொள்ளும் அவர் பொலிஸ் சேவையிலிருந்து விலகி "ஸ்ரீ லங்கன் விமான சேவையின்" பிரதான பாதுகாப்பு அதிகாரியாக பதவியேற்க உள்ளதாகவும், இதனால், ஊடகங்களை நல்ல முறையில் வைத்துக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுவதாகவும்,அதன் ஒருபடியே அவர் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்முகம் என்றும் ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது.


சண்டே லீடர், இரிதா பெரமுண பத்திரிகைகளுடனான பேட்டியின் போது, நிஹால் கருணாரத்ன அவர்களிடம் "பெத்தேகான சஞ்சீவவின் வீட்டை பேலியகொடை பொலிசார் சுற்றி வளைத்தது அங்கு பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் இருந்ததினால் தானே" என்று கேட்கப்பட்ட போது அவர், இக்கதை ஒரு பொய்க்கதை என்று குறிப்பிட்டிருந்தார்.

எனினும், உண்மைக் கதை என்னவென்றால், அவ்வீட்டில் பாதாள உலகத் தலைவர்கள் இருந்து பொலிசாரிடம் மாட்டிக் கொண்டனர். பின்னர் அவர்கள் மஜிஸ்திரேட்டின் ஆணையின்படி தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பெத்தேகான சஞ்சீவ ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினைச் சேர்ந்தவர் எனவும், இவரை நியாயப்படுத்தி பாதுகாக்கும் வகையிலேயே நிஹால் கருணாரத்ன அவர்கள் செயற்படுகின்றார் என்பதும் அவரது பேட்டியில் தெரியவருவதாகக் கூறப்படுகின்றது.

மேலும், பொலிஸ் மா அதிபர் கொடிதுவக்கு அவர்களின் பெயரிலேயே சஞ்சீவவின் வீடு சோதனையிடப்பட்டதாகவும், சோதனை நடவடிக்கையின் மத்தியில் நிஹால் கருணாரத்ன அவர்கள் பொலிசாருக்கு இடையூறு விளைவித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெயர் குறிப்பிட விரும்பாத



நிஹால் கருணா ரத்னா

பேலிகொட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர், சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது, சுற்றிவளைப்புக்கு தலைமைதாங்கிய சுமுத்திரஜீவ அவர்கள் தனது துப்பாக்கியை வெளியில் எடுக்கவில்லையெனவும், தம்மை நோக்கி துப்பாக்கியை நீட்டினார் என நிஹால் கருணாரத்ன அவர்கள் கூறியதில் எவ்வித உண்மையும் இல்லையெனக் கூறியிருந்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் இருந்து கசிந்த செய்திகளின்படி பொலிஸ் அதிகாரி சமுத்திரஜீவ அவர்கள் நான்காம் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குள்ளானதாகவும், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அவரிடம் குறிப்பு எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. தற்போது அவர் வேலையிலிருந்து நீக்கப்படும் நிலைக்குள்ளாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பேலியகொடை வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டவர்களில் கெப்டன், ரஞ்சித், சனா, சரத் பிரியந்த ஆகியோரில் கெப்டன் ரஞ்சித் சனா ஆகியோர் குமார் பொன்னம்பலம் அவர்களின் கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஐ.தே.க எதிர்ப்பு ஊர்வலத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்களைத் தாக்கியது, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு என்பதை அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக் கொண்டதும் யாவரும் அறிந்த விடயமாகும்.

தற்போது கிடைத்துள்ள தகவலின்படி பாதாள உலக கோஷ்டிகள் பாதுகாப்பு கெடிபிடிகளின்றி ஒன்றுகூடல் நடாத்துவதற்கு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள டவர் கட்டிடத்தின் 1பி பகுதி பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

இங்கு அடிக்கடி பெத்தேகான சஞ்சீவ மற்றும் இவரது நெருங்கிய ஆதரவாளர்களான தம்மிக்க, மகிந்த பிரதீப், நோனிஸ் போன்ற பாதாள கோஷ்டி பிரபலங்கள் வந்து செல்வதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு அடுத்த தினம் அன்று ஊடரங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தவேளை ஆயுதபாணிகள் குழுவொன்று இந்த பி -1 பகுதியில் இருந்து வெளியேறி சில்வர் ஸ்லிப்பர் விடுதி மீது தாக்குதல் தொடுத்ததற்கான சான்றுகள் உள்ளதாகவும் தெரியவருகின்றது. இக்கசினோ விடுதியிடம் 7 லட்சம் கப்பம் கோரப்பட்டு, அவை வழங்கப்படாததினாலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள இவ்விடம் பயன்படுத்தப்பட்டதாகவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த டவர் கட்டிடத்தின் மாதாந்த வாடகை ரூ.50,000 எனக் கூறப்படுகின்ற போதிலும் பி - 1 பகுதி இலவசமாகவே வழங்கப்பட்டுள்ளதாக மேலதிகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செனல் - 9 விவகாரத்தில் பெரிதும் பெயர் அடிபட்ட ஜயதிஸ்ஸ தென்னக்கோன் இந்த இடத்தை ஒதுக்கிக் கொடுப்பதில் பெரும் பங்காற்றியுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

# கெலும் என்பவரின் மரணம்

# கொலையா? தற்கொலையா?

அண்மையில் மௌன்ற்லெவனியா பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த கெலும் இந்திரஜித் என்ற 20 வயது இளைஞர் மரணமடைந்துள்ளது அப்பகுதி மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

பொலிசார் இவர் தனது கழுத்தை நெரித்து தற்கொலை செய்துகொண்டார் என்று கூறுவதை இவரது குடும்பத்தவரும் அயலவரும் ஏற்றுக் கொள்வதாய் இல்லை. இவர் கொலை செய்யப்பட்டார் என்றே நம்புகின்றனர்.

மார்ச் மாதம் 10ம் திகதி நடந்த களவு தொடர்பாக இவர் 14ம் திகதி கைது செய்யப்பட்டார். இவர் இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படுவார் என்று பொலிசார் கூறிய போதும் அவர்கள் அவ்வாறு செய்யாது அவரது மரணத்தையே அறிவித்தனர்.

இவர் தனது கழுத்தைத் தானே நெரித்துத் தற்கொலை செய்து கொண்டார் என்று பொலிசார் கூறிய போதும் இவரது சக சிறைக் கைதியோ இவர் பலமாக பொலிசாரால் தாக்கப்பட்டார் என்று கூறியுள்ளார்.

இப்போ பொலிசாரின் பாதுகாப்பு என்பது கேள்விக் குறியாகி வருகிறது. சிறைக் கைதிகளுக்கு பாதுகாப்பில்லை, பொலிஸ் விளக்க மறியலில் இருப்பவர்கள் இறந்து போகிறார்கள். இப்படி இறந்தவர்களின் பட்டியலில் அண்மையில் இறந்த கெலும் என்பவரின் பெயரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

அதுசரி, படையினரால் கைது செய்யப்பட்ட புளூமெண்டல் றோட் கோவிலைச் சேர்ந்த ஐயரும் படையினரால் கொல்லப்பட்டு விட்டார் என்கிறது ஒரு தகவல்.

அவரது மனைவியும் பிள்ளைகளும் படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.கொழும்பில் உள்ள மனித உரிமைஅமைப்புக்கள் ஏதாவது உண்மையைத் தெளிவுபடுத்துமா?

தமிழ் மக்களைக் காப்பதற்காய் கட்சி நடாத்தும் தமிழ் தலைமைகள் இருக்கின்றன.

யாராவது உண்மையை விளம்புவார்களா?

## ✔ கோமாளிக் கூத்து

வன்னியில் சிறுநீரக நோய்வாய்ப்பட்டிருந்த புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு சிகிச்சை செய்வதற்காக வெளிநாடு செல்ல இலங்கை அரசாங்கத்திடம் கேட்கப்பட்டது. கொழும்பு மூலமாக சிகிச்சை செய்வதற்காக பாலசிங்கத்தை அனுப்புவதானால், அதற்கு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று அரசாங்கத் தரப்பு அறிவித்தது.

எப்படியோ, பிறகு புலிகள் பாலசிங்கத்தை சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

சென்ற ஆண்டு மாவீரர் தினக் கொண்டாட்டத்தின் போது, பாலசிங்கம் நகைச்சுவையாக இந்தத் தகவலைத் தெரிவித்திருந்தார்.

'எனது சிறுநீரகத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை' என்றும் அவர் கூறியிருந்தார்.

இப்போது ஒஸ்லோவில் பாலசிங்கம் சிகிச்சை பெறுவதற்கான அனுமதியை, தன்னிடம் நோர்வே கோரியதென்றும் தான் அதற்கு அனுமதி வழங்கியிருந்தேன் என்றும் அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி. அதுமட்டுமல்ல, நான் அப்படிச் செய்தும்கூட என்னைக் குண்டு வைத்துக் கொல்லப் புலிகள் முயன்றிருக்கிறார்கள் என்று கவலை தெரிவித்திருக்கிறார்.

பாலசிங்கத்திற்கு மருத்துவ சிகிச்சை செய்ய நோர்வே அரசாங்கத்திற்கு விருப்பம் இருக்காததாலேயே நான் அனுமதித்த பிறகும் அது தாமதம் காட்டியது என்று வேறு அவர் நோர்வே அரசாங்கத்தின் சார்பிலும் அறிக்கை விட்டிருக்கிறார்.

ஆனால், பாவம். அவரது இந்த கப்சாவை நோர்வே உடனே மறுத்து அவரை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்கி விட்டது.

பாலசிங்கத்திற்கு வைத்தியம் செய்ய நாம் யாருடைய அனுமதியையும் கோரவில்லை! முழுக்க முழுக்க மனிதாபிமான அடிப்படையில் அவருக்கு இந்தச் சிகிச்சையை நாம் வழங்கினோம். ஆனால், எமது இந்த சொந்த முடிவை இரு தரப்புக்கும் அறிவித்தோம் என்று அறிவித்து விட்டது நோர்வே.

நடிப்பும் கூட ஒரு கலை. தேர்ச்சியற்றவர்கள் அதைச் செய்யப் புறப்பட்டால் அது வெறும் கோமாளிக் கூத்தாகிவிடும்.

சந்திரிக்காவுக்கு கைவந்த கலை 'கோமாளிக் கூத்து' தான் என்பதற்கு இது இன்னும் ஒரு உதாரணம்!

## ✔ யாருக்கு மனநோய்?

பேச்சுவார்த்தை நடாத்துவதில் சந்திரிகாவின் பாணி ஒரு தனிப் பாணி.

பேச்சுவார்த்தையின் நோக்கம் என்ன, அதன் இலக்கு என்ன என்று தெளிவுடன், அதை நோக்கி, அதற்கு ஊறு விளைவிக்கா வண்ணம் சக்திகளை இணைத்து செயற்படுவது அதன் வெற்றிக்கு அவசியம் என்று தான் நீங்கள் ஒவ்வொருவரும் கருதிக் கொண்டிருப்பீர்கள்.

ஆனால், சந்திரிகா பாணியில் அது தவறு.

சமாதானப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போதே மற்றத் தரப்பை மனம் போன போக்கில் விமர்சிப்பது அவரது பாணி.

சுயகௌரவம் உள்ள எவருடனும் தன்னுடன் சமாதானம் செய்து கொள்ள முடியாது, சமாதானம் தேவையானால் அதை விட்டுவிட்டு வரவேண்டும் என்பது தான் சந்திரிகா பாணி.

புலிகளுடன் பேசிய காலத்தில், அவர்களை வாய்க்கு வந்தபடி விமர்சித்தார். பிரபாகரனை மனநோயாளி என்று கூறினார். பேச்சுவார்த்தை முறிந்து போனது.

இப்போது எதிர்க்கட்சியுடன் பேசத் தொடங்கப் போவதாக அறிவித்த சூடு ஆறமுதல், அவர்கள் புலிகளுடன் சேர்ந்து தனக்கெதிராக சதி செய்வதாக கூறுகிறார்.

சந்திரிகாவுக்கு பேச்சுவார்த்தையின் முடிவு முக்கியம் இல்லை. தன்னை உயர்த்துதலும், தன்முனைப் பாய்ப்பம் பீற்றுதலும் தான் முக்கியம்.

எப்படியோ, ரணில் பேச்சுவார்த்தையைக் குழப்பவில்லை.

எப்படியாவது அதைக் குழப்பிவிடும்வரை சந்திரிகா ஓய மாட்டார் என்பது அடுத்ததாக அவர் விதித்த காலக் கெடுவில் தெரிகிறது.

பிரபாகரன் பற்றி அன்று சந்திரிகா சொன்னது ஒருவேளை அவருக்குத் தான் பொருத்தமோ என்று சந்தேகப் படாமல் இருக்க முடியவில்லை.

## ✔ இரங்காப் பேய்கள்?

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். இலங்கைப் படையினர் பெண்களைக் கண்டால் படுகிற பாட்டைப் பார்த்தால், அந்தப் பேய் அவர்களுக்காக இரங்க வேண்டி வந்து விடும். அவ்வளவுக்கு அதிர்ந்து போய் இருக்கின்றார்கள்அவர்கள்.

"சல்வார் கமீஸ்" போட்டபடி நடந்து வந்தால் போதும். வீதித் தடை "இராணுவ வீரர்"களுக்குப் "படக்குப் படக் கென்று" இருதயம் அடிக்கத் தொடங்கி விடுகிறது. கடந்த சனியன்று இந்தப் பயத்தின் உச்சத்திற்கே இராணுவத்தினர் போய் விட்டனர். கொம்பனித் தெரு - "முத்தையா பாக்" அருகில் வைத்து துகிலுரியப்பட்ட பெண் பற்றிய கதை எல்லாப் பத்திரிகைகளிலும் (ஏரிக் கரைப் பத்திரிகைகள் தவிர) வெளிவந்திருந்தது. பட்டப் பகலில் பதுங்கியபடி எல்லோரும் பார்த்திருக்கத் துகிலுரியப்பட்ட அந்த அப்பாவிப் பெண்ணுக்கு நேர்ந்த அவமானத்தைச் சந்திரிகா அரசாங்கச் சாதனைகளைக் கொண்டு போர்த்தி விடுவோம். இந்தியச் சினிமாப் படங்களில் தான் ஒரு நடு வீதியில் துகிலை உரிதல் காட்சியைப் பார்க்கலாம் என்று நினைக்க வேண்டும் என்றில்லை. இனிமேல் சோதனைச் சாவடிகளிலும் கூட இதனைப் பார்க்கலாம். இராணுவத்தினரை நவீன துச்சாதனர்கள் அது இது என்று கண்டித்து விடாதீர்கள். அம்மாவுக்குக் கோபம் வந்து விடும். பிறகு ?

பெண்கள் ஆடைகளே அணியக் கூடாது என்ற சட்டம் போட்டாலும் போட்டு விடுவர் !

நன்றி - நூலகத்திட்டம்



மட்டு: கல்லடி காவரண்

# ஆண்களிலில்லாத வீட்டில் பெண்களைத் தேடிவரும் பொலிசார்

மட்டக்களப்பு கல்லடி காவலரணைச் சேர்ந்த பொலிஸ் பொறுப்பதிகாரியும், பொலிஸ்-காரரான ரஞ்சித் என்பவரும் தமக்குட்பட்ட கல்லடி, டச்பார், புதுமுகத்துவாரம், நாவலடி கிராமங்களைச் சேர்ந்த மக்களையும், மீனவர்களையும் ஏனைய தொழிலாளர்களையும், இளம் இளைஞர் யுவதிகளையும், வாகனங்கள்,



கடைகள் வைத்திருப்போரையும் படுத்தும் தொல்லைகள், கொடுமைகள் எண்ணிடலங்காதவை.

இவர்களின் அட்டகாசங்களைப் பற்றித் தெரியபடுத்தத் துணிந்தால் தாக்குகின்றார்கள். அதனால், யாரும் இது பற்றி வாய் திறப்பதில்லை. இவர்களின் அட்காசம் மேலோங்கிக் கொண்டே போகின்றனது. ஆகவே இதனை பத்திரிகையினூடாக வெளிப்படுத்த எண்ணி தங்களின் பத்திரிகைக்கு எழுதுகின்றோம்.

இவர்களினால் மேற்கொள்ளப்படும் பிரதான கொடுமைகளை மூவகைப்படுத்தலாம்.

1 யுவதிகளையும், இளம் குடும்பப் பெண்களையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்துவது.
2. மீனவர்களை தாக்குவதுடன் அவர்கள் பிடிக்கும் மீன், இறால் என்பவற்றை பணம் கொடுக்காமல் வற்புறுத்தி எடுத்துச் செல்வது.
3. மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்றவற்றை தமது தேவைக்குப் பயன்படுத்துவதற்காக வற்புறுத்தி வாங்கிச்செல்வது - மறுத்தால் தாக்குவதுடன், தாம் கூறும் பொருட்களை வாங்கித்தருமாறு நிர்ப்பந்திப்பது.


முதலாவது அம்சம் பாலியல் வல்லுறவோடு சம்பந்தப்பட்டது. தற்பொழுது மட்டக்களப்பின் நகர்ப்பகுதிகளில் வீட்டில் தங்கியிருப்போர் மற்றும், குடும்பத்தார் பற்றிய விபரங்கள் பொலிசாரிடம் உண்டு. அவற்றை வைத்துள்ள பொலிசாருக்கு எங்கு பெண்கள் உள்ளார்கள், எந்த வீட்டில் ஆண்களின்றி பெண்கள் உள்ளார்கள், யாருடைய கணவர்மார் வெளிநாடுகளிற்குச் சென்றுள்ளார்கள் [illegible] தெரியும்.

அவ்வாறு தெரிந்துகொண்டவர்கள் நள்ளிரவில் வந்து வீடுகளைத் தட்டி எழுப்பி உள்நுழைகிறார்கள். இதுபோன்று பல்வேறு விதமான முறைகளில் தமது பாலியல் பலாத்கார முயற்சிகளை பொலிஸ் பதிவட்டையை வைத்துக் கொண்டே நடத்துகின்றார்கள்.

இதனைவிட பகலில் ரோந்து செல்லும் போது தாம் செல்லும் வழிகளில் அழகான பெண்களைக் கண்டால் அங்குள்ள ஆண்களின் அடையாள அட்டையைப் பறித்துச் செல்கின்றார்கள். அவ்வாறு பறித்துச் செல்லும் போது இரவு "ஏழு மணி அளவில் கேம்புக்கு வந்து எடு" என்று கூறிச் செல்கின்றார்கள்.

இது பொலிசாருக்கு சாதகமான சூழலை உருவாக்குவதாகும். அதாவது அடையாள அட்டையைப் பெறப்போகும் போது பயத்தின் காரணமாக பெண்களையும் கூட்டிச் சென்றால் அங்கு விசாரணைக்கெனத் தனியாகக் கூட்டிச்சென்று தனிமைப்படுத்தி தமது காரியங்களை கச்சிதமாக முடிக்கின்றார்கள்.

அவ்வாறு பெண்களைக் கூட்டிவராமல் வந்தால் (வருபவர்களை) ஆண்களை காத்திருக்கும்படி கூறிவிட்டு அவர்களின் வீட்டிற்குச் சென்று தமது காரியத்தை முடிக்கின்றார்கள்.



இதேபோன்று இவர்கள் ரோந்து செல்லும் போது வீடுகளில் சாதாரண குடும்பச் சண்டைகள் நடந்தாலும் அங்கு தாமாகவே உட்புகுந்து ஆணையும், பெண்ணையும் அழைத்துச் சென்று தனிமையாக்கி தமது காரியத்தை முடிக்கின்றனர்.

இதனைவிட இவர்களது காவலரணின் பொறுப்பில் உள்ள கல்லடிப்பாலத்திற்கு கிழக்காக உள்ள சோதனைச்சாவடியில் வரும் பெண்களது அடையாள அட்டைகளைப் பார்த்து அவர்களின் பெயர், முகவரி, அடையாள அட்டை எண், வயது என்பவற்றை குறித்தெடுத்துக்கொண்டு, அவர்களைப் பற்றி மற்றவர்களிடம் விசாரிக்கின்றார்கள். அவர்களை இவர்கள் காதலிப்பதாகவும் கூறுகின்றார்கள். இதுபோன்று ஏராளமான கொடுமைகள்.

அடுத்தது, மீனவர்கள் அத்துமீறித் தாக்கப்பட்டு வருவது. இப்பொலிஸாரின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசமான கல்லடி, டச்பார், புதுமுகத்துவாரம், நாவலடி [illegible] மக்களின் பிரதான தொழில் மீன்பிடி.

மீன்பிடித் தொழிலுக்காக ஆற்றுக்குச் செல்பவர்கள் மிகவும் கொடூரமான முறையில் நடத்தப்படுகின்றார்கள். குறிப்பிட்ட சில இடங்களில் வலை வீசக்கூடாதென்றும், தோணியில் வீசிக் கொண்டிருப்பவர்களை கரைக்குக் கூப்பிட்டு அவர்களை 'சவல்', 'பொல்லு', 'துவக்குப் பின்புறம்' என்பவற்றால் பலமாகத் தாக்குவதோடு அவர்கள் கஷ்ரப்பட்டுப் பிடிக்கும் மீன், இறால் என்பவற்றையும் பறித்துச் செல்கின்றார்கள்.

அத்தோடு லைற், ஹோல்ட்டர், மற்றும் கம்பு, மரம், பேப்பர் போன்ற பல பொருட்களை வாங்கித் தரும்படி நிர்ப்பந்திக்கிறார்கள். மறுக்கும் பட்சத்தில் தோணி, வலை போன்றவற்றை பறித்து வைப்பதுடன் நீண்ட நாட்களுக்குப் பின்னரே திருப்பிக் கொடுக்கின்றனர்.

அடுத்தது ஊர்மக்கள், கடைக்காரர் தொழில் செய்பவர்களிடம் தமது தேவைக்கான பொருட்களையும், பயன்படுத்துவதற்காக மோட்டார் சைக்கிள், சைக்கிள், உழவு இயந்திரம் போன்றவற்றையும் வற்புறுத்தி வாங்குவதாகும்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பவற்றை தமது நடவடிக்கைகளுக்குச் செல்வதற்காக பெற்றுக்கொள்கின்றார்கள். உழவு இயந்திரத்தை மண், விறகு, புல் என்பவற்றை ஏற்றுவதற்காகப் பயன்படுத்துகின்றார்கள்.

இதுபோன்ற பல கொடுமைகளை கல்லடி காவரலண் (கே.எல்.-4) பொலிசாரும், பொறுப்பதிகாரியும் செய்வதற்கு உடந்தையாக 'ரஞ்சித்' எனப்படும் இதே காவல் அரணில் மிகவும் நீண்டகாலமாக கடமையாற்றும் (இவருக்கு இது வரை மாற்றம் வழங்கப்படுவதில்லை) பொலிசும், பெரியதம்பி எனப்படும் சி.வி.எப்ஜச் சேர்ந்தவரும் உள்ளனர்.

இவ்வாறு கே.எல்.4 பொலிஸ் காவலரணில் மட்டுமல்ல மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள ஏனைய பொலிஸ் காவலரண்கள், பல்வகைப்பட்ட இராணுவத்தினரின் முகாம்கள் என்பவற்றுக்குட்பட்ட மக்களும் துன்பப்படுகின்றார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் இதில் கவனமெடுத்து வேலியே பயிரைமேயும் நிலையை நீக்குவதோடு, இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களை விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீங்கிழைக்கும் படையினரைக் குறிப்பாக கே.எல்.4 பொலிஸ் காவலரணில் உள்ள பொலிசார், ரஞ்சித் (பொலிஸ்), பொறுப்பதிகாரி என்போரை தண்டிப்பதோடு தகுந்தபடி சேவையாற்ற ஆணையிடவேண்டும். அத்தோடு கே.எல். 4 [illegible] என்போரை துாரப்பிரதேசத்திற்கு மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

**— பாதிக்கப்பட்டபிரதேசமக்கள்**

# இதைத் தவிர நாம் வேறு எதைத் தான் கேட்கிறோம்?

இலங்கை தீவு நாற்புறமும் கடல் சூழ்ந்த அழகிய தீவு. இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தாலும், மீன் வளம் வடபகுதியிலேயே கூடுதலாக காணப்படுகின்றது. 1983ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பிடிக்கப்பட்ட மீனின் அளவு 48,776 மெற்றிக் தொன். இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட, யாழ்ப்பாணத்திலேயே கூடுதலான அளவு மீன் பிடிக்கப்பட்டதாக மீன் பிடித்திணைக்களம் 1997ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. இன்று வடபகுதி மீனவர்கள் கடலுக்குள் இறங்க முடியாத நிலை காணப்படுகிறது. வடபகுதி மீனவர்களின் துயரங்கள் வார்த்தைகளில் அடங்காது. யாழ். மாவட்ட மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து யாழ் மாவட்ட கூட்டுறவுச்சங்க சங்க சமாஜத்தின் தலைவர் சின்னையா தவரத்தினத்துடன் கலந்துரையாடிய போது அவர் தெரிவித்த கருத்துக்கள் இவை. சந்தித்தவர் எழுவான்.

**தற்போது எவ்வளவு தூரம் சென்று மீன் பிடிப்பதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்?**

குருநகர் பகுதியில் வெளிச்சவீடுவரையுமே மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதி ஆற்றுவாய் என அழைக்கப்படுகிறது. முன்பு இது பாதையாக இருந்தது. கடற்வற்றும் காலங்களில் இப்பகுதியில் மீன் பிடிக்க முடியாது. மார்ச், ஏப்ரல் காலங்களின் பின்னர் இப்பகுதியில் மீன் பிடிக்க முடியாது. கடல் வற்றி நிலம் காணப்படும்.

**ஆழ் கடல் மீன் பிடி தற்போது எந்த நிலையில் உள்ளது?**

ஆழ் கடல் மீன்பிடி தற்போது முற்றாக தடைப்பட்டுள்ளது. முன்பு நாங்கள் 50 - 60 அடிஆழம் உள்ள பகுதிகள் வரை சென்று மீன் பிடிப்போம். ஆனால், தற்போது மீன் பிடிக்க அனுமதிக்கப் பிரதேசத்தின் ஆழம் 12 அடி மட்டுமே.

**மீன் பிடித்தடை காரணமாக யாழ் மாவட்டத்தில் தற்போது எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன?**

எட்டாயிரம் குடும்பங்கள் யாழ் மாவட்டத்தில் மீன் பிடித்தடையால் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களில் 2200 குடும்பங்கள் இடம்பெயர்ந்த குடும்பங்கள்.

**யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்பட்ட மீனின் எத்தனை வீதம் முன்பு தென்னிலங்கைக்கு அனுபப்பட்டது?**

யாழ். மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனின் 60 வீதம் தென்னிலங்கைக்கு அனுபப்பட்டு வந்தது.

**முன்பு யாழ். மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீனில் எவ்வளவு பதனிடப்பட்டு அனுப்பட்டது?**

யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படும் மீனில் மூன்றில் ஒரு பங்கு அன்றிஸ், [illegible] நிறுவனங்களால் பதனிடப்பட்டு அனுபப்பட்டு வந்தன. இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தற்போது வேலையிழந்துள்ளனர்.

**வடபகுதி கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதாக கூறப்படுகிறது? இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

இது முற்றிலும் உண்மை. மாலை ஏழு மணிக்குப் பிறகு இளுவைப் படகுகள் பெருந்தொகையாக வரும். இவர்கள் சிலவேளை காங்கேசன்துறை கடலில் கூட வந்து மீன் பிடித்துக் கொண்டு செல்கின்றனர். அவர்கள் பாவிக்கும் இயந்திரங்கள் வலுமிக்கவை. அசோக்லேலண்ட் 120 குதிரை வலு இயந்திரங்களை அவர்கள் பாவிக்கின்றார்கள். நாங்கள் இறுதியாகப்பாவித்தது, 40 குதிரை வலு இயந்திரங்களே. தற்போதைய சூழலில் ஆழ்கடல் மீன்பிடி அனுமதிக்கப்பட்டாலும் நாம் எமது பிரதேசத்திலேயே மிகப்பயங்கரமான ஒரு சூழல்நிலையை எதிர்கொள்ளவேண்டி இருக்கும்.

எமது படகுகள் சிறுபடகுகள். நாம் ஆழ்கடலுக்கு செல்வதாயின், பைபர் கிளாஸ் படகுகளிலேயே செல்ல வேண்டும். நாம் அவர்களுக்கு அருகே செல்ல முடியாது. அவர்கள் செய்யும் இழுவைத்தொழில் எமது கடல் வலுமுழு-வதையும் நாசமாக்கி விட்டது. இந்திய மீனவர்களின் மடிநிலமட்டத்திலுள்ள புல்பூண்டுகள் தாவரங்கள் முழுவதையும் அழித்து விடும். இப்படியே போனால், வடபகுதிக்கடல் மேடையாகத்தான் காணப்படும். புல்பூண்டுகள் அல்லாவிட்டால் மீன்கள் உற்பத்தியாக மாட்டா. மீன்கள் தங்கிச் செல்வதற்கு இடமில்லை. தாவரமில்லாவிட்டால் மீன்வளம் முற்றாகப் பாதிக்கப்படும்.

இறால் ஏற்றுமதி மூலம் இந்திய அரசுக்கு அன்னிய செலாவணி கிடைக்கிறது. வங்கிகள் மூலம் கடன் வழங்கி இந்திய அரசு மீனவர்குளை ஊக்குவிக்கிறது. இராமேஸ்வரத்திலுள்ள மீனவர்களுக்கு முதலாளி மதுரையில் இருப்பார். சில சமயங்களில் இந்திய மீனவர்கள் மன்னாரில் நாச்சிக்குடாவரை வந்து மீன் பிடித்துக் கொண்டு செல்கிறார்கள். இலங்கை மீனவர்கள் அழிந்தமைக்கு காரணம் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பே. வடபகுதிச் செல்வம் சூறையாடப்படுகிறது. இலங்கை அரசு வலுவுடன் இருந்தால் இந்திய இலுவைப் படகுகளை தடை செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

**தமிழ்க்கட்சிகள் உங்களது பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கவில்லயைா?**

நாங்கள் அண்மையில் எமது பிரச்சினைகளை வெளிப்படுத்தும் முகமாக மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினால் சுயாதீனமான பேரணியொன்றை நடத்தினோம். ஆனால், திடீரென எங்கிருந்து வந்தது என்று தெரியாமல் சில பஜிரோக்களும் இப் பேரணியில் கலந்து கொண்டன. பேரணி முடிந்ததும், ஈ.பி.டி.பியினர் தாம் தான் எல்லாவற்றையும் சாதித்தது போன்ற தொனியில் உரையாற்றினர், பின்னர் புளொட் இயக்கத்தினர் ஈ.பி.டி.பியைத் தாக்கிப் பேசத் தொடங்கினர். இதனால் இவர்களிடமிருந்து ஒலிவாங்கியைப் பறிக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. இந்நிலையில் இவர்கள் எமக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று எவ்வாறு நம்புவது?

**இறுதியாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

ஏனைய துறைகளைவிட கூடுதலான பாதிக்குள்ளான துறை கடற்- [illegible] கூடிய விரைவில் தீர்வு காணப்பட்டு இடம்பெயர்ந்த மீனவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இதைத் தவிர வேறு எதைத் தான் நாம் கேட்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



## சேகு இஸ்ஸதீன்:
# ஐ.தே.கவின் புதிய பொலிஸ்காரரர்?

இஸ்ஸதீன் அவர்கள் முதன்முதலில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து நானும் ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்குமென நம்புகின்றேன். எதற்கும் ஒரு காலம் உண்டு என்பார்கள். காலத்தை திட்டாதீர்கள் என்பது ஒரு நபிமொழியும் கூட. அதனை சேகு இஸ்ஸதீன் தனது முதற்பேச்சில் குறிப்பிட்டது தான் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய வேடிக்கை, ஆனால், காலத்தை நயவஞ்சகத்தனத்தால் ஏமாற்றாதீர்கள் என்பதும் எமது நடைமுறை மொழி. காலம் செய்த கோலம் தான் சேகு இஸ்ஸதீன் அவர்களுக்கு இந்தக் கட்டுரையினை சமர்ப்பணம் செய்வதும், ஏனெனில், கூடுதலாக அரசியலையும், எழுத்தையும் எனக்கு கற்பித்துத் தந்தவர். அப்படிப்பட்ட ஒரு மனிதனுக்கு ஒரு நன்றிக்கடனாக இந்தக் கட்டுரையையும் சமர்ப்பணம் செய்ய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

சேகு இஸ்ஸதீன் அவர்களுக்கு எம்.பி.பதவியினை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியதன் மூலமோ, அல்லது அவரை யானையில் ஏற்றி ஊர்வலம் எடுத்ததன் மூலமோ முஸ்லிம்களின் விடயத்தில் பெருந்தன்மையை ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படுத்தியுள்ளது என யாராவது கருதுவோமே எனில், அது பெரும் முட்டாள்தனமான விடயமாகும். உண்மையில் சேகு இஸ்ஸதீன் அவர்களை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்ததற்கான காரணம் இவர் மிகவும் பழமை வாய்ந்ததும், நாகரீகத்துவம் வாய்ந்த அரசியல்வாதியன்றோ அல்லது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களிடத்தில் பெரும் செல்வாக்கினை பெற்றவர் என்ற காரணத்தினைக் கொண்டோ அல்ல. இந்தப் பொலிஸ்காரர் முஸ்லிம் காங்கிரசின் செல்வாக்கினை அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக அக்கரைப்பற்று பிரதேசத்தில் உடைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கினை மேலோங்கச் செய்வார் என்ற ஐக்கிய தேசியக் ஆதரவாளர்களினதும், ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களினதும் பெரும் எதிர்பார்ப்பு பாராளுமன்றத்தில் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களை குறுக்கீடு செய்ய வேண்டும் என்பதேயாகும். இஸ்ஸதீன் அவர்கள் சத்தியப் பிரமாணத்தின் பின்னர் இரண்டொரு தடவைகள் ஆற்றிய உரையானது காத்திரம் வாய்ந்ததாக இருக்கவில்லை. மாறாக, அவர் தன்னுடைய உரைகளில் தனக்கு எம்.பி. பதவி வழங்கியமைக்காக அவருடைய தற்காலிக தலைவரான ரணில் விக்கிரமசிங்கவிற்கு நன்றி கூறுவதையும் தனக்காக தூது சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், நன்றி கூறுவதனையே கடமையாகக் கொண்டுள்ளதைக் காணமுடிந்தது.

இஸ்ஸதீன் அவர்கள் ஒரு அரசியல்வாதியல்ல. அவர் ஒரு அரசியல் ஞானி போலும். ஏனென்றால், இந்த நாட்டின் இனப்பிரச்சினையினைத் தீர்க்கக்கூடிய ஒரேஒரு தலைவர் ரணில் விக்கிரசிங்க அவர்கள் தான் என்று எவ்வாறு தான் அவர் கண்டுபிடித்தாரோ தெரியவில்லை. முன்னர் முஸ்லிம் காங்கிரசின் பிரச்சார மேடைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை இடாப்பர் மாமாக்கள் என்றும், பாராளுமன்றத்தில் குளிரூட்டப்பட்ட ஆசனங்களை சூடாக்குபவர்கள் என்றும், கூக்குரலிட்ட சேகு இஸ்ஸதீன் அவர்கள் இன்று அந்தக் குறிப்பிட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் தனக்கு எம்.பி. பதவி கிடைத்ததையிட்டு அவர்களுக்கு பாராளுமன்றத்திலேயே நன்றி செலுத்துகின்றார்.

சேகு இஸ்ஸதீன் அவர்கள் சத்தியவாதியுமல்ல, சாந்த சொரூபியுமல்ல. அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் சுத்துமாத்து அரசியலுக்கான ஒரு தேடலாகும். ஏனெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சியின் வேட்பாளர் அப்துர் ரஸூல் அவர்களை ஆதரிப்பதாகக் கூறிவிட்டு கட்டுப்பணமும் செலுத்திவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார மேடையில் உட்கார்ந்து கொண்டவர். இதுதான் இஸ்ஸதீன் அவர்களுடைய அரசியலின் ஸ்திரத்தன்மையாகும்.

கட்சியின் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த எம்.பி. பதவியானது சேகு இஸ்ஸதீன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இஸ்ஸதீன் மு.காவின் செல்வாக்கினை அடியோடு ஒழித்துக் கட்டுவார். கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களுக்கு அடுத்த தலைவர் சேகு இஸ்ஸதீன் அவர்கள் தான் என்றோ யாரோ ஒருத்தர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அன்று தவறுதலாக விளங்கப் படுத்தியிருக்க வேண்டும். இல்லையெனில் கட்சியின் நீண்டகால உறுப்பினர் என்ற வகையில் பொலிஸ் அத்தியட்சகர் மஜீத் அவர்களுக்கே குறிப்பிட்ட பாராளுமன்ற ஆசனம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. இவர் அம்பாறை மாவட்டத்தில் மேலும் முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கினை உயர்த்தி ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கினை இல்லாதொழிப்பார் என்பதே உண்மையுமாகும். இஸ்ஸதீன் அவர்களுக்கு பாராளுமன்ற ஆசனத்தை வழங்கியதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் தன்னைத்தானே தற்கொலை செய்துள்ளது.

சேகு இஸ்ஸதீன் அவர்கள் நல்லதொரு இலக்கியவாதி. அவர் இலக்கியத்தில் பெரும் செல்வந்தர். ஆனால், அரசியலில் பெரும் வங்குரோத்துக்காரர். அரசியலில் தனக்கிருக்கும் செல்வாக்கினை வெள்ளோட்டத்தில் விட்டு ஒன்றுக்கு மேற்பட்டதடவை மூக்குடைபட்டுப் போனவர். அவர் தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் எந்தக்கட்சியிலும் கட்சியின் கட்டுக்கோப்புடன் ஒருமித்துப் போனவர் அல்ல, அவர் முன்னாள் முஸ்லிம் காங்கிரசின் தவிசாளர். அவருடைய மொழியில் சொல்லப்போனால் முஸ்லிம் காங்கிரஸின் இரண்டாவது தலைவர். கலைக்கப்பட்ட வட, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர். முன்னாள் முஸ்லிம் கட்சியின் ஸ்தாபகர். என்னுடைய மொழியில் சொல்வதென்றால், இன்னும் இரண்டொரு மாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர். அவர் அரசியல் ரீதியாக தேடிக் கொண்டது எல்லாம் "முன்னாள்" என்ற பட்டங்களேயாகும்.

சேகு இஸ்ஸதீன் அவர்களுடைய அரசியல் ரீதியான மனோநிலையானது தற்போதாவது மாற்றப்பட வேண்டப்பட-வேண்டும். தன்னிடம் இருப்பவர்கள் அரசியல் ரீதியாக தனக்கு மேல் வந்துவிடக்கூடாது என்ற மனப்பான்மை மிக்கவர். நன்றாகப் பேசுவார். ஆனால், நடவடிக்கைகளோ எதிராக இருக்கும், அரசியல் ரீதியாக தன்னுடைய எதிரிகளை கண்டித்து கவிமழையும் பொழிவார். அவருடைய நாகரீகமான கவிதைக்கு அவரால் முஸ்லிம் கட்சி பத்திரிகையில் எழுதப்பட்ட "பிர் அவ்னின் சந்ததிகள்" என்ற கவிதை ஒன்று மட்டுமே போதும்.

பாரசீக கவிஞனான "கலீல் ஜிப்ரானின்" கவிதைகளில் தனி விருப்பம் கொண்டவர் இஸ்ஸதீன் அவர்கள். ஆனால், கலீல் ஜிப்ரானிடம் இருக்கின்ற நல்ல தன்மைகள் ஒன்றுமேயேனும் இஸ்ஸதீன் அவர்களிடம் காணப்படாதது தான் மிகுந்த வேதனையாகும். ஆனாலும் இஸ்ஸதீன் அவர்களின் விடாமுயற்சியினைப் பாராட்ட வேண்டும். இலங்கையின் எந்தக் கட்சியிலாவது பாராளுமன்ற ஆசனத்தை பெறுவேன் என்ற சபதத்தை அவர் நிறைவேற்றியது மல்லாமல் அக்கரைப்பற்று முஸ்லிம்களுக்கு(?) இன்னுமொரு எம்.பி. பதவியினையும் பெற்றுக் கொடுத்து விட்டார்.

இஸ்ஸதீன் அவர்கள் உண்மையில் தனக்கு எம்.பி. பத்வி கிடைத்தமைக்கு அமைச்சர் அஷ்ரஃப் அவர்களுக்கே நன்றி செலுத்த வேண்டும். மாறாக, அதாவுல்லாஹ் அவர்கள் தனக்கு எம்.பி. பதவி கிடைத்தமைக்காக இஸ்ஸதீன் அவர்களுக்கே நன்றி செலுத்த வேண்டும். இறுதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொலிஸ்காரரான சேகு இஸ்ஸதீன் அவர்கள் அக்கரைப்பற்று முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவரா? அல்லது புதிய பொலிஸ் தத்துவத்தின்படி பிரச்சினைகளை தோற்றுவிப்பரா?

--அஹமட் ஹிலாம்

# தேசிய நூலக அபிவிருத்தி செயல் திட்டத்தில் தமிழ்ப் பாடசாலைகள் உள்ளடக்கப்படுமா?

அரசாங்கத்தால் நாடு முழுவதும் நான்காயிரம் நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி அபிவிருத்தி செய்யப்படவுள்ள பாடசாலை நூலகங்களை தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் அமைக்க வேண்டுமென கல்வியியலாளர்களால் கோரியுள்ளனர்.

அமைக்கப்படவுள்ள நான்காயிரம் நூலகங்களில் 25 மாவட்டங்களிலும் தலா ஒரு இணைய வசதியுள்ள பாடசாலைகளும் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் வட - கிழக்கு, மலையக தமிழ் மக்கள் செறிவாக வாழும் மாவட்டங்களில் தலா ஒரு தமிழ் மொழிமூல பாடசாலை அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலையகப் பாடசாலைகளில் அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி, பதுளை சரஸ்வதி கல்லூரி, மாத்தளை பாக்கிய மகளிர் கல்லூரி, இரத்தினபுரி இந்துக் கல்லூரி, கண்டி மாவட்டத்தில் பிரபல தமிழ்ப் பாடசாலைகளில் இணையத்துடன் கூடிய நூலக வசதி வழங்கப்படவேண்டும்.

மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ள ஏ -1 தர பாடசாலைகளுக்கு தலா ஒரு பாடசாலைக்கு புத்தகங்களுக்காக எழுபத்தையாயிரம் ரூபாவும், தளபாடங்களுக்காக இரண்டு இலட்சம் ரூபாவும், இணையத்திற்காக ஒரு இலட்சம் ரூபாவும், கட்டிடங்களுக்காக 4இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் 25 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏ - 2 தர பாடசாலைகள் 225அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இவற்றிற்கு தலா 75ஆயிரம் ரூபா புத்தகங்களுக்காக செலவிடப்படவுள்ளது.

பி- தர பாடசாலைகளுக்கு புத்தகங்களுக்காக 40ஆயிரம் ரூபாவும், தளபாடங்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும், 1750 பாடசாலைகளுக்கு செலவிடப்படவுள்ளது.

சி தர பாடசாலைகளில் புத்தகங்களுக்காக இருபதாயிரம் ரூபா 2000 பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், நூலக அபிவிருத்தி அதிகாரிகளாக நான்காயிரம் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 300 பட்டதாரிகள் நியமிக்கப்பட வேண்டிய இடத்தில் 560 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் அதிகமாக வாழும் மாவட்டங்களில் ஒன்றான நுவரெலியாவிற்கு இரண்டு தமிழ் மொழி மூல பட்டதாரிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். மேலதிகமாக நியமிக்கப்பட்டுள்ள 260பேரில் எத்தனை பேர் தமிழர்கள் என்பது குறித்த தகவல் எதுவும் இல்லை. மேலும் நான்காயிரம் பாடசாலை நூலகங்களில் ஆயிரம் நூலகங்கள் வீதப்படி தமிழ் பாடசாலைகளிலேயே அமைக்கப்பட வேண்டும். அபிவிருத்தி செய்யப்படவுள்ள 1520 நூலக கட்டிடங்களில் 755 தமிழ்ப் பாடசாலைகளில் உள்ளடங்க வேண்டும். புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள 480 கட்டிடங்களில் 120 கட்டிடங்கள் தமிழ்ப் பாடசாலைகளில் அமைக்கப்பட வேண்டும்.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஒரே தடவையில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இப்பாரிய நூலக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் தமிழ் பேசும் தரப்பினருக்கு, குறிப்பாக வரலாறு பூராவும் வஞ்சிக்கப்பட்ட மலையக தமிழ்ப் பாடசாலைகளுக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

நூலக அபிவிருத்தி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ள மலையக தமிழரில் பலர் ஆசிரியர்களாவர். தகுதி வாய்ந்த பட்டதாரிகள் இல்லாதவிடத்து உயர்தர வகுப்புகளில் தகைமை பெற்றோருக்கும் உரிய பயிற்சியளித்து அவர்களை நூலக அபிவிருத்தி அதிகாரிகளாகச் சேர்க்க வேண்டும்.

இவ்விடயத்தில் சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களினதும், கவனம் உடனடியாக ஈர்க்கப்பட வேண்டும் என்பதோடு ஊடகங்கள் உரிய வகையில் இதன் உண்மை வடிவங்களை இனம் கண்டு வெளிப்படுத்துவதினூடாக அக்கறையுள்ள சக்திகளின் கவனம் ஈர்க்கப்படல் வேண்டும்.

பிரமபுத்திரன்

# மலையகக் குறிப்புகள்

## அமைச்சர் என்ன சொல்கிறார்?

மஸ்கெலியா சென் ஜோசப் கல்லூரியில் பெப்.15ம் திகதியன்று வகுப்பறையில் ஒரு மாணவி மீது பாலியல் சேட்டை புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அட்டன் மாவட்ட நீதிமன்றத்தில் பத்தாயிரம் ரூபா பிணையில் வெளியே விடப்பட்டுள்ள பொகவந்தலாவையைச் சேர்ந்த பி. சந்திரசேகரன் என்ற ஆசிரியரை அட்டன் கல்வித் திணைக்களம், பொகவந்தலாவை கொர்கஸ்வேல்ட் இல.2 தமிழ் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்து பிரச்சினையைத் தீர்க்க முயன்றுள்ளது. இப்பாடசாலையில் ஏற்கெனவே சுருட்டலும், பாலியல் தொல்லைகளும் அதிகரித்ததன் காரணமாக விழிப்புற்றுள்ள பெற்றோரும், இளைஞரும் பெப்.28 அன்று சுவரொட்டிகள் ஒட்டி எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

மீண்டும் மார்ச் 6 அன்று அதே வகையில் எதிர்ப்பைக் காட்டியதோடு, பெருந்தொகையான பெற்றோர் பாடசாலைக்கு வந்து இவ்வாறான கேடிகளை பாடசாலைக்குள் விடவேண்டாம் என எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில், அதே பாடசாலை ஆசிரியரும், சந்தேக நபரின் நண்பருமான ஒருவர் சுவரொட்டி ஒட்டியவர் தன் கையில் அகப்பட்டால் "அம்மாவிடம் குடித்த பால் வெளியே வர அடிக்கப் போவதாக" சக ஆசிரியர்களிடமும், மாணவரிடமும் கூறித்திரிகின்றார்.

இவர் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் அடியாள் எனவும், இவரது அண்ணன் பொலிஸ் கான்ஸ்டபிள் எனவும், இதனை பயன்படுத்தியே இவரது மிரட்டல் நடப்பதாகவும் கூறப்படுகின்றது.

அமைச்சர் என்ன சொல்கிறார்?

## மகளிர் தின சுவரொட்டிகள்

மலையகப் பெண்கள், மாணவிகள், மீதான பாலியல் தொல்லைகள், வன்முறைகளை, மூடிமறைக்கவும் அமுக்கி வைக்கவும் முயலும் சக்திகளுக்கு எதிராக "புதிய பண்பாட்டு அமைப்பு" சுவரொட்டிப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதுடன், தோட்டம் தோட்டமாக மகளிர் விழிப்பூட்டல் பிரச்சாரத்திலும் ஈடுபடத் தீர்மானித்துள்ளது. இதன் முதல் கட்ட சுவரொட்டி இயக்கம் பொகவந்தலாவை பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மலையக பாடசாலைகளில் மகளிர் தினம், சிறுவர் தினம், மனித உரிமைகள் தினம் என்பன திட்டமிட்டு மறைக்கப்படுவதோடு மாணவர்கள் சிறைக்கைதிகளிலும் கேவலமாக நடத்தப்படுகின்றனர்.

ஆசிரியர்கள், தடி எடுப்பதற்குள்ள தம் உரிமையை நிலைநாட்ட போராடி வருகிறார்கள். பாவம் மாணவர்கள்!

## சகல நடவடிக்கைகளிலும் சமவுரிமை

பொகவந்தலாவ பெரிய எலிப்படை தோட்டம் சமூக விழிப்புணர்ச்சி பெற்று வருகிறது. பல்வேறு இளைஞர் குழுக்கள் தோன்றி சமூக விழிப்பூட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. எலிப்படை கீழ்ப் பிரிவில் புதிய பண்பாட்டு அமைப்பின் "மக்கள் கல்விப் பிரிவு" பெண்களுக்கு தோட்டத்தின் சகல நடவடிக்கைகளிலும் சமவுரிமை வழங்க வேண்டுமெனக் கோரி தோட்டக் குழுக்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

பெப். 6 சனிக்கிழமை கொர்கஸ் வேல்ட் இல. 2 தமிழ் வித்தியாலயத்தில் "சிறுவர் மாணவர்கள் உரிமைகளை பாதுகாத்தல்" என்ற பொருளில் கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெற்றது. இதில் நுவரெலியா பிரபல சட்டத்தரணியும் ரோட்டரிக்கழக தலைவருமான ஆர். ராசதுரை, அட்டன் சட்டத்தரணி ஏ.எஸ்.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். வணிக மாணவர் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நன்றி - நூலகத்திட்டம்



# பேரினவாதப் பெருந்தன்மை சமாதானத்தைத் தராது!

சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடங்கினாலே அதை எப்படியாவது முறியடித்து விட்டுத் தான் மறு வேலை என்று செயற்படுவதற்கென்று இங்கு சில சக்திகள் இருக்கின்றன.

தனிப்பட்ட முறையிலும், நிறுவன ரீதியாகவும் சமாதானம் வருவது தமக்குப் பாதகம் என்று கருதுகிற நபர்களும் நிறுவனங்களும், நேரடியாகவும் மறைமுகமாகவும் இவ்வேலையைச் செய்து வருகின்றன.

ஆயுத வியாபாரிகள், இடைத்தரகர்கள், அரசியல்வாதிகள், மதகுருமார் என்று இந்தஅணி பரந்து கிடக்கிறது. இந்தப்பரந்த அணிக்கு அதனிடம் நக்கிப் பிழைக்கிற, அரசியல்ரீதியாக மூளைச்சலவை செய்யப்பட்ட தொடர்புசாதனவியலாளளர்கள் போதியளவு பிரச்சாரத்தைச்செய்து வருகின்றனர்.

ஆயுத வியாபாரிகளும், இடைத்தரகர்களும் யுத்தத்தை ஆதரிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் அவர்கள் நேரடியான யுத்தப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதில்லை. இராணுவத்தை ஆதரிப்பது, இராணுவ நடவடிக்கைகளையே, பிரச்சினைக்கான தீர்வான பிரச்சாரங்களைக்கட்டவிழ்த்து விடக்கூடிய பிரச்சார சாதனங்களை நடாத்துவது, அவற்றுக்கு உதவுவது, சமூக ரீதியிலான பிரச்சார அமைப்புக்கள்உருவாதலை ஆதரிப்பது என்று அவர்களது நடவடிக்கைகள் தொடர்கின்றன.

பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம், சிங்கள வீரவிதான போன்ற அமைப்புக்கள், ஐலன்ட், திவயின பத்திரிகைகள் போன்றவை இத்தகைய ஆயுத வியாபாரிகள், தரகர்களுடன்தொடர்பு கொண்டவை என்றுநம்பகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை யுத்தத்தை ஒரு தீர்வாக பிரச்சாரப்படுத்துவது மட்டுமல்லா மல்,அதை நியாயப்படுத்தக் கூடிய விதத்தில் புலிகளுடன் சமாதானம் சாத்தியமில்லை. அரசியல் தீர்வு சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் இல்லையென்றாக்கி விடும் என்ற பிரச்சாரத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.



நடுநிலைத்தன்மை கொண்டதென நம்பப்படும் பத்திரிகைகளான சண்டே ரைம்ஸ், லங்காதீப பத்திரிகைகளுள் இச்சக்திகள் தீவிரமாக 'நயத்தாலும் பயத்தாலும்' ஊடுருவி தம் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றன.


புலிக்காய்ச்சலும், அரச எடுபிடி வேலை செய்தலில் பெருமைகாண விருப்பமும் கொண்ட ஒருசில தமிழ்ப் பத்திரிகையாளர்களும் கூட தெரிந்தோ தெரியாமலோ இந்தச் சக்திகளுக்கு துணை போகின்றனர்.

பேச்சவார்த்தை மூலம் புலிகளுடன் சமாதானத்திற்கு போகமுடியும் என்று 'கொஞ்சமேனும் நம்பாத' சந்திரிக்காவும், புலிகளுடன் சமாதானத்திற்கு போவதென்பது நாட்டை பிரித்துக் கொடுப்பதற்கு சமமானது என்று கருதும் ஜே.வி.பியும் 'சமாதான நிலை வேண்டும், யுத்தம் வேண்டாம் என்று கூறுவது யுத்தத்தை தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கருதும் யுத்த வாதிகளது செயலையே செய்து வருகின்றனர். அரசியல் எதிர்காலத்துக்கு சாதகமான காற்று எந்தப்பக்கத்திலிருந்து வீசுகிறது என்று பார்த்து அதற்கேற்ப தனது வியூகத்தை வகுக்க எண்ணி தடுமாறிக் கொண்டிருக்கும் ஐ.தே.க வுக்கும் கூட சமாதானப் பேச்சில் பூரண நம்பிக்கை இருப்பதாக சொல்ல முடியாது.

தமிழ் மக்களை இந்நாட்டின் பாரம்பரிய மக்களாக ஏற்றுக்கொள்ளத் தயாரற்ற பௌத்த மதபீடங்கள், அவர்களின் அரசியல் உரிமைகளைப் பேசுவது என்பது சிங்கள பௌத்தத்தினை நெருக்கடிக்குள்ளாக்கும் ஒன்று என்று கருதுகின்றன. இந்த நாட்டில் இனப்பிரச்சினையே கிடையாது, இருப்பதெல்லாம் வெறும் பயங்கரவாதப் பிரச்சினை. 'பிரபாகரன் ஒருபோதும் தமிழீழத்தை விட்டு இறங்கி வரப்போவதில்லை போன்ற கருத்துக்களை வெளியிட்டுவரும் மாதலுவாவே சோபித்த தேரோ உள்ளிட்ட அனைத்து மதபீடங்களும் யுத்தத்தை மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ ஆதரரித்து வருகின்றன. இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இப்போது சமாதானப் பேச்சுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கியிருக்கின்றன.

உண்மையில் இந்தச் சமாதானப் பேச்சு வெற்றி பெறும், இந்த நாட்டில் தமிழ் முஸ்லிம் மக்கள் இன்று அனுபவித்து வரும் துன்பங்கள் இல்லாது போகும் என்ற நம்பிக்கையுடன் அதை எதிர்பார்க்கின்ற சாதாரண மக்களை விட்டால் இன்று பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் யாருக்கும் அதில் நம்பிக்கை இருப்பதாக தெரியவில்லை.

நடைமுறைக்கு வரப்போகும் உத்தேச தீர்வுத்திட்டம் குறித்து மகா நாயக்கர்கள் எதிர்ப்புணர்வு கொள்ளக் கூடாது என்பதற்காக வழமைபோல அவர்களை சந்தித்து தாஜா பண்ணும் முயற்சியில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஈடுபட்டு வருகிறார். மல்வத்த, அஸ்கிரிய, அமரபுர, ராமான நிக்காயாக்களை சேர்ந்த மகாநாயக்கர்கள் சிங்கள இனவாத குழுக்களுடன் சேர்ந்து இப்போது நடைபெறத் தொடங்கியிருக்கும் முயற்சிகள் குறித்து ஜனாதிபதிக்கு எழுத்துமூலமான அதிருப்தியை தெரிவித்திருந்தனர்.



"இன்றைய சூழலில் புலிகளை ஆயுதப்பலத்தால் நசுக்கி அரச அதிகாரத்தை நிலைநாட்டியதன் மூலமே சட்டம் ஒழுங்கை கொண்டுவர வேண்டும்..... ஏனென்றால் இங்கு இனப்பிரச்சினை என்று ஒன்றும் கிடையாது இருப்பதெல்லாம் வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே" என்று இவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்திருந்தார்கள். கூடவே நோர்வே அரசுக்கும் புலிகளுக்குமிடையில் நெருக்கஉறவு நிலவுகிறதெனவும் இவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.

வெளிப்படையான பௌத்த சிங்கள இனவாதத்தை கக்கும் இந்த அமைப்புகளுடன் நியாயமான அரசியல் ரீதியான தீர்வுக்காக கருத்துப்போர் செய்ய வேண்டிய அரசாங்கம் பேராசிரியரின் ரூபத்தில் அவர்களை தாஜா பண்ணுவதில் ஈடுபட்டிருக்கிறது. அண்மையில் அவர்களை சந்தித்து "சிங்கள மக்களுக்கோ பௌத்தத்துக்கோ பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமும்" இத்தீர்வில் இருக்கப்போவதில்லை என்று உறுதியளித்துள்ளார்.

இந்த மாதிரி மகாநாயக்கர்களை தாஜா பண்ணிப் பண்ணி கடந்த காலம் முழுவதும் யுத்தத்தைத் தவிர வேறெதையும் செய்ய முடியாத நிலையில் இலங்கை அரசாங்கங்கள் இருந்து வந்திருக்கின்றன.

தீவிர எதிரி நிலைப்பாட்டிலுள்ள வரிகளைச் சமாதானப்படுத்த இந்த நாட்டிற்கு தீர்வை ஒருபோதும் கொண்டுவந்துவிட முடியாது. இதுவெறும் இனப்பிரச்சினையை வைத்து காலம் கடத்தவும், அரசியல் பிழைப்பு நடத்தவுமே பயன்படும்.

ஆயினும் அதுதான் இந்த நிமிடம் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சின் அடிப்படையே பரஸ்'பர விட்டுக்கொடுப்பில் தான் தங்கியுள்ளது. அத்தகைய விட்டுக்கொடுப்பில்லாமல் ஒருபக்கம் மட்டும் விட்டுக்கொடுப்பதற்குப் பெயர் சமாதானம் அல்ல. அதற்குப் பெயர்தான் அடிமைத்தனம். அடிமைத்தனம் மூலம் வருகின்றது சமாதானத்திற்கு இந்த நாட்டின் தமிழ் முஸ்லிம் மக்கள் தயாராக இருந்திருந்தால், இன்று இனப்பிரச்சினை என்று ஒன்று இருந்திருக்காது. தேரர்கள் சொல்வதுபோல் சிலவேளை-சாம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைகாரர்கள் போன்ற - பயங்கரவாதிகளின் பிரச்சினைகள் மட்டும் இருந்திருக்கலாம்.

ஆனால், இந்த விடயம் பற்றி அரசாங்கம் புரிந்துகொள்ள தயாரில்லாமல் இருக்கிறது. "எந்தவொரு அரசாங்கமும் தமிழர்களுக்கு வழங்கும் என்று கனவு காண முடியாத" தீர்வைக் கொண்ட அதிகாரப் பகிர்வுத் திட்டம் தம்மிடம் உள்ளது என்று பார் ஈஸ்ரேன் எக்கானமிக்ஸ் றிவியூவுக்கு அளித்த பேட்டியொன்றில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அரசாங்கங்கள் வழங்குகின்ற கனவு தமிழ் மக்களிடம் அற்றுப் போனமையினால் தான் இனப்பிரச்சினை ஆயுதப்போராட்ட வடிவம் எடுத்தது. தமது உரிமை என்பது யாரும் போடுகிற பிச்சை அல்ல என்ற சுய மரியாதை உணர்வுதான் 'எமது உரிமைகளை நாம் எடுத்துக்கொள்வோம்' என அவர்களைப் போராட்டக் களத்தில் இறங்க வைத்தது.

இப்போது கிடைக்கப்போகிற தீர்வு ஒன்றும் அரசாங்கம் தரப்போகிற - சந்திரிக்காவின் 'தாராள மனது' காரணமான பிச்சை அல்ல. அது அவர்களின் இவ்வளவு-காலப் போராட்டம், தியாகம் என்பவற்றில் கிடைக்கிற வெற்றி.

இந்த வெற்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளில் குறிப்பிடத்தக்களவு விடயங்களையாவது தீர்க்காவிட்டால், அதை ஏற்றுக்கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. இவ்வளவுகாலம் நடாத்திய போராட்டத்திற்கும், சிந்திய இரத்தத்திற்கும் என்ன அர்த்தம்?

ஜனாதிபதி அவர்கள் மற்றைய அரசாங்கங்கள் பற்றி பேசாமல் பிரச்சினையைத் தீர்க்க எது தேவையோ அதை கொடுப்பது பற்றி பேசுவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

ஜனாதிபதி போல் இவ்வாறு பேசுபவர்களின் பெருந்தன்மை 'பேரினவாதப் பெருந்தன்மை' என்ற அர்த்தத்தினை மீறி தமிழ் மக்கள் சந்தோஷப்படும் விதத்தில் விளங்கிக்கொள்ளப்படப்போவதில்லை.

இத்தகைய 'பேரினவாத பெருந்தன்மை' இரக்கம் காட்டி வழங்கும் தீர்வு ஒருபோதும் இனப்பிரச்சினை தீர்வுக்கு அடிப்படையான இனங்களுகிடையேயான சமத்துவத்தையோ பரஸ்பர கௌரவத்தையோ கொண்டிராதுதால் வெற்றிபெறப் போவதில்லை.

மொத்தத்தில் சமாதான முயற்சி தொடங்கியது தொடங்க முதலே அதை குழிதோண்டிப் புதைக்கும் செயல் பல மட்டங்களிலும் நடந்துகொண்டிருக்கிறது.

இந்த பேச்சுவார்தையும் இன்னொரு கப்சாவாக - காலத்தை இழுத்தடிக்க நடாத்தும் நடவடிக்கையாக இருந்துவிடக் கூடாது என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பு.

புலிகள் சமாதானத்திற்கு வரமாட்டார்கள் எனக்கூறும் தமிழ் பத்திரிகையாளர்கள் அரசுத் தலைவரிடமும் அந்த சமாதான உணர்வு இல்லை என்பதை புரிந்துகொள்வது நல்லது.

நோர்வே மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேசுகிற நடைமுறை இன்னமும் வெளிப்படையாக தொடங்க முன்னரே புலிகளுடனான பேச்சில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி. தனது அரசியலை பாதுகாத்துக்கொள்ள அது அவருக்கு அவசியமாக இருக்கலாம். ஆனால், வெற்றி பெறாது என்ற அடிப்படையில் முயற்சியில் இறங்குவது ஒன்றில் முயற்சியில் அக்கறையீனத்தை அல்லது முயற்சியை தோற்கடிப்பதில் அக்கறையை உண்டுபண்ணும்.

இரண்டுமே மக்களின் நலனுக்கு உகந்தவை அல்ல.

ஜனாதிபதி இதுபற்றி யோசிப்பது நல்லது!

**நாசமறுப்பான்**

# வவுனியா: மீண்டும் வந்திருக்கிறது வரி! செலுத்தாதவர்கள்......

பொதுமக்களிடமிருந்து தமிழ்க்குழுக்கள் வவுனியா பகுதிகளில் வரி அறவிடும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் மீண்டும் வெளியாகியிருக்கின்றன. புளொட் இயக்கத்தினரே, வவுனியா நகரில் விற்பனைப் பொருட்களுக்கு வரி அறவிட்டு வருவதாக, பொதுமக்களிடமிருந்தும், வியாபாரிகளிடம் இருந்தும் பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக அவ்வியக்கத்தின் வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் (மோகன்) க.சந்திரகுலசிங்கம் விடுத்துள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இப்போதைய நிருவாகத்தால் உருளைக் கிழங்கு, தேங்காய், சீமெந்து, தேங்காயெண்ணெய் போன்ற பொருட்களுக்கோ, வெறெந்த விற்பனைப் பொருட்களுக்கோ வரி அறவிடுவதில்லை என்பதை இதன் மூலம் பொதுமக்களாகிய உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்

பொதுமக்களின் நலனை முன்னிலைப்படுத்தியும், எமது பிரதேசத்தின் வளர்ச்சியை முதன்மைப்படுத்தியும் செயற்பட்டு வரும் நாம் பொருட்களுக்கு வரி அறவிடுவதை வன்மையாகக் கண்டனம் செய்கின்றோம்.

வவுனியா நகரர்ட்சிக் கழகத்தினரால் ஏலம் விடப்பட்ட மீன் விற்பனை நிலையம், குத்தகைக்காரர் மூலம் சட்டப்படி ஏலம் எடுக்கப்பட்டு மீன் சந்தைப்படுத்துதல் நடைபெற்று வருகின்றது.

கடந்த வருடத்தில் குத்தகைதாரரால் கிலோவிற்கு 10 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டிருந்த குத்தகைப்பணம் இவ்வருட நடைமுறையில் 5 ரூபாவால் குறைக்கப்பட்டும், குறைந்த விலையில் மீன் சந்தைப்படுத்துவதற்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையைத் தவிர, எமது பெயரைப் பயன்படுத்தி பொருட்களுக்கு வரி அறவிடுவோரை நாங்கள் இனங்காண வேண்டிய நிலையில் உள்ளதால், பொது மக்களாகிய நீங்கள்

இவ்விடயத்தில் ஒத்துழைத்து, தவறானவர்களை இனங்கண்டு எமது கவனத்திற்குக் கொண்டு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்" என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள எந்தப்பாகத்திலும் இல்லாத அளவிற்கு காய்கறி தொடக்கம் அத்தனை பொருட்களினதும் விலைகள் ஒப்பீட்டளவில் வவுனியாவில் அதிகமாக இருக்கின்றன. இங்குள்ள தமிழ்க் குழுக்கள் தம்மிஷ்டப்படி, வர்த்தகர்களிடம் பணம் அறவிடுவதும், வர்த்தகப்பண்டங்களைத் தமது கட்டுப்பாட்டினுள் வைத்து வர்த்தகர்கள் அனைவரும் தம்மிடமிருந்தே பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கடுமையாக நடந்து கொள்வதும் முக்கிய காரணமாக இருக்கின்றது.

இதேவேளையில், கொழும்பில் இருந்து லொறிகள் மூலமாகக் கொண்டு வரப்படுகின்ற பொருட்கள் ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியில் இறக்கி இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டு மீண்டும் லொறிகளில் ஏற்றுவதற்காக அறவிடப்படுகின்ற 500 ரூபா கட்டணம், மற்றும் வவுனியா லொறிகளை இலக்கு வைத்து, கொழும்பு - வவுனியா நெடுஞ்சாலையில் தென்பகுதிகளில் காத்திருந்து கப்பமாகப் பணம் பறிக்கின்ற பொலிசாரின் செயற்பாடுகளும் வவுனியா நகரில் பொருட்களின் விலைகள் அதிகமாக இருப்பதற்குக் காரணமாக இருக்கின்றன.

பாதுகாப்புச் செயற்பாடு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாட்டிற்குக் கட்டணமாக வாகனச் சொந்தக்காரர்கள் செலுத்துகின்ற பணத்தை வர்த்தகர்கள் பொது மக்களிடமிருந்து அறவிடாமல் வேறு எந்த வழியில் ஈடு செய்வது என்று வாகனச் சொந்தக்காரர்கள் மட்டுமல்லாமல், வவுனியாவில் உள்ள சாதாரண ஓட்டோ சாரதிகள் கூட வினவுகின்றார்கள்.

வவுனியாவிலும் மன்னாரிலும் கூப்பன் அடிப்படையிலேயே எரிபொருட்கள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. டீசல், பெட்றோல், மண்ணெண்ணெய் என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே, பொதுமக்கள் தமது தேவைக்காகக் கொள்வனவு செய்ய முடியும்.

விடுதலைப் புலிகளுக்கு இந்த எரிபொருட்களைக் கடத்திச் சென்று பொதுமக்கள் கொடுக்கின்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகப் பாதுகாப்புப் பகுதியினரால் காரணம் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தைப் போலல்லாமல், வன்னிப்பகுதிகளில், விடுதலைப் புலிகளின் பிரதேசமும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமும், தொடர்ச்சியான வேலி அமைப்பைக் கொண்ட பாதுகாப்பு அரணின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு முன்னரங்க வேலி 24 மணித்தியாலமும், கூப்பிடு தொலைவுக்கு ஒரு பதுங்கு குழி (பங்கர்) என்ற ரீதியில் அமைக்கப்பட்டு, அடர்த்தியான கண்ணிவெடிப் பிரதேசம் என்பவற்றை உடையதாகப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்த பாதுகாப்பு வேலியைக் கடக்க விரும்புகின்ற காற்று கூட, அங்கு காவலில் உள்ள இராணுவத்தினருக்குத் தெரியாமல்,இராணுவ வேலியைக் கடக்க முடியாது. இந்த நிலையில் சாதாரண பொதுமக்கள் எரிபொருட்களை விடுதலைப் புலிகளுக்குக் கடத்திச் செல்கின்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், இறுக்கமான ஒரு தடை நடவடிக்கையை இராணுவத்தினர் அமுல் செய்துள்ளார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோக நடவடிக்கையும்: கொழும்பில் இருந்து வெடிகுண்டுகளும், வெடிப்பொருட்களும் வவுனியாவுக்குள் வந்துவிடக் கூடாது என்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு நடவடிக்கையைப் போல, கொழும்பில் இருந்து வவுனியாவுக்குப் பொருட்களை ஏற்றி வருகின்ற லொறிகளில் இருந்து பொருட்கள் முழவதையும் இறக்கி முழுமையாகச் சோதனையிடும் நடவடிக்கையும் உண்மையிலேயே பொதுமக்களை வருத்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கையென்றே எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நடவடிக்கைகளின் மூலம், வவுனியாவில் உள்ள வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் முடக்கப்படுகின்றன. பொதுமக்கள் கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இது இராணுவத் தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் விளைவாக இருக்கின்றது.

மறுபக்கத்தில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடப் புறப்பட்டவர்கள், தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பாடுபடுவதற்காக வீடுகளை விட்டு வெளியில் வந்தவர்கள் மேற்கொள்கின்ற வரி அறவிடும் நடவடிக்கைகளினால், தமிழ் மக்களின் வர்த்தக முயற்சிகள் மிக மோசமாகப் பின்தள்ளப்பட்டுள்ளன.

வவுனியாவில் எங்குமில்லாதவாறு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கும் இது காரணமாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல், வவுனியாவில் உள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கும் அச்சம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். இதனால், தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் தாங்கள் வர்த்தக நடவடிக்கைகளின் மூலம் ஈட்டிய பொருளாதாரத்தைத் தமது சமூகத்திற்குப் பயன்படத்தக்க வகையில் வர்த்தக நடவடிக்கைகளில் மேலும் ஈடுபடுத்தி, தொழில் விருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பெரிய தடையாக இந்த வரி அறிவிடுதல், பண வசூல் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. இது தமிழ் மக்களுக்குத் தமிழர்களாலேயே செய்யப்படுகின்ற பாதகமான நடவடிக்கையாகவே அமைந்துள்ளது.

வர்த்தகர்கள் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் பொருள் ஈட்டி, தமது குடும்பங்களை வளப்படுத்துவதற்காகச் சென்ற இளைஞர்கள் தமது குடும்பத்தினரைப் பார்ப்பதற்கோ, அல்லது அவர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற திருமணங்களைச் செய்துகொள்வதற்கோ, வவுனியாவுக்கு - தமது சொந்தப் பிரதேசத்திற்கு வருவதற்குத் தடையாக இந்த பணம் அறவிடும் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

வவுனியா இராணுவ கட்டுப்பாட்டுப்பிரதேசமாக இருக்கின்றது. இங்கு சிவில் நிர்வாக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. பொலிசார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள். நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிவில் அதிகாரிகள் போர்ச் சூழல்களுக்கே உரிய செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அதேவேளையில், அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றார்கள்.

இருப்பினும், காட்டு மிராண்டித்தனத்திற்கு ஒப்பான நடவடிக்கைகளும் இவற்றிடையே இழையோடியுள்ளன.

புளொட் இயக்கத்தினர் தமது துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளது போல, இப்போது அவர்கள் மீன்விற்பனை வரியைக் குறைத்துள்ளார்கள் என்பது உண்மை தான். ஆனால் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மீன்வியாபாரிகளிடமிருந்து சுளையாகப் பணம் அறவிடப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதனால், வரி அறிவடுவது நிறுத்தப்பட்டு, ஒரு கிலோ மீனுக்கு 5 ரூபா மட்டுமே வரியாக அறிவிடப்பட்டாலும், மீனின் விலை 140 தொடக்கம் 160, 180 ரூபாவாகவே

இருக்கின்றது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை போலிருக்கின்றது.

வவுனியாவில் மட்டுமே இருந்து மீன் விற்பனை வரி இப்போது மாங்குளம் நேரியகுளம் பகுதிக்கும் சம்பந்தப்பட்டவர்களினால் விஸ்தரிக்கப்பட்டுள்ளது, புளொட் இயக்கத்தினர் தமது துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளது போல, அங்கேயும் சட்டப்படி, அப்பகுதியின் பிரதேச சபை மீன் சந்தைப்படுத்துவதை ஏலத்தில் குத்தகைக்கு விட்டுள்ளது. சட்ட முறைப்படி ஒரு குத்தகைக்காரர் அதனை ஏலத்தில் எடுத்து மீனை சிறு வியாபாரிகளுக்கு மொத்த விலைக்கு

விற்று வருகின்றார். இதனால், அப்பகுதிக்கு வெளியூர்களில் இருந்து சைக்கிள்களில் மீனைக் கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்ற மீன்வியாபாரிகளின் மீன் வியாபாரமும் சம்பந்தப்பட்டவர்களினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி பொதுமக்களின் வயிற்றிலும் இப்போது அடி விழுந்துள்ளது. ஏனென்றால், வவுனியாவைப் போல, அங்கேயும் மீனின் விலை இப்போது 140 ரூபாவுக்கு மேல் உயர்ந்து விட்டது. முன்னர் அப்பகுதிகளில் அதிகூடிய விலையாக 100 அல்லது 110 ரூபாவுக்கு நல்ல ரக விலை உயர்ந்த மீன்வகைகளை மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடியதாக இருந்தது.

வவுனியாவைப் பொறுத்த மட்டில், கிழங்கு இப்பொழுது 28 ரூபாயில் இருந்து 32. 33 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. கொழும்பில் 4 ஆம் குறுக்குத் தெருவில்

இந்தியாவில் இருந்தும், பாகிஸ்தானில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு 19 ரூபாவாகவும், 22 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. அதேவேளையில் அரசாங்க நிறுவனமாகிய மொத்த விற்பனவு நிலையம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கிழங்கு ஒரு கிலோ 33 ரூபாவாக மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அறிவித்துள்ளது.

வவுனியா சந்தைகளிலும், கடைகளிலும் விற்பனை செய்யப்படுகின்ற கிழங்கு இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கா அல்லது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கிழங்கா என்பதை, உருளைக்கிழங்கின் மொத்தவிற்பனவைக் கட்டுப்படுத்துவதாகப் பொதுமக்களாலும், வர்த்தகர்களாலும் கூறப்படுகின்ற டெலோ இயக்கத்தினர் தான் தெரிவிக்க வேண்டும்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்குதான் வவுனியாவில் விற்பனை செய்யப்படுகின்றதென்றால், சந்தோஷான விடயம். ஏனென்றால் மொத்த விற்பனவு நிலையத்தின் விலைக்கும் அதற்கும் குறைந்த விலைக்கும் வவுனியாவில் உருளைக்கிழங்கை மக்கள் வாங்கக் கூடியதாக இருக்கின்றதே.

ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு தான் வவுனியா சந்தைகளிலும், கடைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன என்றால், கிழங்கின் மொத்த விலையில் இருந்து ஒரு கிலோவுக்கு 9 ரூபாவில் இருந்து 11 ரூபா வரையில் வவுனியா பிரதேச மக்கள் ஏன் அதிகமாகக் கொடுத்து வாங்க வேண்டியுள்ளது? ஏன் இந்த நிலை?

தேங்காயின் விலையும் அப்படித்தான். வவுனியாவுக்கு வெளியில் ஒரு தேங்காய் 7ரூபாய் தொடக்கம் 9 ரூபாவுக்குள் வாங்கலாம் என்றால், இங்கு 12, 13 ரூபாவுக்குக் குறைவான

விலையில் தேங்காய் வாங்க முடியாது. வவுனியா ஒரு விவசாயப் பிரதேசம். அப்படியிருந்தும், வவுனியா நகரில் ஒரு செவ்விளநீரின் விலை 12 ரூபா. ஏன் இந்த அநியாயம்? இதனைக் கேட்பார் யாருமில்லையா? இதே போலவே, சீமெந்து, தேங்காய் எண்ணெய் என்பவற்றின் விலைகளும் இருக்கின்றன.

வவுனியா நகருக்குக்கிழக்கே, சுமார் 2 கட்டை தூரத்தில் வெளிக்குளம் என்னும் கிராமம் இருக்கின்றது. அதனையடுத்து, அம்பலாங்கொடல்ல என்ற கிராமம் இருக்கின்றது. அங்கு ஆரி கடை என்றொரு கடை இருக்கின்றது. அதில் வெளியிடங்களில் உள்ளது போல, சாதாரண விலைகளில் சகல பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம். இதேபோல, வவுனியாவுக்குத் தெற்கே, கண்டி வீதியில் சுமார் இரண்டு கட்டை தூரத்தில் மூன்றுமுறிப்பு என்னுமிடம் இருக்கின்றது. அங்கேயும் இவ்வாறு குறைந்த விலைக்குப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

அப்படியானால், ஆரிகடைக்கும், மூன்றுமுறிப்புக்கும் இடைப்பட்ட வவுனியா பிரதேசத்தில் வசிக்கின்றவர்கள் மாத்திரம் பொருட்களுக்கு அதிக விலைகொடுத்து வாங்கி சீவியம் நடத்துவதற்கு அவர்கள் அனைவரும் இளிச்சவாயர்கள் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

- ரீ.செந்தூரன்

நன்றி - நூலகத்திட்டம்



யுத்த நிலவரம்:

# கன ரக ஆயுதப் புலிகள் கொழும்பில் அதிரடி!

# தலைநகரப் பாய்ச்சலில் தலை தப்பிய இலக்கு!

புத்தாயிரமாம் ஆண்டிற்கான பாதுகாப்பு அமைச்சிற்குரிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான குழு நிலை விவாதமும், மார்ச் மாதத்திற்கான மாதாந்த அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணைக்கான வாக்கெடுப்பும் பாராளுமன்றத்தில் காரசாரமாக மார்ச் 10ம் திகதி முழு நாழும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த த சில்வா, முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலக உயர் அதிகாரிகள் உள்ளிட்ட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரும் சபையில் அன்று பிரசன்னமாகி விவாதத்தைச் செவிமடுத்துக் கொண்டிருந்த அதேவேளை, புலிகளின் தலைநகர் கெரில்லாத் தாக்குதல் அணிகள் பாராளுமன்ற அமர்வின் பின்னர் அடுக்காக வெளியே வரும் வாகனத் தொடர் அணிகளை அழித்தொழிக்கும் தமது செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சிற்கான விவாதம் என்பதால் நிச்சயமாகவே உயர் பாதுகாப்பு, அரசியல் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வர் என்று முன்கூட்டியே தெரிந்து கொண்டு தான் அவர்கள் திட்டமிட்டே அத் திகதியைத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள் போல் படுகிறது.

புதிய பாராளுமன்றத்தில் இருந்து சுமார் இரண்டு மைல்கள் மேற்குத் திசையில் தான் பொரள்ளை - இராஜகிரிய சுற்று வட்டச் சந்தி அமைந்திருக்கிறது. பாராளுமன்றத்தில் இருந்து கொழும்பு நோக்கி ஸ்ரீ ஜயவர்தனபுர - கோட்டே பிரதான வீதி வழியாக வரும் இவ் வாகனத் தொடர் அணிகள் இச் சுற்று வட்டத்தினைக் கடந்து, காசல் வீதிப் பெண்கள் பிரசவ மருத்துவ மனை வீதியூடாகவே கொழும்பைச் சென்றடைவது வழக்கம். பொரளை - இராஜகிரிய சுற்றுவட்டச் சந்திக்கு இடப்புறத்தில் இன்னொரு ஆயுர்வேத மருத்தவ மனையும் அமைந்திருக்கிறது.

பொரளை காசல் வீதியையும், பழைய கோட்டே வீதியையும் இணைக்கும் இச் சுற்று வட்டத்தின் வடக்குப் புறத்தில் பற்றைச் செடிகளாலான காடு மண்டிப் போயிருக்கும் சிறு மண் கிடங்குகள் போன்று பாவனைக்கு உதவாத சிறு பகுதி ஒன்று பாதைக்கு அண்மித்ததாகவே காணப்படுகிறது.

இப் பகுதியைத் தான் புலிகளின் " தலை நகர்த் தாக்குதல் அணிகள் " மறைந்து இருந்து தாக்குவதற்கு வசதியான நிலையெனத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

பாராளுமன்ற அமர்வுகள் இடம் பெறும் காலங்களில் கோட்டே - ஸ்ரீ ஜயவர்தன்புர பெரு வழி நெடுகிலும் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய விஷேட பொலிஸார் ரோந்துக் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது வழக்கம். ஒவ்வொரு 50 - 75 யார் இடைவெளிகளில் சங்கிலித் தொடர் போன்று இவ் ஆயுதப் பொலிஸார் கடமையில் காணப்படுவர். இதைவிட வழமையான வீதித் தடைச் சோதனைச் சாவடிகளில் இவ் வேளைகளில் கடுமையான நடைமுறையும் கையாளப்படும். பொரளை - இராஜகிரிய சுற்று வட்டச் சந்தியில் இருந்து சுமார் 50 யார் தொலைவில் கிழக்குப் புறமாக விஷேட அதிரடிப் படை( எஸ். ரீ. எவ். ) சோதனைச் சாவடி ஒன்றும் இருக்கிறது. அநேகமாக இவ் வழியால் செல்லும் தனியார் வாகனங்கள் எல்லாம் இச் சாவடியில் வைத்துச் சோதனை செய்யப்பட்ட பின்னரேயே மேற்கொண்டு பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படும்.

இவை யாவற்றையும் அறிந்து கொண்ட பின்னரும் கூடப் புலிகள் அவ் இடத்தைத் தாக்குதலுக்கான மறைவிடமாகத் தெரிவு செய்திருந்தது மட்டுமல்லாது, கச்சிதமாக அங்கு தாம் திட்டமிட்டவாறு கனரக ஆயுதங்கள் சகிதம் வந்து இறங்கி, இலக்கு வரும் வரை யாருக்குமே தெரியாமல் காத்திருந்த விடயம் படைத் தரப்பினர் மத்தியில் மட்டுமல்ல, வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளின் மத்தியிலும் வியப்புடன் கூடிய திகிலை உருவாக்கியிருக்கிறது. இராணுவப் பாதுகாப்புத் துறையினரைப் பொறுத்த வரை இவர்கள் இந்த அதிர்ச்சியின் பிடியில் இருந்து இன்னும் மீளவில்லை என்றே கூற வேண்டும்.

அதி உயர் பாதுகாப்பு நடைமுறைகளின் கெடுபிடியில் துவண்டிருக்கும் தலை நகரிற்குத் தாக்குதல் திட்டம் பற்றியோ அன்றி இத் தாக்குதல் நடைபெற இருப்பது பற்றியோ அது தானாகவே வெடிக்கும் வரை தெரியாமல் இருந்திருப்பது தலைநகரின் முழுப் பாதுகாப்பையுமே கேள்விக்குள்ளாக்கி இருக்கிறது.

தாக்குதலின் பின்னர் அங்கு காணப்பட்ட கள நிலவரப்படியும், இராணுவ மூத்த அதிகாரிகளின் கருத்துப்படியும் 08 - 10 விடுதலைப் புலிப் போராளிகள் இத் தாக்குதலில் நேரடியாக ஆயுதங்களுடன் பங்கேற்று இருப்பதாகக் கருதப்படுகிறது.

06 இற்கும் மேற்பட்ட கரந்தடிப்படை வீரர்கள் நவீன றொக்கற் கிறனைற் ஏவு ஆயுதங்களுடனும், றொக்கற் புறொப்பெல்ட் கிறனேட் (சுழஉமநவ ிசழிநடடநன புசநயெனந) சிறிய ரகத் தாங்கி எதிர்ப்பு ஏவு ஆயுதங்கள் மற்றும் ஜீ, பீ. எம். ஜீ., ரீ - 56 ரக றைபிள்கள் போன்றவற்றுடன் இப் புதருக்குள் நிலை எடுத்துப் பதுங்கி இருந்து வரும் வரை தயார் நிலையில் எதிர்பார்த்துக் கொண்டிருந்து இருக்கின்றனர். இதற்கு முன்னதாக இப் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களின் கண்களில் எல்லாம் மண்ணைத் தூவி விட்டுப் பாதை ஓரத்தில் நின்றிருந்த மரத்தடியில் ஏழு தொடர்ச்சியாக வெடிக்கக் கூடிய கிளேமோர் சைற் சார்ஜர் வாகனக் கண்ணி வெடிகளையும் பொருத்தி வைத்துள்ளார்கள். இவை இவ்வாறு இருக்கப் பதுங்கியிருந்த புலி உறுப்பினர்களில் இருவர் அருகில் இருந்த வீடு ஒன்றில் ஆள் நடமாட்டம் இல்லாததை அவதானித்து விட்டு அங்கும் மறைந்து இருந்திருக்கின்றார்கள். இங்கு தான் கடைசி நிமிடம் வரை மூடி மறைத்து வைத்திருந்த அவர்களது தாக்குதல் திட்டம் 'அம்பலமாகியது. அதாவது தற்செயலாக அங்கே வந்த அவ் வீட்டின் உரிமையாளர் தனது வீட்டு வளவினுள் இனம் தெரியாத நீல நிற மேல் அங்கி அணிந்த இரண்டு இளைஞர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவதை அவதானித்து விட்டு, அண்மையில் இருந்த சோதனைச் சாவடியில் கடமை ஆற்றிக் கொண்டிருந்த பொலிஸாரிடம் சென்று இது பற்றி முறையிட்டு உள்ளார்.

உஷாராகிய அதிரடிப் படையினர் அவ் இடத்திற்கு விரைந்த போது தான் மோதல் வெடித்தது. அவ் இடத்தில் நின்றிருந்த நகர வாசிகளின் தகவல்களின்படி இரு சாராருக்கும் துப்பாக்கி மோதல் ஆரம்பமாகிய சமயம் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் சிவிலியன்களைப் போன்று வந்து இறங்கியதாகவும், அவர்களில் ஒருவர் தன்னை வெடிக்க வைத்ததாகவும் கூறப்படுகிறது.

இது மேற்கொண்டு தமது தாக்குதல் திட்டம் நிறைவேறப் போவதில்லை என நன்கு உணர்ந்த புலிகளின் கெரில்லா வீரர்கள் தாக்கி விட்டுத் தப்பி ஓடும் தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டனர். துப்பாக்கி மற்றும் ஆர். பீ. ஜீ. தாக்குதல்கள் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது. பொலிஸாரின் தகவல்களின்படி இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட மூன்று புலிகளும், ஆறு பொலிஸ் அதிகாரிகளும் சண்டையில் நேரடியாக ஈடுபட்டதன் காரணமாகக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட எஞ்சிய சிவிலியன்கள் பரஸ்பர துப்பாக்கிச் சமரின் இடையில் அகப்பட்டதன் காரணமாக அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

அவ் இடத்திலும், அதன் சுற்றுப் புறங்களிலும் நின்றிருந்த பொதுமக்கள் தற்காப்புக்காக நிலத்தில் படுத்து நிலை எடுத்துக் கொண்டதால் பாரிய அளவு அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

இன்னொரு தற்கொலைக்



குண்டுதாரி - இவர் புதர்களுக்குள் பதுங்கியிருந்தார் - தன்னை வெடிக்க வைக்க முன்னரே படையினரின் சூடுபட்டு ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். பின்னர், இவரது தற்கொலை அங்கி அவ்விடத்திற்கு விரைந்த குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

இதற்கிடையில் ஆர். பீ. ஜீ. தாக்குதல்களை நடத்தியபடி பொரளைப் பக்கமாகப் பின்வாங்கிய நான்கிற்கும் மேற்பட்ட கெரில்லாக்கள் அங்கிருந்த புகையிரதக் கடவையூடாகத் தப்பிச் சென்று சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்து உள்ள வனாத்தமுல்ல, சேர்ப்பன்ரைன் அரச தொடர் மாடிப் பகுதியின் " சீ " கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் ஏறிக் கொண்டனர்.

வெள்ளிக்கிழமை( மார்ச் 10) மாலை 06.15 மணியளவில் அங்கே நுழைந்த இவர்களை மறுநாள் காலை 05.35 மணியளவில் இராணுவத்தினரின் விஷேட பயிற்சி பெற்ற கொமாண்டோ(அதிரடி) அணியினர் முற்றுகையிட்டனர். ஐவரில் ஒருவர் கொமாண்டோ படையினர் ஒருவரின் சினைப்பர்( குறி பார்த்துச் சுடுதல் முறை) தாக்குதலில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அது வரை அங்கிருந்த பொது மக்கள் எவரிற்குமே தீங்கேதும் விளைவிக்காத இவர்கள் கொமாண்டோப் படையினருடன் சிறு துப்பாக்கி மோதல்களில் மட்டுமே ஈடுபட்டனர். ஆனாலும் கொமாண்டோப் படையினர் தம்மை அணுகு முன்னரேயே தம்மைத் தாமே குண்டு வைத்து அழித்துக் கொண்டனர்.

இவர்களின் சிதறிய உடல்கள் சேப்பன்ரைன் மாடிக் கட்டிடத்தின் உடைந்த பகுதிகளில் காணப்பட்டன. முன்னர் வனாத்தமுல்ல விமானப் படை முகாமில் கொழும்பு இராணுவக் கட்டளையிடும் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் நிஹால் மாரம்பே தலைமையில் கூடிய இராணுவ உயர் அதிகாரிகள் மேற்படி கொமாண்டோ உத்தியினைக் கையாள முடிவெடுத்திருந்தார். ஆனாலும் புகலிடம் தேடி ஒளிந்திருந்த புலி வீரர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டதாய் கொமாண்டோ அணியினர் அதிகம் செயலில் ஈடுபடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

தாக்குதல் முடிவடைந்து ஒரு வாரகாலம் முடிவடைந்ததும், அதன் பலமான எதிரொலிப்புகள் இன்று வரை இராணுவ - அரசியல் உயர் மட்டங்களில் ஓங்கி ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றன.

இங்கு இன்னொரு முக்கிய அம்சம் என்னவென்றால் புலிகள் இத் தாக்குதலில் வட - கிழக்கு யுத்த முனைகளில் கடைப்பிடிப்பது போன்று ஒன்றிற்கு மேற்பட்ட யுத்த தந்திரோபாயங்களை ஒன்றாகவும்,



லாவகமாகவும் கையாண்டிருக்கிறார்கள். அதாவது, கிளேமோர் தாக்குதல், தற்கொலைக் குண்டுத் தாக்குதல், மறைந்திருந்து தாக்குதல், நீண்ட தூர ஏவு ஆயுதங்களினால் தாக்குதல் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட தாக்குதல் முறைகளை ஒன்றாகச் சேர்த்துக் கையாண்டிருக்கின்றார்கள். இது இலங்கைப் பாதுகாப்பத் துறையினரை, விஷேடமாக இராணுவத்தினரைப் பொறுத்தவரை புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்திலேயே அவர்கள் முகங் கொடுத்திருக்கும் மிக முக்கியமான அச்சுறுத்தல்.

இது தொடர்பாக மூத்த இராணுவ உயர் அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்ட போது, புலிகள் இத் தாக்குதலுக்கான ஆயுதங்களை எவ்வாறு தலை நகருக்குள் இவ்வாறான பாதுகாப்பு நடைமுறைகளைத் தாண்டிப் பெற்றுள்ளார்கள், எங்கெல்லாம் தங்கியிருந்து இத் தாக்குதலுக்குத் திட்டமிட்டார்கள், அவர்களின் உண்மையான இலக்கு என்ன, யாரெல்லாம் இதன் பின்னணியில் இருக்கின்றார்கள், அவர்களது தொடர்பாடல் வலையமைப்பு (கொமியூனிகேஷன் நெற்வேக் ) இன்னும் தலை நகரிற்குள்ளேயே இருக்கிறதா, ஆயுத வழங்கல் அல்லது பரிமாற்றம் எவ்வாறு நிகழ்ந்துள்ளது என்பதை எல்லாம் அறிய விஷேட இராணுவ விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பாதுகாப்புத் தடுப்பு முறைகளினால் தப்பிப் போன இது போன்ற தாக்குதல்கள் இனிமேலும் இடம் பெறாது இருப்பதை உறுதி செய்ய மேலும் சில விஷேட பாதுகாப்பு நடைமுறைகள் கவனத்திற் கொள்ளப்பட இருப்பதாகவும், அந்த அதிகாரி கூறினார்.

எது எப்படி இருப்பினும், காலத்திற்குக் காலம் புலிகள் அணியினர் தமது தாக்குதல் அணிகளையும், தந்திரோபாய முறைகளையும் நவீன மயப்படுத்தி, யுத்தப் பிரதேசங்களில் மட்டுமன்றி இதுபோன்று தலை நகரிலும் பாவித்திருப்பது படையினரின் அடி வயிற்றில் புளிளைக் கரைத்திருக்கிறது.

புலிகள் படையினரின் எல்லா வகையான பாதுகாப்பு உத்திகளையும் முறியடித்து விட்டு தாம் விரும்பிய நேரத்தில் விரும்பியவாறு தாக்குதல்களைத் தொடுக்கும் ஆற்றல் தமக்கு இருக்கிறது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறார்கள்.

ஆனாலும் இனி வரும் காலங்களில் கொழும்பிலும், அதன் புற நகர்ப் பகுதிகளிலும் மேலதிக கெடு பிடிகளைப் படையினர் அமுல்படுத்த இத் தாக்குதல் அடித் தளம் இட்டிருக்கிறது. பாவம் அப்பாவிப் பொது மக்கள் அவர்களைப் படையினர் இனி உரித்தெடுக்கப் போகிறார்கள்.

-வசிட்டன்





நன்றி - நூலகத்திட்டம்



ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ்:

# புதிய மொந்தையில் பழைய கள்!

-ஸிபான் ஷரா.

அண்மையில் கிழக்கில் கல்முனைப் பிரதேசத்தில் மாற்று அரசியல் சக்தியொன்றை கட்டியெழுப்பி இலங்கை முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை புதிய பாதையில் இட்டுச் செல்லப் போவதாக தாக சுவரொட்டி மூலம் பறைசாற்றி யிருக்கும் ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் முன்வைத்திருக்கும் அரசியல் கொள்கை தொடர்பாகவும், இனப்பிரச்சினைக்கான தீர்வின்போது அது முஸ்லிம்களுக்காக முன்மொழிய பிரஸ்தாபித்திருக்கும் கோரிக்கை தொடர்பாகவும் மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வது முஸ்லிம் சமூகத்தின் பணியாகின்றது.

முதலாவது- வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு மாகாணம் என்கின்ற கோட்பாட்டை நிராகரித்துவிட்டு இவ்விரு மாகாணங்களும் தனித்தனியாக செயற்படுவதற்கான அங்கீகாரத்தைப் பெறல்.

இக்கட்சியின் அடிப்படையானதும் அதிமுக்கியமானதுமான கோட்பாடாகின்றது. இக்கோட்பாட்டினை இனப்பிரச்சினை இந்நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் எண்ணற்ற அழிவுகளில் நின்றும், கோரத் தாண்டவங்களிலிருந்தும், ஆராய்தலும் அதனை நிராகரித்தலும், அதனைவிடவும் முக்கியமானதாகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட இனக்குழுக்கள் வாழும் இந்நாட்டில் சிங்கள மேலாட்சிவாதம், சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்கள் மீது ஏற்படுத்தியிருக்கும் அநீதிகள் எழுத்தில் வடிக்க முடியாதவை. காலத்திற்கு காலம் ஆட்சிபீடம் ஏறிய சிங்கள அரசாங்கள் இம்மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கி, ஆக்கிரமிப்புக்களையும், ஒடுக்கு முறைகளையும் தொடர்ந்து காலத்தின் நிர்ப்பந்தத்தினால் தமிழ் மக்கள் மீது ஏற்படுத்தப்பட்டு வந்த ஒடுக்குமுறைகளுக்கு வரலாற்றில் பல்வேறு தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. அத்தகைய தீர்வுகள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த பாரபட்சங்களுக்கு எத்தகைய நியாயமானதும் நிரந்தரமானதுமான தீர்வுகளைத் தராத்தன் காரணமாக தார்மீக அகிம்சைப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக பரிணாமம் பெற்றது. ஒரு கட்டத்தில் இப்பிராந்திய வல்லரசாகிய இந்திய அரசின் தலையீட்டினால், அரசியலமைப்பின் 13வது திருத்தமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபைகள் முறை மூலம் வடகிழக்கு மாகாண நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. வட கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு நிரந்தரமான இணைப்புக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படும் எனவும், ஏற்பாடாகி இருந்தது. இம்மாகாண சபை முறை வடகிழக்கில் முற்றுமுழுதாக தோல்வியடைந்தபோதும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டமானது உறுதியான முறையில் முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட இம்மாகாண சபை முறையினை ஏற்று தமது ஆயுதங்களைக் களைந்து ஜனநாயக அரசியல் வழிக்கு வந்த முன்னைய தமிழ் போராட்டக்குழுக்கள் இப்போது நேரடியாக போராட்டத்தில் பங்கேற்காத போதும், இத்தீர்வின் எச்சசொச்சமாக வலியுறுத்துவது இணைந்த வடகிழக்குப்பிரதேசம், தமிழ் மக்களின் தாயகப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டே எத்தகைய தீர்வும், முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே. இதே நிலைப்பாட்டினையே தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்க் காங்கிரசும் கொண்டிருக்கிறது. ஆகவே அரசியல் தீர்வொன்றின் அடிநாதமாக அமைய வேண்டியது இணைந்த வடகிழக்கு மாகாணம் தமிழரின் தாயகம் என்பதே.

இணைந்த வடகிழக்கு மாகாணக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதன் மூலமே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் தாயகப் பூமி சிங்களப் பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்கப்படும் சாத்தியம் காணப்படுகிறது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மென்மேலும் ஏற்படுத்தப்படாமல் தடுக்கவும், பூர்வீகப் பிரதேசம் கபளீகரம் செய்யப்படாமல் நிறுத்தப்படவும் வேண்டுமானால், வடகிழக்கு மாகாணம் இணைந்ததாகவே இருக்க வேண்டும். தமிழ்மக்களும், முஸ்லிம் மக்களும் செறிவாக வாழும் வடகிழக்கு மாகாணம் ஒன்றாக இணைக்கப்பட்டு தீர்வுகள் முன்வைக்கப்படும் போதே அங்கு அரசியல் ஸ்திரத்தன்மை நிலவும். வடகிழக்கு தனித்தனியாகப் பிரிக்கப்படும்போது சிறுபான்மையினர் மேலும் சிறுபான்மையினராக ஆக்கப்படும் அபாயம் இயல்பாகவே தோற்றம் பெறும்.

அரசியலமைப்பின் 13வது திருத்தம் மூலம் மாகாண சபைகள் தோற்றுவிக்கப்பட்டு தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணம் நிரந்தரமாக இணைக்கப்படுவது தொடர்பில் கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒரு வருடத்துள் நடாத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வாக்கெடுப்பு நடாத்தப்படவில்லையென்பது வடகிழக்கு மாகாணம் இணைந்தது இணைந்தது தான். அதனைப் பிரிக்க முடியாது என்பதனை மறைமுகமாகச் சுட்டி நிற்கின்றது.

இந்த யாதார்த்தங்கள் ஒரு புறமிருக்க இணைந்த வடகிழக்கு மாகாணம் தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்கின்ற கோட்பாடு தேசிய, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் தீர்வுகள் தேடப்படும் காலகட்டத்தில் முஸ்லிம்கள் மத்தியில் புதிதாகத் தோற்றம் பெற்றுள்ள அரசியல் கட்சியானது இனப்பிரச்சினையை இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்னரான காலம் ஒன்றுக்குள் இப்போது திருப்ப முனைவது அதனது அரசியல் தெளிவின்மையையே காட்டுகின்றது.

வடகிழக்கு மாகாணம் தனித்தனியாக செயற்படுவதன் ஊடாக ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கும் புதிய யுக்தி எதுவென எமக்குத் தெளிவாகப் புலப்படுத்தவில்லை. இருந்தும், கிழக்கில் 33வீதமாக வாழும் முஸ்லிம்கள் வடகிழக்கு இணைக்கப்படுவதால் 18 வீதமாக குறைக்கப்படுவார்கள் என்ற அடிப்படையில் ஏதாவது யோசனையைக் கொண்டிருந்தாலும் இணைந்த வடகிழக்கு மாகாணம் தனியானது என்ற தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட புவியியல் அடையாளம் ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழ் மக்களைப் போன்று முஸ்லிம் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யும் வகையில் தீர்வுகள் தேடப்படவேண்டும். அதுவே முஸ்லிம் மக்களின் சமூக இருப்புக்கும், பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக அமையும். அதேவேளை தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்கான வழியாகவும் அமையும். அல்லாமல் வடகிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கான அங்கீகாரத்தை வலியுறுத்துவது தமிழ்த் தேசிய தாயகத்தைத் துண்டாடி முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக்கொடுக்கும் சமுதாயமாக மாற்றிவிடும். சிங்களப் பேரினவாதச் சக்திகளின் பிரித்தாளும் அரசியல் தந்திரத்தின் பின்னணியென ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரசையும் சந்தேகக் கண்கொண்டு நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்.

இவ்வுண்மைகளின் அடிப்படையில் ஜனநாயக முஸ்லிம் மக்கள் கா்ங்கிரசானது முஸ்லிம் மக்களை வழிநடாத்த நினைக்காமல், வடகிழக்கு மாகாணத்தை பிரிக்கும் தனது அரசியல் கோட்பாட்டினை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது- தென்கிழக்கு அலகு அல்லது அதற்கு சமமான வேறு ஒரு சபையை உருவாக்குவதற்கான முயற்சிகளை ஆதரித்தல்.

வடகிழக்கில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் சிங்கள பௌத்த பேரினவாதத்தாலும், குறுந்தமிழ்த் தேசியவாதத்தாலும் துன்புறுத்தப்பட்டு திக்கற்றவர்களாக திண்டாடிக் கொண்டிருந்த போது முஸ்லிம் காங்கிரசின் வருகையினை ஏகமனதாக அங்கீகரித்து முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த முஸ்லிம் மாகாணக் கோரிக்கையினால், கவரப்பட்டு ஒவ்வொரு தேர்தலிலும் தமது ஆதரவினை வழங்கி மு.காவை பாராளுமன்றத்தில் அமர வைத்தது முதல், ஆட்சியின் பங்காளியாகவும் ஆக்கினர். எனினும், முஸ்லிம் காங்கிரஸ்ஸும் அதன் தலைமைத்துவமும், ஆளும் பொ.ஐ.மு. அரசினால் இனப்பிரச்சினைகான தீர்வுப்பொதி முன்வைக்கப் பட்டபோது பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கான தீர்வாக தென்கிழங்கு மாகாணக் கோரிக்கையினை முன்வைத்தது அல்லது ஏற்றுக் கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸின் குறுகிய தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையினை ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரசும் குத்தைகக்கு எடுத்துக்கொண்டு அரசியல் அரங்கினுள் அடியெடுத்து வைத்திருப்பது அரசியற்பிற்போக்குத்தனம் ஒன்றின் வெளிப்பாடு என்பது முஸ்லிம்கள் எல்லோருக்கும் சொல்லாமலேயே புரியும்.

தென்கிழக்கு மாகாணக் கோரிக்கை அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை தேர்தல் தொகுதி நீங்கலாக சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை தேர்தல் தொகுதிகளை மட்டும் உள்ளடக்கிய முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தினை மலினப்படுத்தும் விதமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை. அம்பாறை மாவட்டத்திற்கு வெளியில் வாழும் முஸ்லிம்களுக்கு எத்தகைய அரசியல் உத்தரவாதத்தையோ, பாதுகாப்பினையோ வழங்காது. மட்டக்களப்பு, திருமலை, மன்னார், யாழ் மாவட்ட முஸ்லிம்களினது தியாகங்களும், அரசியல் அபிலாஷைகளும் மதிக்கப்படாமல் அற்பத்தனமான அரசியல் சலுகைகளுக்காக முன்மொழியப்பட்ட தீர்வு. இனவிடுதலைப் போராட்டத்தின் இலக்கு அடையப்படாமலேயே முஸ்லிம் சமூகத்தை பேரினவாதச் சகதிக்குள் மாட்டவைத்த வரலாறுத் துரோகம்.

இணைந்த வடகிழக்கு மாகாணத்துள் முஸ்லிம் பெரும்பான்மைப் பிரதேசத்தை உள்ளடக்கிய நிலத் தொடர்பற்ற முஸ்லிம் மாகாணசபையே முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் இலக்கு. இதற்கு மாறாக முஸ்லிம் காங்கிரஸினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறுகிய தென்கிழக்கு மாகாணம் என்கின்ற சந்தர்ப்பவாத அரசியல் நாடகத்தை ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரசும், தொடர்ந்து மேடையேற்ற முனைவது வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அனைவரதும், அரசியல் நலன் கருத்திற் கொள்ளப்படாமலும், தென்கிழக்கு மாகாணத்தின் பாதகங்களை அறியாமலும், அல்லது உதாசீனப்படுத்திவிட்டு அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் வாக்குகள் மீது குறிவைத்து அமைக்கப்பட்ட ஊகமே தவிர, முஸ்லிம்களுக்கு அரசியல் விடுதலையினை பெற்றுத்தருவதற்காக வகுக்கப்பட்ட வியூகம் அல்ல.

வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் அனைவரதும் பங்கு பற்றி அவர்களின் அபிப்பிராயம் கோரப்படாமல் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை மட்டும் கருத்திற் கொண்டு தென்கிழக்கு மாகாணம் என்கின்ற அரைகுறைத் தீர்வை முன்வைக்க முஸ்லிம் காங்கிரஸ்க்கு எவ்வாறு உரிமையில்லையோ, அதேபோல் ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் க்கும் இவ்வுரிமை கிடையாது.

இணைந்த வடகிழக்கைப் பிரித்து தனித்தனியாக செயற்படுவதற்கான அங்கீகாரத்தைப் பெறல் எனும் கொள்கையினை மேற்சொன்ன நியாங்களின் அடிப்படையில் வாபஸ்பெறப்பட வேண்டும் என்பதைப்போல குறுகிய தென்கிழக்கு மாகாணக் கோரிக்கையை அல்லது அதற்கு சமமான கோரிக்கையினையும் வாபஸ் பெற வேண்டும். இதுவே ஜனநாயக முஸ்லிம் மக்கள் காங்கிரஸ் முஸ்லிம் சமுதாயத்திற்கு செய்யும் சிறப்பான அரசியல் பணியாகும்.

# மிகவும் கஷ்டமான நிலைமை இன்னும் முன்னே போகவேண்டும்

## இங்கிலாந்தின் எதிர்க்கட்சித்தலைவர் வில்லியம்ஹேக்

சர்வதேச ஜனநாயக சங்கத்தின் (International Democratic Union) செயற்குழுக் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் முகமாக இலங்கைக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த இங்கிலாந்தின் எதிர்க்கட்சித் தலைவரான வில்லியம் ஹேக் அவர்கள் சண்டே ரைம்ஸ்ஸுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் கூறிய முக்கிய விஷயங்கள் இங்கே தரப்படுகின்றன. இவர் இங்கிலாந்து நாட்டின் பழமைபேண்வாதக் (Conservative Party) கட்சியின் தலைவராவார். இவர் 1999ல் சர்வதேச ஜனநாயக சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவருக்கு முன்னர் இப்பதவியை வகித்தவர் சுவிற்சலாந்து நாட்டின் பிரதமர் கால் பில்ட் (Carl Bildt) ஆவார். இவரின் வருகையின் போது ஐ.தே.கவும் சர்வதேச ஜனநாயகச் சங்கத்தின் அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**✔ உங்களுடைய விஜயத்தின் நோக்கம் என்ன?**

சர்வதேச ஜனநாயகச் சங்கத்தின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காகவே முக்கியமாக வந்தேன். இவ் அமைப்பில் சோஷலிசக் கட்சிகளைத் தவிர்ந்த மிதவாத வலதுசாரி, பழைமைபேண்வாதக் கட்சிகள், உட்பட ஜனநாயகப் போக்குடைய 70 கட்சிகள் இதில் உறுப்பினராக உள்ளன. இவ் அமைப்பின் கூட்டம் ஒரு வருடத்திற்கு நான்கு முறை நடைபெறும். பல்வேறு நாடுகளில் நடைபெறும் இக்கூட்டம் இம்முறை ஐ.தே.கவின் அழைப்பின் பேரில் இலங்கையில் நடைபெற வாய்ப்பேற்பட்டது. இவ் அமைப்பின் அங்கத்தவராக இலங்கையில் ஐ.தே.கவே முதன்முதலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**✔ இனப்பிரச்சினை பற்றி தங்கள் கருத்தென்ன?**

இனப்பிரச்சினை மிகவும் பாரதுாரமான பிரச்சினைதான். இவ்வாறான பிரச்சினை எமக்கும் உண்டு. ஆனால், இலங்கையில் நடைபெறுவது போல் - நேற்று (வெள்ளிக்கிழமை) நடந்தது போன்று இவ்வளவு உயிர்ச்சேதம் நிறைந்ததாக இல்லை. உயிர்ச்சேதம் எங்களுக்கும் ஏற்பட்டதுண்டு. லண்டனில் மையப்பகுதிகளில் இவ்வாறு நடந்துள்ளது. அதனால், நாமும் இப்பிரச்சினை பற்றி அறிவோம். இதற்கு உகந்தவழி அரசும் எதிர்க்கட்சியும் மேற்கொள்ளும் இரு பக்கமும் இணைந்த பேச்சுவார்த்தையே. வட அயர்லாந்து பிரச்சினையில் இவ்வாறு தொழிற்கட்சியும் கொன்சவேற்றிவ் கட்சி ஆகிய இரு கட்சிகளும் இணைந்த பேச்சுவார்த்தை, ஒப்பீட்டளவில் பயனளித்துள்ளது. ஜோன் மேயரால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை ரொனி பிளேயரின் ஆட்சியிலும், தொடரப்படுகிறது முக்கியமானது. இதன் மூலம் பயங்கரவாதிகள் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஒரே கொள்கையே முன்னெடுக்கப்படும் என்பதை அறிந்து கொள்வர். ஆகவே அரசும், எதிர்க்கட்சியும் இணைந்து செயல்படுவது அவசியம்.

**✔ இன்றைய நிலையில் லியாம் ஃபொக்ஸ்ஸின் உடன்படிக்கையை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

இவ்வுடன்படிக்கையை மேற்கொண்ட கொன்ஸவேற்றிவ் கட்சி கூட தற்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் அது அரசும், அரசும் மேற்கொள்ளும் தொடர்பு நிலையில் இருக்க முடியாது. ஆனால், இலங்கையைப் பொறுத்த வரை தொழிற்கட்சியாக இருந்தாலும் சரி, கொன்சவேற்றிவ் கட்சியாக இருந்தாலும் ஒரே கொள்கையையே கடைப் பிடிக்கும். ஆனால், பிற நாட்டுப் பிரச்சினையில் தலையிடமாட்டோம்.

**✔ விடுதலைப் புலிகள் சர்வதேச செயலகம் ஒன்றை லண்டனில் நிறுவி, பணம் சேகரித்தல், பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபடுதல் ஆகிய சகலவற்றையும் லண்டனில் சுதந்திரமாகச் செய்ய வாய்ப்பளிக்கப் பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள சில வட்டாரங்கள் கூறுகின்றன. இது பற்றி தங்கள் கருத்து?**

கடந்த 1998ல் தொழிற்கட்சி சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. அதற்கு நாமும் ஆதரவு அளித்தோம். அதாவது சதி முயற்சிகள், பிற நாடுகளில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுதல் ஆகியவற்றுக்கு எதிரானது அது. எல்லாரும் சட்டத்திற்கு மதிப்பளித்து வாழ்வதையே நாம் விரும்புகிறோம்.

**✔ இங்கே பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய உங்கள் பார்வை?**

ஜனநாயகத்திற்கு மிக அவசியமானது பத்திரிகைச் சுதந்திரம். அத்தோடு சமவாய்ப்புக் கொண்டதாக அரச ஒலிபரப்பு நிலையங்கள் இருக்க வேண்டும்.

**✔ இலங்கையில் அரச ஒலிபரப்பு ஊடகங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது பற்றிய குற்றச்சாட்டுகள் பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

நான் எனது நாட்டில் நடப்பது பற்றித் தான் சொல்ல முடியும். எமது நாட்டில் பி.பி.சி. உட்பட எல்லா ஸ்தாபனங்களும் எல்லாக் கட்சிகளுக்கும் சமமான இடத்தைக் கொடுத்து பொறுப்பாக நடந்து கொள்கின்றன....

**✔ இலங்கையின் சமாதான முயற்சிகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

மிகவும் கஷ்டமான நிலை. இன்னும் எவ்வளவோ முன்னோக்கிப் போக வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# வெளியிலிருந்து பெறப்படும் நிதியுதவி விமரிசனத்தின் எல்லைகளையும் மனித உரிமைக் காப்பு நடவடிக்கைகளையும் குறுக்கி விட்டதா?

இலங்கையில் ஏறத்தாழ மூவாயிரம் அரச சார்பற்ற அமைப்புகள் இருப்பதாகக் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது. இவ் அரச சார்பற்ற நிறுவனங்களின் தோற்றம், சமூகத்தில் அவை வகிக்கும் பாத்திரம், அரசியல், மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் போன்றவற்றில் அவற்றின் தலையீடு தொடர்பான பல்வேறு வாதப்பிரதி வாதங்கள் இங்கு உண்டு.

இக்கட்டுரையாசிரியர் ஜேம்ஸ் பெட்ராஸ் நியூயோர்க் பல்லைக்கழகத்தில் பேர்மிங்ஹாமில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். "லத்தீன் அமெரிக்காவில் நவதாரளவாதமும் வர்க்க முரண்பாடும்' என்ற புத்தகத்தின் இணை ஆசிரியர்களில் இவரும் ஒருவர். அவர் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறித்து, அவை லத்தீன் அமெரிக்க நாடுகளில் வகித்த பாத்திரம் குறித்து எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தைத் தருகிறோம். நமது சூழல் குறித்த புரிதலை வளர்க்க இது பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.

ஆ-ர்

## பகுதி 1

1980களின் தொடக்கத்தில் நவதாராளவாத ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த சிந்தனையாளர்கள், தங்களது கொள்கைகள் சமூகத்தைப் பிளவுபடுத்தி விட்டது மட்டுமல்லாமல் சமூகத்தில் பெரிய அளவில் அதிருப்தியையும் தோற்றுவிப்பதை உணர்ந்தார்கள். நவதாராளவாத அரசியல்வாதிகள் ஏகப்பட்ட பணச்செலவு செய்து அமைப்புகளுக்கு இணையான நிலைப்பாட்டைக் கீழிருந்து ஏற்படுத்தினார்கள். இந்த "வேர்களிலிருந்து தொடங்கும்" நிறுவனம் "அரசு எதிர்ப்பு" கொள்கையுடன் வர்க்க மோதல் சாத்தியமாகக் கூடிய வர்க்கங்களிடையே ஒரு மெத்தனமான மனநிலை உருவாகும்படி ஏற்படுத்தப்பட்டது. பொருளாதார ரீதியில் நவதாராளவாத மூலங்களைச் சார்ந்த இந்த நிறுவனங்கள் உள்ளூர் தலைவர்களையும், தீவிர நடவடிக்கையில் ஈடுபடும் சமூகங்களையும் தம்முடன் இணைத்துக் கொள்வதில் சமூக - அரசியல் இயக்கங்களுடன் போட்டி போடுகின்றன. 1990வாக்கில் ஆயிரக்கணக்கில் உலகெங்கிலும் பெருகிய இந்த நிறுவனங்கள் நான்கு பில்லியன் டொலர்கள் நிதியுதவி பெற்று வந்தன.

### நவதாராளமாக்கலும் அரசு , அரசு சாரா நிறுவனங்களும்

"உள்நாட்டு சர்வாதிகாரங்களின் மனித உரிமை மீறல்களைக் கண்டனம் செய்த அதேநேரத்தில் அவற்றுக்கு நிதியுதவியும் அறிவுரையும் வழங்கும் புரவலர்களான அமெரிக்க ஐக்கிய நாடுகளையோ, ஐரோப்பாவையோ இவை கண்டிக்கவேயில்லை. நவதாராளவாத நிதிக் கொள்கையையும், மனித உரிமை மீறல்களையும் ஏகாதிபத்திய அமைப்பின் புதிய திருப்பத்துடன் இணைத்து நோக்குவதற்கான முனைப்பும் அவற்றுக்கு இல்லை. வெளியிலிருந்து பெறப்படும் நிதியுதவி விமரிசனத்தின் எல்லைகளையும் மனித உரிமைக் காப்பு நடவடிக்கைகளையும் குறுக்கி விட்டது என்பது வெளிப்படை."

அரசு சாரா நிறுவனங்களின் அரசியல் இயல்புகள் பற்றிய குழப்பம் 1970களில் சர்வாதிகாரங்களுடன் தொடர்புடைய அவற்றின் ஆரம்ப வரலாற்றிலிருந்தே தொடங்கி விடுகிறது. இந்தக் காலகட்டத்தில் இவை இராணுவ சர்வாதிகாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு வழங்கி மனித உரிமை மீறல்களைக் கண்டனம் செய்தன. நவதாராளவாத சர்வாதிகாரங்கள் உண்டாக்கிய முதல் கட்ட அதிர்ச்சி வைத்தியத்தை சகித்து மீள்வதற்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ நிறுவப்பட்ட இலவச உணவு முகாம்களை இந்த அரசு சாரா நிறுவனங்கள் ஆதரித்தன. இந்தக் கால கட்டத்தில் இடதுசாரிகளிடையே கூட அரசு சாரா நிறுவனங்கள் ஒரு சாதகமான பெயரைப் பெற்றன. "முற்போக்கு முகாமின்" ஒரு பகுதியாக அவை கருதப்பட்டன. அப்போதும் கூட அரசு சாரா நிறுவனங்களின் வரையறைகள் தெளிவாகவே இருந்தன. உள்நாட்டு சர்வாதிகாரங்களின் மனித உரிமை மீறல்களைக் கண்டனம் செய்த அதேநேரத்தில் அவற்றுக்கு நிதியுதவியும் அறிவுரையும் வழங்கும் புரவலர்களான அமெரிக்க ஐக்கிய நாடுகளையோ, ஐரோப்பாவையோ இவை கண்டிக்கவேயில்லை. நவதாராளவாத நிதிக் கொள்கையையும், மனித உரிமை மீறல்களையும் ஏகாதிபத்திய அமைப்பின் புதிய திருப்பத்துடன் இணைத்து நோக்குவதற்கான முனைப்பும் அவற்றுக்கு இல்லை. வெளியிலிருந்து பெறப்படும் நிதியுதவி விமரிசனத்தின் எல்லைகளையும் மனித உரிமைக் காப்பு நடவடிக்கைகளையும் குறுக்கிவிட்டது என்பது வெளிப்படை.

1980களின் ஆரம்பத்தில் நவதாராளமயமாக்கலின் மீது எதிர்ப்பு அதிகரித்தவுடன் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள், ஐரோப்பிய அரசுகள், உலகவங்கி ஆகியவை அரசு சாரா நிறுவனங்களுக்கான தங்கள் நிதி ஒதுக்கீட்டை அதிகரித்தன. நவதாராளவாத மாதிரியை கேள்விக்குள்ளாக்கும் சமூக இயக்கங்களின் வளர்ச்சிக்கும், அவற்றை ஒடுக்கும் வகையில் அரசு சாரா நிறுவனங்களின் மூலம் மாற்று வடிவங்களில் சமூக நடவடிக்கையை ஏற்பாடு செய்வதற்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. "தேசியம்'' என்பதனை எதிர்ப்பது என்பது தான் அரசு சாரா நிறுவனங்களும், உலக வங்கியும் ஒருங்கிணையும் மையப் புள்ளியாக இருந்தது. அரசு சாரா நிறுவனங்கள் ஒரு "இடதுசாரிக்" கண்ணோட்டத்துடன் சமுதாயத்தை ஆதரித்து மேலோட்டமாக அரசை விமர்சிக்க, இதே காரியத்தை வலதுசாரிகள் "சந்தை" என்ற பெயரில் செய்தார்கள். ஆனால், உண்மையில் உலக வங்கியும், நவதாராளவாத அரசுகளும், மேற்கத்திய அடிப்படை நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து, பன்னாட்டுக் கழகங்களினால் (MNCS) பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக சேவை மூலம் நஷ்ட ஈடு கொடுத்து, தேசிய நல்வாழ்வுத் திட்டங்களை முறியடித்து வந்தன. வேறு வார்த்தைகளில் சொல்லப் போனால் ஒரு புறம் நவதாராளவாத அரசுகள் மேலே இருந்து கொண்டு சமூகங்களை நாசப்படுத்துவதற்காக மலிவான இறக்குமதிகளை நாட்டினுள் குவித்து, வெளிநாட்டுச் செலவாணியை அதிகரித்து, தொழிலாளர் நலனுக்குரிய, சட்டங்களை நீக்கி, குறைந்த கூலிக்கு உழைப்பவர் - வேலையில்லாதவர் என்று நாளுக்கு நாள் பெருகும் கூட்டத்தை உருவாக்கி விடுகின்றன. மறுபுறம் அரசு சாரா நிறுவனங்கள் "சுய உதவித்" திட்டங்கள், "பரவலான கல்வித் திட்டம்", ''வேலைப் பயிற்சி" ஆகியவற்றை வழங்கி ஏழைகளுள் சிறு சிறு குழுக்களை உருவாக்கி உள்ளூர் தலைவர்களுடன் ஒத்துழைக்கச் செய்து, அமைப்புக்கு எதிராக எழக் கூடிய ஒருங்கிணைந்த போராட்டங்களை ஒடுக்கி விடுகின்றன. இப்படியாக அரசு சாரா நிறுவனங்கள் நவதாராளமயமாக்கலின் மேல் நிலையிலுள்ளவர்களுடன் நெருங்கிய உறவுடையவர்களாகி உள்ளூர் திட்டங்களுடன் தங்கள் நாசவேலைக்கு ஆதாயம் தேடிக் கொண்டு நவதாராளவாதத்தின் "சமூக முக"மாக மாறி விட்டன. அதாவது நவீனமயவாதிகள் ஒருவகை 'குறடு' வேலையை அல்லது இரட்டை நிலைப்பாட்டை உருவாக்கினார்கள். துரதிருஷ்டவசமாக இடதுசாரிகளில் பலரும் மேலிருந்தும் வெளியிலிருந்தும், செயல்படும் "நவீன தாராளமயவாதத்தை" (சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி) மட்டுமே மையப்படுத்தினார்களே ஒழிய அடியிலிருந்து (அரசு சாரா சிறு சிறு நிறுவனங்கள்) எழும்பும் நவீன தாராளமயமாக்கலை விட்டுவிட்டார்கள். இந்தத் தவறு ஏற்படுவதற்கான முக்கிய காரணம் பல முன்னாள் மார்க்ஸிஸ்டுகள் மற்றும் இடதுசாரிகள் அரசு சாரா நிறுவன வழிமுறைக்கும், நடைமுறைக்கும் மாற்றப்பட்டு விட்டது தான். 'தேசிய எதிர்ப்பு என்கிற செல்லும் கொள்கை மாற்றுக்கான பயணச்சீட்டு, வர்க்க அடிப்படை அரசியலிருந்து "சமூக முன்னேற்றத்திற்கும்", மார்க்ஸியத்திலிருந்து அரசு சாரா நிறுவனத்துக்கும் இட்டுச் செல்லக் கூடியதாயிற்று.

அரசு சாரா நிறுவனங்கள் அப்பட்டமாக "தேசிய" அதிகாரத்தை "உள்ளூர்" அதிகாரத்துக்கு எதிரான ஒரு நிலையில் நிறுத்துகின்றன. உள்நாட்டு அதிகாரம் மக்களுக்கு நெருக்கமாகவும் அதிக பயனுள்ளதாகவும் இருக்கும் போது தேசிய சக்தி குடிமக்களிடமிருந்து விலகி, தன்னிச்சையாகக் கொடுங்கோன்மையாகச் செயற்பட்டு, குடிமக்களின் நன்மைக்கு மாறான எதிரிடையான தன்மையில் வளரக் கூடும் என்று இவை வாதிடுகின்றன. இதன் எதிரிடைவாதம் உண்மையாகியிருக்கும் ஒரு சில வரலாற்று உதாரணங்களைத் தவிர மற்றபடி தேசிய அதிகாரத்திற்கும் "உள்நாட்டு" அதிகாரத்துக்கும் இடையிலான முக்கியமான உறவை இது இல்லாமல் செய்து விடுகின்றது. இதன் மூலம் அடக்கியாளும் சுரண்டும் வர்க்கத்திடம் இருக்கும் போது உள்ளூர் முற்போக்கு முயற்சிகளை ஒடுக்கிவிடும் தேசிய அதிகாரமானது, முற்போக்கு சக்திகளின் கையில் இருந்தால் இம்முயற்சிகளுக்கு உரமூட்டும் என்ற அப்பட்டமான உண்மையை மறுக்கின்றன.

தேசிய அதிகாரத்துக்கும், உள்ளூர் அதிகாரத்துக்குமான எதிரெதிர் நிலையை நியாயப்படுத்த, உள்ளூர் நிறுவனங்களுக்கும் நவதாராளவாத அந்நிய நன்கொடையாளர்களுக்கும் (உலக வங்கி, ஐரோப்பா, அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள்) உள்ளூர் தயாளச் சந்தை அரசுகளுக்கும் இடையே அரசு சாரா நிறுவனங்கள் தரகர்களாகச் செயல்படுகின்றன. ஆனால், இதன் பயனாக, உள்ளூர் போராட்டங்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையிலேயான உறவையும் தேசிய- சர்வதேசிய அரசியல் இயக்கங்களுக்கும் இடையிலான உறவையும் துண்டித்து நவதாராளவாத அரசுகளைத் தான் இவை வலுப்படுத்துகின்றன. "உள்ளூர் நடவடிக்கை"களின் மேல் கவனம் செலுத்துவது நவதாராள அரசுகளுக்கு நன்மை செய்கின்றன. காரணம் அது பெரிய அளவிலான சமூக - பொருளாதார கொள்கையில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆதரவாளர்களின் அடக்கு முறையை அனுமதிப்பதோடு, நாட்டின் வளங்களை ஏற்றுமதி செய்யும் முதலாளிகளுக்கும் நிதி நிறுவனங்களும் மானியம் வழங்கவும் வழி செய்கின்றன.

ஆக, அபரிதமான தேசிய சொத்துக்களை வசதியான தனியார்களுக்கு மாற்றும் வேலையை நவதாராளவாதிகள் செய்து வந்த வேளையில், அரசு சாரா நிறுவனங்களும் தொழிற் சங்கங்களுடைய எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கேற்கவில்லை. மாறாக, உள்ளூர் தனியார் திட்டங்களில் ஈடுபட்டு, தனியார் நிறுவனத் தத்துவங்களை (சுய உதவி) உள்ளூர் சமூகங்களிடையே பரப்பி, சிறு நிறுவனங்களின் கவனத்தைக் குவித்தன... "அரசுக்கு எதிரான நடவடிக்கை", "சிவில் சமூகங்களை உருவாக்குதல்" என்ற பெயரில் அரசு சாரா நிறுவனங்கள் சிறு முதலாளிகளுக்கும், தனியார் மயமாதலால் பயனடையும் ஏகச் சந்தையாளர்களுக்குமிடையே ஒரு கொள்கை ரீதியிலான பாலத்தைக் கட்டியெழுப்பின. வசதி படைத்தவர்கள் தனியார் மயத்தின் காரணமாக பெரும் பொருளாதார சாம்ராஜ்யங்களை தமதாக்கிக் கொண்ட வேளையில் அரசு சாரா நிறுவனங்கள் மத்தியத்தர வர்க்க தொழில் நிபுணர்கள், அலுவலகங்களை நடத்தவும், போக்குவரத்துகளுக்கு செலவிடவும் இன்னபிற சிறு அளவிலான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தேவையான சிறுதொகைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் அரசியல் நோக்கில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், அரசு சாரா நிறுவனங்கள் மக்களில் சில பகுதியினரை அரசியல் பிரக்ஞை இல்லாதவர்களாக்கி, பொது ஊழியர்களுக்கான அவர்களது அர்ப்பணிப்பை பலமிழக்கச் செய்து வீரியமிக்க தலைவர்களை சின்னஞ்சிறிய திட்டங்களில் சேர்ந்து பணிபுரிய வைத்துள்ளன என்பது தான். அரசு சாரா நிறுவனங்கள் பொதுப்பள்ளி ஆசிரியர் போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் நழுவிவிடுகின்றன. ஏனென்றால் நவதாராளவாத அரசுகள் பொதுக்கல்வியை மக்களுக்கு அறிவுறுத்துபவர்களுக்கு எதிரானவை. அப்படி ஒருவேளை அரசு சாரா நிறுவனங்கள் குறைவான ஊதியத்தையும் குறைந்த பட்ஜெட்டையும் எதிர்த்து வேலைநிறுத்தங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் ஆதரித்தாலும் அவை மிகவும் அரிதாகவே இருந்தன. அரசு சாரா நிறுவனங்களின் கல்விக்கான நிதி நவதாராளவாத அரசுகளிடமிருந்து வருவதால், பொது கல்வியாளர்களின் போராட்டங்களுக்கு அரசு சாரா நிறுவனங்கள் ஆதரவு தருவதில்லை. ஆக, நடைமுறையில் " அரசு சாராத" என்றால் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு செலவு செய்வது, ஏற்றுமதி செய்யும் முதலாளிகளுக்கு மானியங்களை வழங்கி நவதாராளவாதிகளுக்கு தாராள இருப்பை உறுதி செய்வது என்று அர்த்தமாகி விட்டது. இதன் மூலம் சிறுதொகைகள் அரசிலிருந்து அரசு சாரா நிறுவனங்களுக்குப் போய்ச் சேரும்.

உண்மையில், அரசு சாரா நிறுவனங்கள் அரசு சாராதவை அல்ல. அவை அந்நிய அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறுகின்றன. அல்லது உள்நாட்டு அரசுகளின் தனியார் துணை ஒப்பந்தக்காரர்களாக செயல்படுகின்றன. பல முறை வெளிப்படையாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரசு நிறுவனங்களுடன் கூட்டுச் சேருகின்றன. இந்த "சப் காண்ட்ராட்டு" முறை தொழில் நிபுணர்களை குறிப்பிட்ட காண்டராக்குகளுடன் பிணைத்து உபயோகமில்லாதவர்களாக்கி, அவர்களிடத்தில் தற்காலிக தொழில்நிபுணர்களை அமர்த்தி விடுகின்றது. ஒரு சமூக நல அரசு வழங்கக்கூடிய நீண்டகால அடிப்படையிலான தொடர்ச்சியான திட்டங்களை அரசு சாரா நிறுவனங்கள் வழங்க முடியாது. மாறாக, அவை குறுகிய சமூகக் குழுக்களுக்கு குறைந்த அளவு உதவிகளை வழங்குகின்றன. எல்லாவற்றையும்விட முக்கியமானது என்னவென்றால், இவற்றின் நடவடிக்கைகள் சம்பந்தமான வெளிநாட்டு புரவலர்களுக்குத் தான் பதில் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிறதே ஒழிய உள்நாட்டு மக்களுக்கு அல்ல. இவ்வகையில் தான் அரசு சாரா நிறுவனங்கள் சமூகத்திட்டங்களை உள்நாட்டு மக்களின் கைகளிலிருந்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களிடமிருந்தும் பிடுங்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத வெளிநாட்டு அதிகாரிகளுக்கும், அவர்களுக்கு உள்ளூரிலிருந்து சேவகம் புரியும் அதிகாரிகளுக்கும் வழங்கி ஜனநாயகத்தை இழிவுபடுத்தி விடுகின்றன.

'தேசியம்' என்பதனை எதிர்ப்பது என்பது தான் அரசு சாரா நிறுவனங்களும், உலக வங்கியும் ஒருங்கிணையும் மையப் புள்ளியாக இருந்தது.

அரசு சாரா நிறுவனங்கள் மக்கள் கவனத்தையும் போராட்டங்களையும் தேசிய பொருளாதாரத்திலிருந்து துார நகர்த்தி, உள்ளூர் சமூக சேவைகளை பெறும் சுய சுரண்டலை நோக்கி இட்டுச் செல்கின்றன. இது சமூக நிதி ஒதுக்கீட்டை குறைத்து தேசத்தின் பணத்தை தனியார் வங்கிகளின் வாரக்கடன்களை மானியமாக மாற்றியும் ஏற்றுமதியாளர்களுக்கு கடனுதவி வழங்கவும் நவதாராளவாதிகளுக்கு உதவுகிறது? இந்த சுய சுரண்டலுக்கு (சுய - உதவி) என்ன அர்த்தம் தெரியுமா? ஏற்கெனவே அரசுக்கு வரிகளைச் செலுத்தி அதற்கு பிரதியாக ஒன்றுமே கிடைக்கப் பெறாத உழைக்கும் மக்கள் பற்றாக்குறையான ஆதாரங்களை வைத்து மேலும் அதிக மணி நேரங்கள் உழைக்க வேண்டும் என்று அர்த்தம். பூர்ஷ்வாக்கள் தொடர்ந்து அரசிடமிருந்து பெற்றுவரும் சேவைகளைப் பெற தங்களிடமுள்ள அரிதான சக்தியையும் கூட விரயம் செய்ய வேண்டும் என்று அர்த்தம். இன்னும் அடிப்படையாகப் பார்த்தால், அரசு சாரா நிறுவனங்களின் 'தனியார் தன்னார்வ நடவடிக்கை' என்ற கொள்கை, "பொது" என்பதன் அர்த்தத்தையே இழிவு செய்து விடுகிறது. தனது மக்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வாழ்வையும் சுதந்திரத்தையும், இன்பத்தை தேடும் உரிமையையும் வழங்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்ற எண்ணத்தை இழிவுபடுத்தி விடுகின்றன. குடிமக்களின் நல்வாழ்வுக்கு நாட்டின் அரசியல் பொறுப்புணர்வு அவசியம் என்பதையே மறுத்து விடுகின்றன. பொதுவான பொறுப்புணர்வு என்ற இந்த எண்ணத்துக்கு எதிராக சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக நவதாராளவாதத்தின் தனியார் பொறுப்புணர்வு தனியார் சொத்துக்கள் என்ற எண்ணத்தை அரசு சாரா நிறுவனங்கள் முன்னிறுத்துகின்றன. இதன் பலனாக ஏழை மக்கள் மீதான பாரம் இரட்டிப்பாகிறது. அவர்கள் நவதாராளவாத அரசை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்காக தொடர்ந்து வரிகளைச் செலுத்துவதுடன் தங்கள் சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்ள தனிப்பட்ட சுய - சுரண்டலுக்கு ஆட்படுகிறார்கள்.

(அடுத்த இதழில் அரசு சாரா நிறுவனங்களும் சமூக - அரசியல் இயக்கங்களும்)

நன்றி - நூலகத்திட்டம்



# வடக்கு முஸ்லிம்கள்

# மீள திரும்புதல் சாத்தியமா?

*"யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த பெப்ரவரி 12ம் திகதி முதல் 14ம் திகதிவரை நடைபெற்ற 'வட இலங்கையின் புனரமைப்பும் புனர் நிர்மாணமும்' என்ற தலைப்பிலான பட்டறையில் படிக்கப்பட்ட கட்டுரையின் முக்கிய பகுதிகள் இவை. இந்தப் பட்டறையை கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகமும், யாழ் பல்கலைக்கழக புவியியல் பீடமும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தன. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களின் நிலைமை பற்றி ஆராய்கிறது அக்கட்டுரை. இந்த இடப்பெயர்வின் முக்கிய அம்சம் என்னவென்றால், இம் மக்கள் இடம்பெயர்ந்து ஒன்பது நீண்ட ஆண்டுகள் ஓடிவிட்டன என்பதுவும் அவர்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிப் போகாமலும் அல்லது என்ன செய்வது என்று தீர்மானம் எதையும் எடுக்காமலும் இருக்கிறார்கள் என்பதுவும் தான் என்கிறார் கட்டுரையாளர்."*

கடந்த 15 ஆண்டுகாலமாக நடைபெற்றுவரும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் கிட்டதட்ட முப்பது லட்சம் மக்களை இடம்பெயரவைத்துள்ளது. இவர்களில் பெரும்பான்மையானோர் உள்நாட்டினுள் இடம்பெயர்ந்தவர்கள் ஆவர். இவர்களில் அரைபங்கிற்கு மேலானோர் தமது இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். திரும்பித் தத்தம் இடங்களுக்கு செல்வது தான் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் அதிகம் விரும்பப்படும் தெளிவாக இருக்கிறது. இவ்வாறு பெரும்பாலானோர் தமது இடங்களுக்கு மீளத்திரும்பிச் சென்றமைக்கான பிரதான காரணங்களில் ஒன்று அவர்கள் இடம்பெயர்ந்து சென்று தங்கிய இடமாகும். தமது சொந்த இடங்களுக்கு அருகாமையில் தங்கியவர்கள் மீளத்திரும்பி வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறு உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் சிலரால் திரும்பித் தமது இடங்களுக்கு செல்ல முடியவில்லை. இவர்களில் சிலர் வேறு இடங்களில் தாம் நிரந்தரமாக தங்கிவிட முடிவு செய்து விட்டார்கள். அதேவேளை வேறு பலர் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தவர்கள் என்ற நிலையில் அவர்களாக இடம்பெயர்ந்த நாள் முதல் இருந்து வருகிறார்கள். இந்த ஆய்வு, முஸ்லிம்கள் தொடந்தும், இடம்பெயர்ந்தவர்களாக இருக்கும் நிலைமையையே தெரிவு செய்துள்ளார்கள் என்று காட்டுகிறது.

1990இல் கிட்டதட்ட முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எல்லோரும் தமது வீடுவாசல்களை விட்டு இடம்பெயர்ந்தார்கள். வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேறுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தரவிட்டதே இந்த இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாகும். வடக்கின் ஐந்து மாவட்டங்களிலுமாக, கிட்டதட்ட 75 குடியிருப்புகளில் ஏறக்குறைய 75,000 பேர்வரையான முஸ்லிம்கள் அப்போது வாழ்ந்து வந்தார்கள். வெளியேற்ற உத்தரவின் காரணமாக வடக்கு மாகாணத்தை விட்டு இந்த இடம்பெயர் சமூகம் முற்றாக வெளியேறியது. வடக்கு முஸ்லிம்களற்ற ஒரு பிரதேசமாக மாறியது.

தொண்ணூறு வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் இன்று வரை தமது இடங்களுக்குத் திரும்பவில்லை. இவ்வாறு வெளியேறியவர்கள் வடமேல் கரையோரப் பிரதேசமான புத்தளம் மாவட்டத்தில் நெருக்கமாக காணப்படுகின்றார்கள். அங்கு உள்ள நலன்புரி நிலையங்கள், அகதிமுகாம்கள் என்பவற்றில் வதியும் இம்முஸ்லிம் மக்கள் தான் நீண்ட காலமாக இடம்பெயர்ந்து வாழும் பெருமளவான மக்களாவர்.

### அவர்கள் இப்போது தங்கியிருக்குமிடங்களில் நிரந்தமாக தங்க விரும்புகிறார்களா?

1999ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வீடுவீடாக செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி வடக்கில் உள்ள நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டதும் தமது வீடுகளுக்குத் திரும்பிப் போவதையே புத்தளத்திலுள்ள இடம்பெயர்ந்துவாழும் முஸ்லிம்களில் பெரும்பாலானோர் விரும்புகின்றனர். ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தமது சொந்த இடத்திற்கு திரும்பிப் போக இன்னமும் விரும்புவது ஆச்சரியமூட்டுவதாக இருக்கலாம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பும், புத்தளத்தில் ஒரு மீள்குடியேற்ற நடவடிக்கையை அரசாங்கம் செய்ய முனைந்த போதும், இதே அபிப்பிராயத்தையே அம்மக்கள் வெளிப்படுத்தினார்கள். (ஹஸ்புல்லா 1996) இதைத்தவிர வேறு சில ஆய்வுகளும் (உலக உணவு நிறுவனம் 1997, டி சொய்சா 1999) கூட இடம்பெயர் முஸ்லிம்கள் இந்த இடப்பெயர்வு வாழ்வுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிவிக்கின்றன.

### வடக்குக்கு திரும்புதல் நடைமுறைச் சாத்தியமா?

தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வது என்று சொல்வதன் மூலம் இம்மக்கள் கருதுவது தான் என்ன? இடம்பெயர்ந்த மக்களின் நடைமுறைச் சாத்தியமான ஒரு கருத்தாக இதைக் கொள்ளலாமா? தெற்கு நோக்கி இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் வந்ததற்கு காரணம், அவர்களை விரட்டியவர்கள், அவர்களது நகர்வின் திசையையும் தீர்மானித்திருந்தது தான். அவர்கள் வடமேற்கில் உள்ள புத்தளத்திற்கு போனதற்குக் காரணம் அது தான் முதலில் அண்மித்த பிரதேசமாக இருந்ததும், அங்குள்ள மக்களுடன் ஏற்கெனவே வடபகுதி முஸ்லிம்களுக்கு உறவுகள் இருந்ததுமாகும். தெற்கிலே வாழ வேறெந்த இடமும் இல்லாததால் வெளியேறிவர்களில் பலர் முகாம்களில் வாழத் தொங்கினர். ஆனால், இத்தகைய ஒழுங்கமைக்கப்படாத முகாம்களில் வாழ்வது என்பது கடினமானதும், அசௌகரியமானதுமாகும். எனவே சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்காக தமது வீடுகட்குப் போக, அவர்கள் விரும்புவது இயல்பானதே. வெளியேறிய முஸ்லிம்கள், தம்மை வெளியேற்றிய புலிகள், திரும்பி வருமாறு அழைப்பார்கள் என்றும் நம்பினார்கள். சமாதானப் பேச்சுகளின் மூலமாக நிலைமை சீரடையும் என்றும் தாம் திரும்பிப் போகும் காலம் விரைவுபடும் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

### நம்பிக்கைக்கான காரணங்கள்

தாம் திரும்பிச் செல்வது தொடர்பாக அவர்கள் பெருமளவு நம்பிக்கை வைத்திருப்பதற்கு நியாய்மான காரணங்கள் இருப்பதைச் சொல்லியாக வேண்டும். ஆயுதப் போராளிகளின் தம்மைப் பற்றிய தவறான புரிதல் காரணமாகவே தம்மை வெளியேற்றினார்கள் என்று அவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். இந்த விடயம் இப்போராளிகளால் உத்தியோகபூர்வமுறையிலும் உத்தியோகபூர்வமற்ற முறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. (Counter point 1993) மறுபுறத்தில் வடமாகாண மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிய அன்னியோன்னிய உறவும் அவர்களது திரும்பிச் செல்லல் பற்றிய நம்பிக்கைக்குக் காரணமாகும். முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட பின்பும் கூட இனத்துவ நல்லுறவில் 'இவ்விரு சமூகங்களுக்குமிடையில் எந்த ஊறும் ஏற்படவில்லை. காலத்துக்குக் காலம் இடப்பெயர் முஸ்லிம் மக்களின் நம்பிக்கைகள், பல்வேறு திட்டமிட்ட தேசிய அளவிலான சமாதான முயற்சிகள் மூலமாக மேலும் உறுதி செய்யப்பட்டன. 1994, 1995இல் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் இதில் அடங்கும். இத்தகைய முயற்சிகள் இடப்பெயர் முஸ்லிம்களை முகாம் வாழ்க்கையை அது ஒரு தற்காலிகமான வாழ்க்கையே என்ற எண்ணத்துடன் ஏற்றுக் கொள்ளத் தூண்டின எனலாம்.

### புத்தளத்தில் மீள்குடியேற்றம்

ஆனால், துரதிருஷ்டவசமாக கடந்த காலத்திய அனைத்து சமாதான முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்தன. குறிப்பாக 1995இல் நடந்த தோல்வி முஸ்லிம்கள் உடனடியாக திரும்பி முடியும் என்ற நம்பிக்கையைப் பலவீனப்படுத்தியது. அவர்கள் அப்போது தமது அகதி வாழ்க்கையில் ஐந்து ஆண்டுகளை முடித்திருந்தார்கள். அந்த நேரத்தில் இடம்பெயர்ந்த மக்கள் இந்த முகாம் வாழ்க்கைக்கு முடிவு காணப்பட வேண்டும் என்பதில் மிகவும் ஆவலுடன் இருந்தார்கள். எப்படியோ இந்தக்கட்டத்தில் அரசாங்கம் முஸ்லிம்கள் மீளக்குடியேறுவது தொடர்பாக ஒரு ஆலோசனையை முன்வைத்தது. அரசின் 'மீள் குடியேற்றம்' தொடர்பான இந்தத் திருத்தப்பட்ட கொள்கை" இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினை நடந்துகொண்டிருக்கும் யுத்தத்துடன் இணைக்கப்படக் கூடாது. இடப்பெயர்ந்தோரில் தமது சொந்த இடங்களில் கிட்டிய காலத்துள் சமாதான நிலை தோன்றுவதற்கான வாய்ப்புகள் அரிதாகச் தோன்றும் பட்சத்தில், ஒரு துண்டுக்காணியும், மீளக்குடியேறுவதற்கான உதவிகளும், வழங்கப்படும்" என்று கூறியது. (கப்பல் போக்குவரத்து துறைமுக, புனர்வாழ்வு நிர்மாண புனருத்தாரண அமைச்சு - 1995/96.

### முஸ்லிம் அகதிகளின் மனநிலை

இடம் பெயர்ந்த முஸ்லிம்களின் மனநிலையோ, அரசாங்கத்தின் பார்வையுடன் வேறுபட்டது. அரசாங்கம் ஒரு நிரந்தர குடியேற்றத்தை திட்டமிட்டது. ஆனால், முஸ்லிம் மக்கள் இந்த முகாம் வாழ்க்கைக்கு ஒரு மாற்றத்தையே கோரினார்கள். அவர்கள் தாம் இடம் பெயர்ந்து வாழும் பகுதிகளில் நிரந்தமாக குடியேற்றப்படுவதை விரும்புவதில்லை.

"தாங்கள் விரும்புவது போல வடக்குக்குப் போவதில் தங்களுக்கு உள்ள இயலாமையை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். 100%மாக வடக்குக்கு தாம் திரும்பிப் போக சில காலம் எடுக்கும் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள் ஆனால், அதுவரை தாம் இந்த மோசமான நிலைமைகளைக் கொண்ட அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கமுடியாது. இந்த மீள்குடியேற்றத்தை திரும்பிச் செல்வதற்கான தயாரிப்பைச் செய்வதற்கு உதவக்கூடிய ஒரு இடைக்கால செயல்முறையாக ஏற்றுக் கொண்டார்கள்" (ஹஸ்புல்லா 1996:11)

இந்த 1996இல் புத்தளத்தில் செய்யப்பட்ட மீள்குடியேற்றம் பல பின்விளைவுகளைத் தந்தது. உதாரணமாக புத்தளம் முகாம் ஆய்வுகள் (ஹஸ்புல்லாவும் பிறரும் 1999) புத்தத்திலுள்ள இடம்பெயர்ந்தோரில் 2/3 பகுதியினருக்கும் அதிகமானோர் நிரந்தர வீடமைப்புக்கான மீள்குடியேற்ற உதவித் தொகையான ரூ.35,000/-ஐ ஏற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டிவர் யார் என்று காட்டுகின்றன. அதேவேளை, இந்த மீள்குடியேற்றத்த திட்டத்தின் இன்னொரு பக்கத்தையும் இவ்வாய்வுகள் உணர்த்தின. இடம்பெயர்ந்த மக்களுக்கான முழு அளவிலான உதவித் தொகையை ஏற்றுக்கொள்ள வைப்பதில், இந்தத் திட்டம் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியையே பெற்றது. உதாணமாக, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நாலு ஆண்டுகட்குப் பிறகும் 10சதவீதமான இடம்பெயர்ந்தோர்கூட இந்த உதவித்தொகையில் முதலாவது பகுதிக் கொடுப்பனவுக்கு மேல் பெற்றுக்கொள்ளத் தயாராவில்லை. உண்மையில் இந்த முதலாவது கொடுப்பனவு (ரூ.10,000/-) இடம் பெயர்ந்தோர் ஒரு சிறுதுண்டு. நிலத்தை புத்தளத்தில் வாங்குவதற்குப் பாவிக்கப்பட்டது. இந்நிலம் ஒரு சிறு குடிசையை தமது தனிப்பட்ட நிலத்தில் அமைத்து சிதைத்து போன முகாம் வாழ்வுக்கு முடிவு கட்டவே பயன்படுத்தப்பட்டது. இந்தப் புதிய வதிவிடம் சில மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டிருப்பினும் கூட இடம்பெயர்ந்தோர் இந்த இடத்தை அதிக கௌரவம் வாய்ந்ததாகவும் தமது குடும்ப வாழ்வுக்குரிய அந்தரங்கத்தை ஓரளவுக்காவது தருவதாகவும் கருதினர்.

இடம்பெயர்ந்த மக்கள் ஏன் இந்த மீள்குடியேற்ற உதவித் தொகையின் மிகுதிப் பகுதியைப் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இங்கு விளக்கப்பட வேண்டும். இதற்கான பிரதான காரணம் என்னவென்றால், இந்த மீள்குடியேற்ற உதவித் தொகையில் உள்ள ஒரு நிபந்தனையான, உதவித் தொகையின் கடைசிப் பகுதியையும் பெற்றுக் கொண்டதும், இடம்பெயர்ந்தோருக்கான உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு விடும் என்பதாகும். இந்த இடம்பெயர்ந்த மக்கள் ஏன் உணவு நிவாரணத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற கேள்வி இங்கு எழுகிறது. இந்த மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதியின் பொருளாதார சூழல் எவ்வளவு துாரம் அவர்கள் தம்மைத் தாமே பராமரித்துக் கொள்ளப் போதுமானது என்ற கோணத்திலிருந்து இந்த விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

தற்போது, இடம்பெயர்ந்த மக்கள் புத்தளம் மாவட்டத்தின் நான்கு கரையோர பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பகுதிகளில் செறிந்துள்ளனர். 1990இல் இடம்பெயர்ந்தோர் வருகைக்குப் பின் இப்பிரதேச மொத்த சனத்தொகை இரண்டு மடங்காகியுள்ளது. இந்த நான்கு கரையோரப் பிரதேசங்களும், இந்த நாட்டின் குறைவிருத்தி அடைந்த பிரதேசங்களில் உள்ளடங்குவனவாகும். பாரம்பரியமாக, மீன்பிடி தான் இப்பிரதேச மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கையான இருந்து வருகிறது. அத்துடன் இம்மக்கள் இப்பிரதேசக் காற்று வாய்ப்பாக இல்லாததால் ஆறுமாதங்கள் மட்டுமே அம் மீன்பிடியையும் செய்யக் கூடியவர்களாக உள்ளனர்.




19

நன்றி - நூலகத்திட்டம்




# நோர்வே

# "No Way?"

நோர்வேயை விட்டால் "நோ வே" (No Way) என்ற தலைப்பில் கடந்த 19ஆம் திகதி லங்காதீப பத்திரிகையில் உபுல் ஜோசப் பெர்ணாண்டோவின் பத்திக் கட்டுரை வெளியாகியிருந்தது. கடந்த 19 ஞாயிறு சிங்களப் பத்திரிகைகளில் "10ஆம் திகதி ராஜகிரியவில் நடந்த சம்பவம் புலிகள் யாரென்பதை தெளிவுபடுத்தி விட்டது. பேச்சுவார்த்தைக்கான ஆரம்பங்கள் நடந்து கொண்டிருக்கும் போதே இத்தகைய கொடுரச் சம்பவங்களில் புலிகள் ஈடுபடுகிறார்கள். இதற்கு மேலும் பேச்சுவார்த்தை அவசியமா?" என்கிற கருத்துப்பட சில கட்டுரைகள் வெளிவந்திருக்கிறன. லங்காதீப பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் மற்றும் சில பத்திக் கட்டுரைகள் என்பன பேச்சுவார்த்தையைத் தவிர வேறு வழியில்லையென்றும் இனி தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் போரை மேலும் பரவலாக்குவதையே செய்யும் என்றும் போதும் இந்த அவலம் என்றும் தெரிவிக்கின்றன. பயங்கரவாதத் தாக்குதல் நடக்கின்ற போது சமாதானப் பேச்சு தேவைதானா என்கிற அந்த ஆசிரியர் தலையங்கத்தின் இறுதியில் "..சமாதானம் வந்தால் தோல்வி பிரபாகரனுடையது. சமாதானத்தை தோற்றுவிக்க முடியாது போனால் அது பிரபாகரனின் வெற்றி. பிரபாகரனை தோற்கடிப்பதே பெரும்பான்மை மக்களின் விருப்பம். அப்படியாயின் சமாதானத்தை ஏற்படுத்தியாக வேண்டும்..." என்று எழுதப்பட்டிருக்கிறது.

### தொடர்பூடகங்களைக் கைப்பற்றி வரும் பாசிசம்

ஆனால் இதே லங்காதீபவில் தான் "கும்பகர்ண" எனும் பெயரில் பத்தியொன்றை (இது லங்காதீபவின் சகோதரப் பத்திரிகையான சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளிவரும் ஆங்கிலக் கட்டுரையின் சிங்கள வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது.) எழுதி வரும் சிங்கள வீரவிதானவின் தலைவர் சம்பிக்க ரணவக்க மற்றும் விசமத்தனமான பேரினவாதத்தைக் கக்கி வரும் உபுல் ஜோசப் பெர்ணாண்டோ போன்றோரின் கட்டுரைகளும் வெளிவருகின்றன



பேச்சுவார்த்தைக்கெதிரான ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தின் போது

என்பதும் குறிப்பிடத்தக்கது. லங்காதீபவை திவயின பத்திரிகையுடன் ஒப்பிடும் போது அது நடுநிலையான பத்திரிகை என பேசும் பலர் எம்மத்தியில் உளர். சந்தையில் அதன் விற்பனையும், அதன் உரிமையாளர்களின் அரசியல் நலன்களைப் பற்றியும் சரிநிகரில் தனியான கட்டுரை ஏற்கெனவே வெளிவந்துள்ளது.

பேரினவாதமயப்பட்ட சிங்களச் சூழலில் எந்தத் தொடர்பூடகங்களும் கூட விதிவிலக்கில்லை என்பது தொடர்ச்சியாக எமக்கு உறுதி-செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இவை சமூகத்தில் ஆற்றும் பாத்திரம் மிகவும் காத்திரமானவை என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. இன்று அனைத்து பேரினவாத இயக்கங்களையும் ஒன்றுதிரட்டி ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை அமைத்து தீவிரமாகவும் பகிரங்க மற்றும் தலைமறைவு வேலைமுறையை கொண்டுள்ளதுமான சிங்கள வீரவிதான அமைப்பு இந்தத் தொடர்பூகங்களைக் கைப்பற்றித் தான் தமது பாசிச பிரச்சாரங்களைப் பரப்பி வருகின்றன. அவை மெதுமெதுவாக இந்த தொடர்பூடகங்களுக்குள் ஊடுறுருவி மிகக் கவனமாக தமது காரியத்தை திறம்பட முடித்து விடுகின்றன. சிங்கள வீரவிதானவின் அணியில் இருந்து தன்னைத் துண்டித்துக் கொண்டவரும் அதற்கு முன்னர் சிங்கள பேரினவாதத்துக்கு தலைமை தாங்கிச் சென்றவரும் ஜாதிக்க சிந்தனய மற்றும் சிந்தன பர்ஷதய போன்ற இயக்கங்களின் தலைவரும், காலய எனும் பேரினவாத இணையத்தளத்தை நடத்தி வருபவருமான நளின் டி சில்வாவின் எழுத்துக்கள் சமீப காலமாக பேச்சுவார்த்தை விடயம் குறித்து எழுதி வரும் கட்டுரைகள் உலகளவில் நோக்கப்படுகின்ற கட்டுரைகளாக இருக்கின்றன. நோர்வே தலையீடு சம்பந்தமாக அவர் தி ஐலண்ட் பத்திரிகைக்கு எழுதிய சமீபத்திய கட்டுரைகளுக்கு இணையத்தளங்கள் பலவற்றில் இணைப்பு (link) கொடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### பாசிசத்தின் கட்டுப்பாட்டில் அரசு

இந்தப் பின்னணிகளுடன் தான் தற்போதைய பேச்சுவார்த்தையை எதிர்த்து கிளம்பியுள்ள எதிர்ப்புக்களை ப் பார்க்க வேண்டியுள்ளது. ஒரு புறத்தில், இத்தனை ஆண்டுகளாக பேச்சுவார்த்தை, உடன்படிக்கை என தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்த தமிழ் மக்களின் நிலையில் இருந்து தற்போதைய முயற்சியின் நம்பகத்தன்மை குறித்து தமிழ் மக்கள் எச்சரிக்கைகளுடன் கூடிய சந்தேகங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்க, மறுபுறத்தில் இம்முயற்சி குறித்து எழுப்பப்படும் சந்தேகங்களும், பிரச்சாரங்களும், எதிர்ப்புகளும் இதற்கு நேரெதிராக உள்ளன. தமிழ் மக்களின் உரிமைகளை மறுப்பவையாக அவை அமைகின்றன. சிங்கள வீரவிதான அமைப்பும், அதன் முன்னணியான பயங்கரவாத எதிர்ப்பு தேசிய முன்னணியும் ஏனைய பேரினவாத அமைப்புகளை திரட்டிக்கொண்டு நாட்டில் பல பாகங்களிலும் நடத்தி வரும் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மற்றும் நோர்வே தூதரகத்திற்கு முன் இரு தடவைகள் நடத்தி முடித்திருக்கிற ஆர்ப்பாட்டங்கள் என்பன எல்லாம் உணர்த்தி நிற்பவை என்னவெனில் சிங்கள பாசிச சக்திகளிடமிருந்து தப்பி இந்த முயற்சிகளை அரசாங்கமொன்று செய்வதாயின் முதலில் அது தனது பேரினவாத சித்தாந்தங்களிலிருந்து முறித்துக் கொண்டதாகவும், அந்த பேரினவாத தற்கொலையின் அடியாக இருந்து கொண்டு பேரினவாத சக்திகளுக்கு (கடந்த காலங்களைப் போல) கட்டுப்படாததாகவும் இருப்பது முன்நிபந்தனையாகிறது. ஆனால் இந்த அரசாங்கம் இதுவரை அதனை உறுதி செய்யவில்லை. தனது அரசாங்கத்தின் தப்பிப்பிழைப்புக்காக ஏகாதிபத்தியம், பேரினவாதம், உள்ளூர் முதலாளிகள் என பலவற்றிலும் தங்கியிருந்து கொண்டு இந்த முயற்சியைச் செய்து வருகிறது. அரசு நேர்மையாகவும் இந்த சக்திகளுக்கு கட்டுப்படாமலும் துணிவாக இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாயின் முதலில் அரசாங்கதின் தீர்வுப் பொதியில் நம்பகமான மாற்றம் இருந்திருக்க வேண்டும். ஆனால் 1995 ஓகஸ்டில் வெளியிட்ட தீர்வுப் பொதி பேரினவாத நிர்ப்பந்தங்கள் காரணமாக வெட்டிக்கொத்தி இறுதியாக தீர்வுக்கு கிஞ்சித்தும் உதவாத "பொதி"யை இன்றும் முன் வைத்து வருகிறது.

### மீண்டும் கவிழக்கூடிய நோர்வே புதிய அரசாங்கம்

நோர்வே தொலைகாட்சியில் சகல சனல்களிலும் போகின்ற முக்கிய செய்திகளை விரும்பிய நேரத்தில் வசனங்களாகப் பார்க்கலாம். நோர்வேயின் தலையீட்டை சிங்களப் பெரும்பான்மை மக்கள் எதிர்ப்பதாக இங்கு தொலைக்காட்சியில் அவ்வாறு காண்பிக்கப்பட்ட செய்தியை பார்த்த சில நோர்வேஜியர்கள் "அரசாங்கம் கட்டுப்பட்டிருக்கிற இந்த பௌத்த சக்திகள் எதிர்க்கும் நிலையில் இது சாத்தியமா?" என்கின்றனர்.

நோர்வேயின் பாராளுமன்றத்தில் விவாதமொன்றின் இறுதியில் வாக்கெடுப்புத் தோல்வியினால் கடந்த வாரம் அரசாங்கம் பதவி கவிழ்ந்ததது. இலங்கையின் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த வொல்லேபேக் காட்டிய ஆர்வத்தை தற்போது புதிதாக பதவியிலமர்ந்துள்ள தொழிற்கட்சி அரசாங்கத்தைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்



நோர்வேயின் புதிய வெளிநாட்டு அமைச்சர் தோர்ஜோர்ன் ஜக்லான்ட்

தோர்ஜோர்ன் ஜக்லான்ட் (இவர் இதற்கு முன்னர் 1996 ஒக்டோபரிலிருந்து 1997 ஒக்டோபர் வரையிலான காலப் பகுதியில் பிரதமராக இருந்தவர். தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய அந்தஸ்துள்ளவர்) காட்டக் கூடியவர் அல்ல எனும் கருத்து சிலரிடம் நிலவுகிறது. தற்போது பதவியிலுள்ள அரசாங்கமும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நடக்கப்போகும் தேர்தல் வரையாவது தாக்குபிடிக்குமா என்ற சந்தேகம் நிலவுகிறது. தற்போதைய அரசாங்கமும் பாராளுமன்றத்தில் பலமுள்ள கட்சியில்லை. ஓரிரு பெரும்பான்மைப் பலத்திலேயே உள்ளது. அதே வேளை இலங்கை விவகாரத்தில் நோர்வே நிச்சயம் விட்ட இடத்திலிருந்து தொடரும் என்றாலும் அக்கறையுடன் கவனமாக செய்யக்கூடிய நபராக ஜக்லான்ட் இருப்பாரா என்கிற சந்தேகமும் நிலவுகிறது.

### ஜே.வி.பி.யின் பாசிச முகம்

தற்போதைய பேச்சுவார்த்தையை எதிர்த்து இதனை முறியடித்தே ஆவோம் என கங்கணம் கட்டிக்கொண்டு எழும்பியுள்ள சிங்களப் பேரினவாதத்துக்கு துணை சேர்த்துள்ள ஜே.வி.பி. கடந்த காலங்களைப் போலவே இம்முறையும் இறங்கியுள்ளது. ஜே.வி.பி. ஆரம்பத்திலிருந்தே அடக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை கட்சிக்குள் கொண்டிருந்தது. அதற்கு மார்க்சிய விளக்கம் தரப்பட்டது. மலையகத் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டின் போது இந்திய பெருமுதலாளித்துவ வர்க்கத்தின் விஸ்தரிப்புவாதத்தின் கருவிகள் என "மார்க்சிய" விளக்கம் தரப்பட்டது உறுப்பினர்களுக்கும் மக்களுக்கும். அதன் பின்னர் இனப்படுகொலைகளைத் தொடர்ந்து ஈழப்போராட்டம் உக்கிரமடையத்தொடங்கியதும் இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வேலையென்றும் உலகைத் துண்டாடி சுரண்டுவதே அவர்களின் புதிய கொள்கை என்றும், அந்த ஏகாதிபத்தியம் ஈழப்போராட்டத்தின் பின்னணியில் இருந்து இயக்குகின்றது என்றும் "மார்க்சிய" விளக்கம் தரப்பட்டது. 1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் போதும் இந்திய ஊடுருவல் என்றும் இந்தியா ஈழத்தை தமது புவியியல் பிரதேசத்துக்கு உட்படுத்தி இலங்கையை கைப்பற்றப்போகிறது என்றும் அந்த முதலாளித்துவ எல்லைக்குள் இலங்கையை தள்ளிவிட முடியாதென்றும் வழமையான "மார்க்சிய" விளக்கம் தரப்பட்டது. 1987-1989இல் பிரேமதாச காலத்தில் படுபயங்கரமாக ஒடுக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொன்றொழிக்கப்பட்டு கட்சியின் தலைவர் விஜேவீர உட்பட மத்திய குழுவில் (சோமவங்ச அமரசிங்க தவிர்ந்த) அனைவரும் கொல்லப்பட்டு கட்சியிலுள்ள எஞ்சியவர்கள் பூரண தலைமறைவுக்குப் போய் அதன் பின்னர் 1993இல் மீண்டும் பகிரங்கமாக வெளிவந்தனர்.

ஜே.வி.பிக்குள் பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் நடத்தப்பட்டு, அவற்றில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திய பல சக்திகள் கட்சிக்குள் அது ஏற்றுக் கொள்ளப்படாததன் காரணமாகவே பல தடவைகள் பல சக்திகள் வெளியேறியிருக்கின்றன. 1993இல் ஜே.வி.பி. வெளிவந்த போதும் கட்சிக்குள் இந்த தேசிய இனப்பிரச்சினை குறித்த விவாதங்கள் தொடர்ந்தன. கட்சிக்குள் அது குறித்த விவாதத்தை நடத்துவதற்கான ஜனநாயகம் கூட இலலையென்கிற நிலை வந்ததும் சில குழுக்கள் வெளியேறின. தேசிய இனப்பிரச்சினைக்கு உங்கள் தீர்வு என்ன என்கிற கேள்வி எழுப்பப்படுகின்ற போதெல்லாம் வழமையான பாணியில் "சோசலிசம் வரட்டும்" என்கிற ஒரே சூத்திரத்தை திரும்பச் திரும்பச் சொல்லி கட்சிக்குள் நம்ப வைக்க முயன்றதைப் போலவே ஏனையோரையும் நம்பச் செய்யலாம் என்று நம்பினர். இன்னமும் அது குறித்த கொள்கை நிலைப்பாடு தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறினர். அது 1993இல் சரி. ஆனால் ஏழு வருடங்களின் பின்னரும் "கொள்கை நிலைப்பாடு தயாரிக்கப்படவில்லை" என்கிற வாதத்தை நம்ப எந்த மாங்காய் மடையர்கள் இருக்கிறார்களோ தெரியாது. யுகோஸ்லேவியா தாக்குதலுக்கு எதிராக ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்ய கொள்கை நிலைப்பாடொன்று உள்ளது. பொஸ்னியாவுக்கு, ஈராக்குக்கு எதிரான யுத்தங்களை எதிர்த்து குரல் கொடுக்க கொள்கை நிலைப்பாடு உள்ளது. தமது சகோதர இன மக்களின் அவலத்தை எதிர்த்து குரல் கொடுக்க நிலைப்பாடு ஒன்றும் இல்லையென்பதை யார் நம்பப் போகிறார்கள். குறைந்த பட்சம் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்காகக் கூட குரல் கொடுக்காத ஒரு அமைப்பா அவர்களின் தலைவிதி குறித்து பேசப் போகிறது.

இனிமேலும் மார்சிய முகமூடிக்குள் இருந்து கொண்டு இப்படி தொடர்வதை விட பகிரங்கமாக தம்மை இனங்காட்டிச் செயற்படுவது குறைந்தது அடுத்த தேர்தலில் பேரினவாத வாக்குகளையாவது பொறுக்கிக்கொள்ள ஜே.வி.பிக்கு இயலும். இவ்வளவு காலமும் பாசிசத்துக்கு துணை போகும் இயக்கமாகத் தான் இருந்து வந்தார்கள். இனி நேரடியாகவே பாசிச இயக்கமாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது எப்போதும் போல சிங்கள மக்களின் இயக்கமாகவே இருந்து விட்டுப போகட்டும். அடக்கப்படும் சக்திகளுக்கு தமது தலைவிதியை எவ்வாறு நிர்ணயிப்பது என்பது தெரியும். நிச்சம் ஜே.வி.பி.யிடம் வந்து தீர்வு கேட்கப் போவதில்லை. நோர்வே தலையீட்டை எதிர்த்து நாடளாவ ஆர்பாட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிற ஜே.வி.பி.க்கு தமிழ் மக்கள் வாழ்த்து தெரிவிக்கட்டும். தமது உரிமைகளுக்கு தாம் தான் இறுதி வரை போராட வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதி கொள்ளட்டும். தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கட்டும்.

**-என் சரவணன்**

நன்றி - நூலகத்திட்டம்





# தேவை: சினிமாவுக்கு ஓர் இயக்கம்!


சமீபத்தில் நடந்த ஒரு விழாவில் நடிகர் ரஜினிகாந்த் தமிழக முதல்வரிடம் தான் இதுவரை எந்தக் கோரிக்கையையும் முன்வைத்ததில்லை என்றும், ஆனால், வீடியோ திருட்டை ஒழித்து சினிமாத் தொழிலைக்காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் முதன்முறையாக தற்போது முன்வைப்பதாகவும் கூறினார்.


எல்லாத் திருட்டும் ஒழிக்கப்படவேண்டியது தான். வீடியோ திருட்டும் கூட. வீடியோ திருட்டினால் சினிமாவின் வர்த்தகம் பாதிப்பிற்குள்ளாகிறது என்பது வெளிப்படை. ஆனால், இன்றைய தமிழ்ச் சினிமாவின் சரிவிற்கு வீடியோ திருட்டு மட்டுமே மூலகாரணம் என்று கூறுவது அதன் வர்த்தகத்தைப் பொறுத்தவரை கூட உண்மையானதல்ல.


கிரிஸ் கர்னாட்


கருணாநிதி


ரஜினி


ஸியாம் பெனகல்


கட்டுரையாளர் அம்ஷன்குமார்

பல காலமாக திரைப்பட விநியோக உரிமையை முன் பணம் கொடுத்து வாங்க வந்த விநியோகஸ்தர்கள் சமீபகாலமாக அந்த வாடிக்கையை இரண்டு அல்லது மூன்று நடிகர்கள் நடிக்கும் படங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமளவுக்கு ஒரு சலுகையாகக் குறைத்துள்ளனர். இதனால் மற்ற நடிகர்கள் அனைவரின் படங்களுடைய விதி நிர்ணயிக்கப்பட முடியாது போகின்றது.

பிரதான சினிமா கலைஞர்கள் வாங்கும் அளவுக்கதிகமான சம்பளத்தினால் படத்தின் தயாரிப்பு செலவு கட்டுக்கடங்காமல் போகின்றது என்ற அபாயச் சங்கு ஊதிய தயாரிப்பாளர்கள் செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு இருக்கிறார்கள். பரமபத விளையாட்டினைப் போல கலைஞனின் மார்க்கெட் உயர்வும் சரிவும் கொண்டுள்ள சினிமா உலகில் புறந்தள்ளப்படுபவர்கள் கைத்துப் போன மனநிலையுடன் தொலைக்காட்சித் தொடர்களை நோக்கிப் போகிறார்கள்.

கலைஞர்களின் சினிமாவாசம் நிரந்தரமானதல்ல என்பதாலேயே சினிமாவின் ஆரோக்கியத்திற்கும் செயல்பாட்டிற்கும் கூட நிச்சயமான விதிகள்,நடைமுறைகள் இருக்கக் கூடாதா என்ன?

சினிமா தொழிலின் பல பிரச்சினைகளும் ஒன்றுடன் சிக்கலான தொடர்பு கொண்டிருப்பினும் நாம் ஒவ்வொன்றாக அவற்றைப் பார்த்து பரிசீலிக்க முடியும். முதலாவதாக தயாரிப்புச் செலவு. ஒரு முழுநீளப் படத்தை முப்பது லட்சரூபாயில் எடுக்க முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரி மாதம் நடைபெற்ற 31ம் வருட இந்திய உல்கத்திரைப்பட விழாவில் 'இந்தியன் பனோரமா' என்கிற ஒரு பிரிவில் கடந்த வருடம் இந்தியாவில் தயாரான குறிப்பிடத்தகுந்த 16 பட்ங்கள் காட்டப்பட்டன. இவற்றில் ஒரு சில படங்கள் கூடுதலான பட்ஜெட்டுடன் எடுக்கப்பட்டிருந்தன. மிக அதிகமான பொருட் செலவில் ஜபார் படேல் இயக்கிய 'பாபாசாகேப் அம்பேத்கார்' என்னும் ஆங்கிலப்படம் தயாரிக்கப்பட்டிருந்தது. சரித்திரமாகிவிட்ட ஒரு பிரம்மாண்டமான காலகட்டத்தையும் அதில் வாழ்ந்த மகோன்னத மனிதர்களையும் தோற்றுவிக்க ஏராளமாக செலவு செய்துதான் தீரவேண்டும் என்கிற கட்டாயம் தயாரிப்பு பொருளாதாரத்தை நியாயப்படுத்துகிறது.

மற்றப்படங்களில் பெரும்பாலானவை மேற்கூறப்பட்ட முப்பது லட்ச ரூபாய் பட்ஜெட்டுக்கும் குறைவான தொகையில் தயாரிக்கப்பட்டவை தான். இப்படங்களை இயக்கிய டைரக்டர்கள் பலரும் சர்வதேச புகழ்பெற்றவர்கள் என்பதும், குறிப்பிடத்தக்கது. ஷியாம் பெனகல், கிரீஷ்கர்னாட், ரிதுபர்ணா கோஷ், அபர்ணாசென், பங்கஜ் புடாலியா, ஜானு பருவா ஆகியோர் அவர்களில் சிலர். அமோல் பலேகர் பொட்டுக்கடலை வாங்கும் பணத்தில் தனது 'கைரே' என்கிற மராத்திப் படத்தை எடுத்ததாகத் தெரிவித்தார். ஜெயராஜ் எடுத்த 'கருணம்' மலையாளப் படம் 'ரயில்ரோட் மேன்' என்கிற ஜப்பானியப்படத்துடன் விழாவின் சிறந்த படத்திற்கான விருதைப் பங்கிட்டுக்கொண்டது. 'கருணம்' படம் ரூ. 20 இலட்சத்திற்கும் குறைவான தொகையில் எடுக்கப்பட்டிருந்தது. (16 எம்.எம்மில் எடுக்கப்பட்டிருந்த அப்படத்தின் வெளியீட்டுப்பிரதி மட்டுமே 35 எம்.எம்மில் பெரிதாக்கப்பட்டிருந்ததால் தயாரிப்பு செலவு கணிசமாகக் குறைந்திருந்தது.)

இவையாவும் எளிமையான கதையாடல்கள் கொண்ட படங்கள். கருத்து, பொழுது போக்கு, தொழில் நுட்ப நுணுக்கங்கள் ஆகிய அம்சங்கள் குறைவுபடாமல் எடுக்கப்பட்டிருந்த படங்கள். சினிமா, கலைஞனின் ஆளுமைக்குட்பட்ட சாதனம் தான் என்பதை உறுதிபடக்கூறிய படங்கள்.

ஆனால், ஒரு சராசரியான தமிழ்ப்படத்தை எடுக்க ஒன்றரை கோடி ரூபாய் தேவையாக இருக்கிறது. முதலீடு செய்த பணம் திரும்பி வரும் என்கிற நம்பிக்கை அறவே இல்லை. பத்திற்கு ஆறு, அல்லது ஏழு படங்கள் படத்தயாரிப்பாளரை திவாலாக்குகின்றன. இந்நிலையில் எத்தகைய உத்திரவாதத்துடன் இவ்வளவு செலவு செய்வதற்கு தயாரிப்பாளர்கள் துணிகிறார்கள்? கடன் வாங்கும் சக்தியையும் குருட்டு அதிர்ஷ்டத்தின் நம்பிக்கையையும் மட்டுமே இவர்கள் துணை தேடியிருப்பது தெளிவு.

மேற்கூறப்பட்ட உதாரணங்களை வைத்துப் பார்க்கும் பொழுது சினிமா என்கிற சாதனம் அப்படியொன்றும் பயமுறுத்தத்தக்க முதலீட்டை முடக்கும் சாதனமல்ல என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. அப்படியென்றால் நமது படங்களின் அசாத்திய தயாரிப்பு செலவிற்கான காரணங்கள் என்ன?

சினிமா என்றவுடனேயே எளிமையை முரட்டுத்தனமாக ஒதுக்கிவைக்கிற சுபாவத்தை சினிமா சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டிருப்பதும், நட்சத்திரங்களின் ஊதியமும் - நட்சத்திரம் என்பது நடிகர்கள் மட்டுமல்ல, நட்சத்திர அந்தஸ்து பெற்ற அனைவருமே எங்களால் தானே வியாபாரம் நடக்கிறது. எனவே நாங்கள் அதிகத் தொகை கேட்பதில் என்ன தவறு என்பது இவர்களது வாதம். இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். இவர்களுக்கு இத்தகைய சக்தியை அளித்தது யார்? சினிமா என்கிற சாதனம். சினிமா என்கிற சக்தியை நம்பத் தொடங்கி படமெடுக்கத் துணிந்தால் இவர்களது பேரம் தவிடுபொடியாகி விடும். இதற்காக சினிமாவில் தனிமனிதரான கலைஞருக்கு ஆகர்ஷிக்கும் சக்தி இல்லை என்று நாம் கூறுவதாக நினைக்க வேண்டாம். ஆனால், அது எந்தக் கட்டத்திலும் சினிமா சாதனத்தை விட வலிமையானதல்ல.

ஒரு வாதத்திற்காக இன்று மிகவும் பிரபல்யமான நடிக நடிகையர், தயாரிப்பாளர், இயக்குனர், மற்றும் இசையமைப்பாளர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடகம் போடுவதாக வைத்துக் கொள்வோம். அந்த நாடகத்திற்கு எத்தகைய வரவேற்பு இருக்கும்? நாடகம் என்னும் சாதனம் இன்றுள்ள நிலையில் அது பத்து பதினைந்து தடவைகள் கூட அரங்கேறாது. நட்சத்திரங்களின் பிரமையில் தான் படம் ஓடுகிறது என்றால் அதே நட்சத்திரங்களின் சேர்க்கையினால் ஆன நாடகமுமல்லவா வெற்றி பெற வேண்டும்? சினிமாவில் பங்கு பெறுவதாலேயே அதன் பிரபலத்தை இவர்கள் தங்களுடையதாக பாவித்துக் கொள்கின்றனர். ஆனால், இவர்களை வந்தடையும் மெய்யான பலன் தான் என்ன?

பெரும்பாலான கலைஞர்களுக்கு சினிமா வாய்ப்பு என்பது கொம்புத் தேனாக பலகாலம் காத்திருந்த பின்னரே கிடைக்கிறது. அவ்வாறு வாய்ப்புக் கிடைத்தும் சினிமா உலகில் நிலவிவரும் வர்த்தக முறைகேடுகளால் அது சிலகாலமே இருந்து விட்டுப் பின்னர் நிரந்தரமாக நழுவி விடுகிறது. பல இயக்குனர்கள், நடிகர்கள் ஆகியோருக்கு முதல் படமே கடைசிப் படமாக அமைந்து விடுகிறது. ஏதோ ஒரு சிலர் நட்சத்திர அந்தஸ்துடன் நீண்ட காலம் நிலைக்கின்றார்கள் என்றால் அதற்கு அவர்களது உழைப்புத் தான் காரணம் என்று கூறுவதும் ஒரு வகையான புரளி தான். தோற்றுப்போனவர்கள் அனைவரும் உழைக்காதவர்கள் என்று சொல்வதன் மூலம் சினிமா உலகின் குறைபாடுகளை நாம் தொடர்ந்து நியாயப்படுத்த முனைகிறோம்.

அவ்வாறே பிரமாத வெற்றி பெறுபவர்களின் நிலை என்ன?

உதாரணமாக 25 வயதில் நுழையும் ஒரு நடிகர் கதாநாயகனாகத் தொடர்ந்து நடிக்க வேண்டுமென்றால் அவர் தனது வயதுக்கேற்ற வகையில் வேடங்களைத் தரிக்க முடியாது. 50 அல்லது 60 வயதிலும் கூட அவர் இளைஞனாகவே நடிக்க வேண்டும். வயதானவர் வயதானவராகவே நடிக்க எத்தனையோ கதாபாத்திரங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நமது நடிகர்களால் நடிக்க முடிவதில்லை. மிகுந்த தயாரிப்புச் செலவுடன் நாம் முன்னிறுத்தி வைத்திருக்கும் வணங்கா முடியான கதையாடல் அதற்கெல்லாம் இடம் கொடுப்பதில்லை. எனவே நடிக நடிகையர், கதாசிரியர்கள், இயக்குனர்கள் மற்றும் அனைவரும் ஒரே மாதிரியான வடிவத்தினுள் தொடர்ந்து சிறைப்படுத்தப்படுகின்றனர். இந்த சிறைப்படுத்தல் லாபகரமாக இருக்கும்வரை அவர்கள் குறைப் பெருமூச்சுகளை விடுவதில்லை. தங்களுக்கு எதிராக போக்குகள் மாறும்பொழுது கூட அவர்கள் கதையாடல்கள், தயாரிப்பு முறைகள், ஆகியன சீர்திருத்தம் பெறவேண்டும் என்று பேசுவதில்லை. மாறாக சினிமாவை நிந்திக்கவும் தங்களது அதிர்ஷ்டத்தை நொந்து கொள்ளவும் தயாராகி விடுகின்றனர்.

இந்த நிலைமைகள் ஒன்றும் மாற இயலாதனவல்ல. நல்ல படங்களை குறைந்த செலவில் எடுக்க வேண்டும் என்கிற ஓர் இயக்கம் இங்கு பரவத் தொடங்கினால் இவையெல்லாம் உடனடியாகவே கூட மாறிவிட வாய்ப்புகள் உண்டு. இதையெல்லாம் தமிழ்ச்சினிமா ஒன்றும் அறியாதிருக்கவில்லை. பாதை தெரியுது பார், உன்னைப்போல் ஒருவன், வீடு, சந்தியா ராகம் போன்ற பல படங்கள் குறைந்த முதலீட்டில் எடுக்கப்பட்டு இன்றளவும் நமது கருத்தைக் கவர்ந்தனவாக உள்ளவை தான். ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக நீண்ட இடைவெளிகளில் இம்முயற்சிகள் நடைபெறாமல் தொடர்ந்து நடைபெறவே நாம் இயக்கம் தேவை என்று கூறுகிறோம். அவ்வாறு எடுக்கும் நல்ல படங்கள் எல்லாமே வியாபார ரீதியில் வெற்றி பெற்று விடும் என்று உத்தரவாதம் தரவும் நாம் தயாராக இல்லை. மோசமான படங்களை அதிகப்பொருட் செலவில் எடுத்து அவற்றில் வெற்றி தோல்வி காண்பதைவிட நல்ல படங்களை குறைந்த செலவில் எடுத்து அவற்றில் வெற்றி தோல்வி காண்கிற நடைமுறை மேன்மையானதல்லவா?

சினிமா எடுப்பவர்கள், விநியோகிப்பவர்கள், அரங்கு உரிமையாளர்கள், படம் பார்ப்பவர்கள், பத்திரிகையாளர்கள் என்று அனைவரும் இந்த இயக்கத்தில் வெவ்வேறு பொறுப்புகளுடன் ஈடுபட வேண்டும். ஆனாலும் இதன் தேவையை மற்றவர்களை விடவும் முன்னதாகவே உணரவும் செயல்படத் துவங்குவதும் சினிமா கலைஞர்களின் உடனடியான பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவுமன்றோ அமையும்.

நன்றி: ஆறாம் திணை

## பெரியாரின் நூலுக்குத் தடை!



பெரியார் எழுதியுள்ள "உண்மை இராமாயணம்" என்ற நூலின் இந்தி மொழி பெயர்ப்பைத் தடை செய்ய உத்தரவிட்டுள்ளது உத்தரப் பிரதேச மாநில உயர் நீதிமன்றம். இந்த நூல் "இராம பக்தர்களின் மனதைப் புண்படுத்துவதாக உள்ளது" என்று கூறி இந்து மத வெறியர்கள் தொடுத்த வழக்கை உயர் நீதிமன்றம் 12 நாட்களுக்குள் விசாரித்து பெரியாரின் நூலைச் சட்ட விரோதமாக அறிவித்துள்ளது. பெரியார் எழுதிய இந்த நூல் உத்தரப் பிரதேச மாநில அரசால் 1971ம் ஆண்டு தடை செய்யப்பட்ட பொழுது உத்தரப் பிரதேச மாநில உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் "இந்த நூலின் நோக்கம் ஆரியர்களால் திராவிடர்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் அநீதிகளை எடுத்துக் கூறுவது தான். இதனால் இந்து மதம், இந்து மதத்தினரின் நம்பிக்கைகள் புண்பட வாய்ப்பில்லை" என்று தீர்ப்பளித்து தடையுத்தரவை ரத்து செய்தன. இப்பொழுது இந்து மத வெறியர்களின் ஆட்சியில் ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த தீர்ப்புக்கு நேர்மாறாக பெரியாரின் நூல் உயர் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

## பூலோக சொர்க்கத்தில் பட்டினிப் பட்டாளம்!

ஒரு வேளை சோற்றுக்கே வழியில்லாத பட்டினிப் பட்டாளம் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மட்டுமல்ல அமெரிக்காவிலும் உள்ளது. அந்நாட்டில் கிட்டத்தட்ட 3.6 கோடி பேர் அடுத்த வேளை சோற்றுக்குத் தினந்தோறும் கையேந்தும் நிலையில் காலந் தள்ளுவதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. பல்வேறு சமூக அமைப்புகள் அமெரிக்காவின் ஐந்து நட்சத்திர விடுதிகள், உணவகங்களில் மீந்து போய் குப்பையில் கொட்ட ஒதுக்கப்படும் உணவை வாங்கி இவர்களுக்கு வழங்கி வருவதால் தான் இந்தப் பட்டினிப் பட்டாளம் உயிரோடு உலவ முடிகிறது.

நன்றி -புதிய ஜனநாயகம்

நன்றி - நூலகத்திட்டம்



பேராசிரியர் சில்வா, கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிங்கள, ஆங்கில மொழி விரிவுரையாளராக் கடந்த 26 வருடங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். மனித உரிமைகள் தொடர்பாகவும், பெண்ணியக்கல்வி தொடர்பாகவும் அமெரிக்கா, ஆபிரிக்கா பல்கலைக் கழகங்களில் பணியாற்றியுள்ளார். Psycho Linguistics எனப்படும் தொடர்பாடல் முறையில் விசேட நிபுணத்துவம் பெற்றவர். சில்வா அவர்கள் தற்போது பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் தற்காலிக பணிப்பாளராக சேவையாற்றி வருகின்றார். பெண்கள் தினத்தை ஒட்டி அவருடனான நேர்காணல் ஒன்றை சரிநிகர் மேற்கொண்டது. அந்நேர்காணலிலிருந்து முக்கியமான பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

**✔ வடக்கு கிழக்கு, மலையகம் மற்றும் தென்னிலங்கை பிரதேசங்களில் அண்மைக்காலமாக பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பரவலாக இடம் பெற்று வருகின்றன. இது தொடர்பான உங்கள் அபிப்பிராயம் என்ன?**

உலகத்தில் யுத்தச் சூழல் நிலவும் பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்களுடன் ஒப்பிடும் போது இச்சம்பவங்கள் பொதுவானவையாகவே காணப்படுகின்றன. ஆனால், இந்தச் சிறிய தீவில் இவ்வாறான சம்பவங்கள் மிகவும் பயங்கரமானவை. எந்த இனத்தைச் சேர்ந்த பெண்ணாயினும், ஒவ்வொரு பாலியல் வல்லுறவுச் சம்பவத்தின் போதும் பாதிக்கப்படுவது ஒரு பெண்ணே. பெண்கள் அமைப்புகள் இவ்விடயம் தொடர்பாக சிங்கள, தமிழ் இன பேதமின்றி ஒன்றிணைந்து வன்மையாக எதிர்ப்பினையும் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் மட்டுமன்றி தெற்கு, மேற்கு ஆகிய பிரதேசங்களிலும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுகின்றன. இவ்விடயம் தொடர்பாக தனியே பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் வன்மையாக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

இதற்கான சரியான வழிமுறை தான் எதிர்ப்பினை, கண்டனத்தைத் தெரிவிக்க தொடர்பூடகங்களை கிரமமான முறையில் கையாளுவது. இதனால் பலரின் அவதானத்தை இவ்விடயத்தில் குவித்து விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். இச்சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், திரைப்படங்கள் போன்ற இலக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்வேகம் அளித்தலும் இங்கு முக்கியம்.

**பெண்ணியம் குறித்த உங்களின் புரிதல் யாது?**

பெண்ணியம் எனப்படும் Feminism என்பதனை நான் ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை. மேற்குலகில் இச்சொல்லுக்கு பல அர்த்தங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அங்கு பெண்ணியம் என்ற பெயரில் உள்ளாடைகளை எரித்து (Bra Burning) மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் மக்களின் கவனத்தையும் பிரபலத்தையும் பெற்றுக் கொள்ளவென மேற்கொள்ளப்படும் உபாயங்களாகும். எல்லாப் பெண்களும் அவரவருக்கு விருப்பமான வகையில் திருமணம் புரிந்து, குழந்தைகள் பெற்றோ பெறாமலோ, தொழில் புரிந்தோ புரியாமலோ வாழுவதற்கான உரிமையை - சகல மனிதருக்கும் உள்ள உரிமையை- சுதந்திரத்தை அனுபவித்தலையே நான் பெண்ணியம், பெண் சுதந்திரம் என்கிறேன்.

ஒரு சாதாரண பெண் என்ற ரீதியில் இரு பிள்ளைகளை வளர்த்துக் கொண்டு, அழகுணர்ச்சி நிரம்பிய பெண்ணாக வீட்டை அலங்கரித்துக் கொண்டு வாழவே நான் விரும்புகிறேன். அதேநேரம் பேராசிரியராக வேண்டும் என்ற விருப்பம் பூண்டு அவ்வாறே இலட்சியத்தையும் அடைந்தேன். ஒரு பெண் இவையெல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளுதல் கடினமான காரியமாகும். இவற்றின் போது முகம் கொடுக்கும் பிரச்சினைகளை வெற்றி கொள்ளுதலே இங்கு அவசியம்.

இந்தவகையில் "பெண்ணியம்" என்று நான் கருதுவது, "தீர்மானம் எடுக்கக் கூடிய உரிமையையும்" "முன்னேறுவதற்கான சம உரிமையையும் ஆகும்". முன்னேறுவதற்கான டுள்ளது. ஒரு பெண்ணை பயமுறுத்த, அடிக்க, வன்முறைக்குட்படுத்த ஆண்கள் தேவைப்படுகின்ற அதேவேளை, ஓர் ஆண் குற்றமிழைக்கும் போது அவர்களை திருத்த, பயமுறுத்த, தீர்மானம் எடுக்கக் கூடிய நாள் எப்பொழுதோ அப்பொழுது இவையெலாம் தகர்த் தெறியப்பட்டு விடும்.

இரண்டாவதாக, இவ்வாறான

<u>பெண்ணியம்:</u>

# தும்புத்தடி ஒரு சிறந்த குறியீடு!

*பேராசிரியர் சில்வா*

சந்தர்ப்பம் அற்ற, உரிமைகள் இல்லாத பெண்களுக்கென ஈடுபாட்டுடன் தொழிற்படுவதும் இதன் இன்னொரு பரிணாமமாகும்.

**✔ பெண்களுக்கெதிரான வன்—முறைகள்— குறிப்பாக வீட்டு வன்முறைகள், சிறைகளில் இடம்பெறும் வன்முறைகள் என பெண்கள் பலதரப்பட்ட வன்முறைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இதனை, பெண்களை இன்னும் சமூகம் கீழ்த்தரமாக மதிப்பதன் ஒரு அடையாளமாகக் கொள்ளலாம் அல்லவா?**

வீடுகளில் வன்முறைகள் இடம்பெறக் காரணம், நாம் சமையலறைக்குள்ளும், குழந்தைகள் பராமரிப்புக்குள்ளும் நம்மை வரையறுத்துக் கொள்ளாததே. இந்த வரையறைகளை மீறும் போது தான் நெருக்கடிகள்



தோன்றுகின்றன. இப்படித் தான் இருக்க வேண்டும் என சமூகம் எதிர்பார்க்கின்றது. இவற்றிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும் போது தான் வன்முறைகள் எம்மீது பிரயோகிக்கப்படுகின்றது. பெண்களை தமது கல்வியைத் தொடர, தொழில் புரிய, தனியே தீர்மானங்கள் எடுக்க அனுமதிக்க ஆண்கள் விரும்புவதில்லை. எச்சந்தர்ப்பத்திலும் பெண்களைத் தமக்குக் கீழ் அடிமைப்படுத்தியே வைத்திருக்க ஆண்கள் முயற்சிக்கின்றனர். விரும்புகின்றனர். நான் செய்த ஆய்வொன்றின் பெறுபேற்றின்படி, ஒரு பெண் தாம் கற்ற கல்வியின் தராதரத்தின் அடிப்படையில் ஒரு நிறுவனத்தில் சேவையாற்றி அதிகம் ஊதியம் பெற ஆரம்பிக்கும் வேளை தொடக்கம் அவளுக்கெதிரான வன்முறைகள் கிரமமாக அதிகரிக்க ஆரம்பிக்கின்றன.

அத்துடன், விலங்குகளைப் போன்று தனது சரீர பலத்தை காட்டும் இயல்பு ஆண்களிடம் காணப்படுகின்றது. இதற்கு காரணம் ஒரு விடயம் பற்றி தர்க்கம் புரியும், தொடர்ந்து விவாதிக்கும் பலம் அவர்களிடம் காணப்படாமையாகும். எனது அனுபவத்தின் அடிப்படையில், தமது கருத்துக்களைச் சரியான முறையில் வெளிப்படுத்த இயலாத, அம்முயற்சி வெற்றியளிக்காத சூழ்நிலையில் தான் ஆண்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

மேலும், இந்த வன்முறை அதிகரிப்புக்கு மதங்களும் பெரும் பங்கு வகிக்கின்றன. பெண்கள், பெண்களாக மதிக்கப்படாமல் தெய்வங்களாகக் கருதப்படுகின்றனர். மதத்தின் அடிப்படையில், ஒரு ஆணுக்கு கீழ்படியாமை பெரும் பாவமாக கருதப்படுகின்றது. சில மதங்களில் பெண்கள் தவறு செய்யும் போது அவர்களைத் திருத்துவது ஆண்களின் கடமை எனக் கூறப்பட்-

பழிவாங்க பெண்கள் தேவைப்படுவதில்லை.

அடுத்ததாக சிறைகளில் பெண் கைதிகள் அதிகம் வன்முறைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் உட்படக் காரணம், சிறைச்சாலைகளில் காணப்படும் இடநெருக்கடி எனலாம். இலங்கைச் சிறைகளில் பெண்களைப் போன்று ஆண்களும் அதிகம் நெருக்கடிகளுக்காளாகின்றனர். இந்த நிலையில் பெண் கைதிகள் இதற்குள் சிறைப்படுத்தப்பட்டவுடன், பிறரின் எரிச்சலுக்கும், வன்முறைகளுக்கும் அதிகம் உள்ளாக வேண்டியுள்ளது. கைதிகளை கட்டுப்படுத்தவென நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் ஒரே தன்மையான வேலை, மாற்றங்கள் இல்லாத சூழல் காரணமாக உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்களினால் சிறை நிர்வாகத்தை செம்மைப்படுத்த இயலாமல் உள்ளது. இதனாலும் அதிகம் பெண்களே பாதிக்கப்படுகின்றனர். முதலில் சிறை அதிகாரிகளை இவ்விடயத்தில் உற்சாகமூட்டி பயிற்சியளிக்க வேண்டும். மேற்கத்தேய நாடுகளிலும் இப்பிரச்சினை தொடர்பாக பலத்த நெருக்கடிகள், சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அங்கும் இவ்விடயம் பற்றி பரவலாகப் பேசப்படுகின்றது. இதனை ஒரு உதாரணமாகக் கருதி அரசு கைதிகளின் உரிமை தொடர்பாக அக்கறை காட்டுவதே உகந்தது.

**✔ பொதுவாக சமூகத்தில் பெண்ணியம் தொடர்பான அக்கறை / புரிதல் குறைவாகக் காரணம் என்ன என்பீர்கள்?**

நான் இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஆண்கள் பெண்ணியம் பற்றி அக்கறை காட்டுவதினால் தான் அடிப்படை வாத இயக்கங்கள் பல (Fundamentalist) தோன்றியுள்ளன. அமெரிக்காவில் விசித்திரமான கிறிஸ்தவ இயக்கங்களில் பெண்கள் கீழ்த்தரமாக நடாத்தப் படுகின்றனர். மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த பெண்கள் விடுதலையை தவறாக பயன்படுத்தியதினால் தான் இவ்வாறான விளைவுகள் ஏற்பட்டுள்ளதென்பது சிலரின் அபிப்பிராயமாகும். இதுவும் தவறானதொரு கண்ணோட்டமாகும். ஆண்கள் இவ்வாறான தவறான கண்ணோட்டங்களையும் உருவாக்கி விடுகின்றனர். எவ்வாறாயினும், மனித இனத்தின் எதிர்காலம், இயக்கம் முழுவதும் இரு சாராரிடமும் தான் தங்கியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஆனால் இக்கருத்தை ஏற்க மறுக்கும் இயல்பு இன்னும் காணப்படுகின்றது. புதிய தொழினுட்ப வளர்ச்சியின் காரணமாக சகலவற்றிற்கும் பெண்களிடம் தங்கிவாழ ஆண்கள் விரும்புகிறார்கள் இல்லை.

**✔ பெண்களின் சுயதீர்மானம் எடுக்கும் உரிமைகளை இன்னும் சமூகம் அங்கீகரிக்கவில்லை. உதாரணத்திற்கு வேண்டாத கருக்கலைப்பு தவறானது போன்ற கருத்துக்கள் மதத் தலைவர்—களினால் வற்புறுத்தப்படுகின்றதல்லவா...?**

இவ்வாறான சட்டங்கள் சமூகத்தின் அழுத்தங்களினால் மேற்கொள்ளப்படுபவை. சமூகத்தில் ஒரு சாராரை திருப்திப்படுத்தவென அங்கீகரிக்கப்படுபவை. மதத்தலைவர்களின் தலையீடு இதில் முக்கியமானது. நாம் மத வரையறைகளை தகர்த்தெறியும் அளவுக்குச் செல்லும் போதே இச்சட்டங்களின் பலம் நலிவடைந்து செல்லும் எனலாம். பெண்களுக்கு சுதந்திரமாக

சட்டங்கள் இல்லாவிட்டால் பெண்களை கட்டுப்படுத்த முடியாதென்பது பொதுவான அபிப்பிராயமாகும். கருக்கலைப்பு என்பது ஒரு பெண்ணின் சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை. இதனை எவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

**✔ பெண்கள் அமைப்புகள், பெண்கள் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் திருப்தியானவை எனக் கூற முடியுமா?**

பெண்கள் அமைப்புகள் பெண்களுக்கென ஆற்றியுள்ள பணிகள், வேலைத்திட்டங்கள் என்பன அதிகம். இவற்றின் சரியான பெறுபேறுகளை பெண்கள் அடைய, அதன் பலனை அனுபவிக்க இன்னும் ஒரு தசாப்தம் தேவைப்படும். அதற்கு ஒரு தசாப்தம் நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். எனினும் இவை போதுமானவை அல்ல. காயத்திற்கு தற்காலிகமாக போடப்படும் பிளாஸ்திரி போன்று, இவையெலாம் பிரச்சினைகளுக்கு தற்காலிகத் தீர்வு மட்டுமே.

எனது தனிப்பட்ட கருத்தின்படி பெண்களின் உரிமைகளை பெண்களே கட்டுப்படுத்தி வைத்துள்ளனர். உதாரணத்திற்கு குழந்தை வளர்ப்பை எடுத்துக் கொண்டால், ஒரு குழந்தையை வளர்க்கும் விதத்திலேயே அக்குழந்தையின் வாழ்க்கை தீர்மானிக்கப்படுகின்றது. ஆண் பெண் பேதமின்றி குழந்தைகளை வளர்த்தல், குழந்தைக்கு வழங்கப்படும் விளையாட்டுப் பொருட்கள், உடுத்தி விடப்படும் ஆடைகள் என்பன பற்றி கவனம் செலுத்தாமையே அடிமைத்தனத்தின் இயங்கு தளங்களாக உள்ளன.

உதாரணத்திற்கு, வீட்டில் உள்ள "தும்புத்தடி" ஒரு சிறந்த குறியீடாகும். ஆண்கள் அதனை பாவிப்பதிலிருந்து சிறுவயது முதலே விலக்கப்படுகின்றனர். அதேபோல் "சமையலறை" பெண்களுக்குரியதாகக்கப்படுகின்றது. இவையெலாம் தவறான செயற்பாடுகளாகும்.

அதேவேளை பெண்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. பெண்கள் அமைப்புகள், கல்விரீதியாக மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முனைய வேண்டும். பாடசாலைகளில் ஒவ்வொரு காலை வேளைகளிலும் இடம்பெறும் ஒன்றுகூடலில் மாணவர்களை ஈர்க்கும் வகையில் பெண்களை எப்படி மதிக்க வேண்டும் எனச் சிறு உரையை வழங்கலாம். அத்துடன் பாடசாலைப் புத்தகங்கள் இன்னும் பழமையைப் பேணும் இயல்பையே கொண்டிருக்கின்றன. சமூகம், சமயம், குடும்பம் பற்றி சம்பிரதாயபூர்வமான கருத்துக்களே இங்கு ஆதிக்கம் செலுத்துகின்றன. இவையெலாம் மீள திருத்தி எழுதப்படல் வேண்டும்.

வரலாற்று நூல்களும், மதம்சார்ந்த நூல்களும் வழமையாக ஆண்களால் எழுதப்படுகின்றமையால் அவை ஆண் நோக்குக் கொண்டவையாகவே உள்ளன. கடவுளும் ஒரு ஆணாகவே வர்ணிக்கப்படுகின்றார். இவையெலாவற்றையும் மாற்றத்திற்குள்ளாக்கும் பொறுப்பு பெண்கள் அமைப்பையே சேரும். பெண்கள் இவற்றில் தீவிரமாக ஈடுபட்டு தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டும். ஆளுமையை நிலை நாட்ட வேண்டும். அப்பொழுது தான் பெண்ணியக் கருத்துக்கள், விடயங்கள் என்பன இளைய சமுதாயத்தை அடையும் வாய்ப்பு அதிகரிக்கும். இவை பரந்தளவில் வெற்றியளிக்கக் கூடிய நடைமுறைகளாகும்.

*- ரத்னா*

## வல்லரசு ஜப்பானில் தீவிரமாகும் வேலையின்மை

மிகப் பெரிய பொருளாதார வல்லரசான ஜப்பானில் இரண்டாம் உலகப் போருக்கு பிறகு இதுவரை கண்டிராத வகையில் வேலையின்மையும் வறுமையும் தீவிரமாகி வருகிறது. கடந்த சில மாதங்களாக வேலையற்றோர் விகிதம் 5மூ வீதம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. மிகப் பெரிய தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. அல்லது நிர்வாகச் சீரமைப்பு என்ற பெயரில் ஆட் குறைப்பு செய்து தொழிலாளர்களை வெளியேற்றுகின்றன. குறிப்பாக அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் தமது சந்தையைப் பாதுகாத்துக் கொள்ள ஜப்பானிய நுகர் பொருட்களின் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகள் விதித்ததிலிருந்து ஜப்பானில் நெருக்கடிகள் முற்றத் தொடங்கிவிட்டன. மேலும் தெனி கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட நாணய மதிப்பு வீழ்ச்சியைத் தொடர்ந்து நெருக்கடி தீவிரமாகியது. இதனால் உற்பத்தி பெருகி சந்தை இல்லாத நிலையில் இன்று ஜப்பானில் 25 வீதத்துக்கம் மேலான ஆலைகள் கதவடைப்பு செய்துவிட்டன.

மிகப் பெரிய "நிசான்" மோட்டார் நிறுவனம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை ஆட் குறைப்பு நடவடிக்கையின் மூலம் வேலையிலிருந்து விரட்டியடித்துள்ளது. "பனசொனிக்" என்று வெளிநாடுகளில் அறியப்பட்டுள்ள ஜப்பானின் "மாட்சுஷிட்டா" மின் நிறுவனம் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலம் 40 வீத தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பியுள்ளது. இதன் விளைவாக வேலையற்றோரின் எண்ணிக்கை நாளும் பெருகி இன்று 35 லட்சம் பேராக உயர்ந்துள்ளது. ஜப்பானின் மூன்றாவது பெரிய நகரமான ஓசாகாவில் மட்டும் 25000 தொழிலாளர்கள் வேலையின்றிப் பரிதவிக்கின்றனர்.

ஜப்பானின் மொத்தத் தொழிலாளர்களில் நிரந்தரத் தொழிலாளர்களின் விகிதம் கடந்த சில ஆண்டுகளில் குறைந்து கொண்டே வருகிறது. அதெ ?நேரம் பகுதி நேரத் தொழிலாளர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களின் விகிதம் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவர்களின் எண்ணிக்கை மொத்தத் தொழிலாளர்களில் 50 வீதத்துக்கும் லோகவுள்ளது. இத்தகைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் அனைவரும் ஆலை மூடல் ஆட்குறைப்பினால் வேலையிழந்த நிரந்தரத் தொழிலாளிகளே ஆவர்.

வேலையிழந்து தத்தளிக்கம் தொழிலாளிகள் தமது மனைவி குழந்தைகளை உறவினர்களிடம் ஒப்படைத்து விட்டு நகரங்களிலேயே தங்கி வேலை தேடி அலைவதும் பின்னர் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவதும் அதிகரித்து வருகிறது. தலைநகர் டோக்கியோவில் மட்டும் 10,000க்கும் மேற்பட்டோர் வீடற்றவர்களாகப் பிச்சை எடுக்கின்றனர் என்று ஜப்பானியப் பத்திரிகைகளே ஒப்புக் கொள்ளுகின்றன. இவர்கள் சுரங்கப்பாதைகள், மேம்பாலங்கள், கைவிடப்பட்ட துருப்பிடித்துக் கிடக்கும் கார்களில் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர். தொழிற்சங்கங்களும் சில தொண்டு நிறுவனங்களும் அமைத்துள்ள "பிரட்லைன்","சூப்லைன்" எனப்படும் கஞ்சித் தொட்டி நிலையத்தில் மதிய நேரத்தில் தரப்படும் ஒரு துண்டு ரொட்டியுடன் ஒரு குவளைக் கஞ்சியைக்குடித்து விட்டு எப்படியோ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தீவிரமாகி விட்ட இக் கொடுமைகளை எதிர்த்து "ஜென்ரோரான்" எனப்படும் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பு போர்க்குணமிக்க பல்வேறு போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. ஜப்பானைப் பற்றி ஏகாதிபத்திய உலகம் பரப்பி வரும் மாயைகளைத் தகர்த்தெறிந்து ஜப்பானில் நிலவும் கொடுரச் சுரண்டல், அற்பமான ஊதியம் பற்றி அம்பலப்படுத்தி வருகிறது. ஒப்பந்தத் தொழிலாளர் உள்ளிட்ட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலைப் பாதுகாப்புக் கோரியும் அரசியல் பொருளாதார மாற்றங்களுக்காகவும் தொழிற் சங்கங்கள் நடத்தி வரும் தொடர் போராட்டங்களைக் கண்டு ஜப்பானிய ஆட்சியாளர்கள் அதிர்ச்சியடைந்து நிற்கிறார்கள்.


நன்றி - நூலகத்திட்டம்



# சவர்க்காரக் குமிழிகள்

ஜயதிலக்க கமலவீர

இருபத்தைந்து வருடங்களுக்கு முந்திய ஒரு நாள் தற்கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தேன் நான். அப்போது எனக்கென்றொரு உயிர் இருந்தது. நான் அழித்து விடக்கூடிய உயிர் என்னுடைய உயிரின் முழுமையையுமே ஒரு பெண்ணுடனான என் காதலுக்காக நான் அர்ப்பணித்திருந்தேன். அவளுக்கும் எனக்கும் இடையில் நிலவிய காதல் இந்த உயிர் எவ்வளவு இன்பகரமானது என்று என்னை வியப்பூட்டுவதாய் அமைந்திருந்தது. ஒரு இறகுபோன்ற லோசான பலூன் போன்றதாய் என் உயிர் அமைந்திருந்தது. அதை வானத்தை நோக்கி உயர உயரப் பறக்கவிட்டு நான் விளையாடினேன். சமயங்களில் அது ஒரு அழகான பட்டமாக மாறிக்கொள்ளும். வெண்பஞ்சுக் குவியல்களாகப் பரந்துகிடந்த வானத்து முகில்களை தொட்டுவரும்வரை அந்தப்பட்டத்தை நான் ஏற்றுவேன். வானத்தின் மிக மிக உயரமான பகுதியில் ஆடி அசைந்து கொண்டிருந்த எனது உயிரை அகன்ற வழிகளுடன் ஆசையாகப் பார்த்துக் கொண்டிருப்பேன்.



ஆனால், வானத்து வெண்பஞ்சுக் குவியல்களிடையே அசைந்தாடிக் கொண்டிருந்த என் உயிர் ஒரு நாள் குத்துக்கரணம் அடித்தபடி நிலத்தில் வீழ்ந்தது. நான் காதலித்த அப் பெண் தன்னுடைய இன்னொரு காதலனுக்குக் கைகாட்டுவதைக் கண்டபோது எனது உயிரைப் பற்றிப்பிடித்து அழித்துவிட வேண்டுமென உணர்ந்தேன். அதைப்பிடித்து வீதியோரம் இருந்த ஒரு மரம் வரைக்கும் தள்ளிக்கொண்டு வந்தேன். ஒரு கயிற்றிலே அதனைக் கட்டி அந்த மரத்தின் கிளையொன்றில் தூக்கிலிட நான் முயன்றேன். அப்போது தான், எங்கிருந்து என்று அறியமுடியாதபடி திடீரென என் முன் தோன்றிய ஒரு பொலிஸ்காரன் என்னைக் கைது செய்தான். அவன் பிறகு என்னை நீதிமன்றுக்கு கொண்டு வந்தான்.

"தற்கொலை செய்தல் மிகவும் பாரதூரமான ஒரு குற்றம்" - ஆழமான, அழுத்தம் திருத்தமான, உறுதியான வார்த்தைகள் நீதிபதியிடமிருந்து வெளிப்பட்டன. என்னுடைய உயிரை ஒரு பட்டம்போல உயர உயரப் பறக்கவிட எனக்கு உரிமை இருக்குமானால், அது எனக்குத் தேவைப்படாதபோது, அதைப்பிடித்து அழித்துவிடும் உரிமை ஏன் எனக்கு இருக்க முடியாது? உடனடியாக இந்தக் கேள்வி தான் என்னிடமிருந்து எழுந்தது.

நான் பிடிவாதமாக இருந்தேன். தற்கொலை செய்ய தீர்மானித்துவிட்ட ஒருவனுக்கு நீதிமன்றத்திற்கும் ஒரு பஸ்ஹோல்ட்டுக்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கப் போகிறது? அங்கிருந்த எல்லாச் சட்டத்தரணி-களையும், தொலுக்கு முதலிகளையும் புறக்கணித்துவிட்டு நான் நேரடியாகவே நீதிபதியிடம் கேட்டேன்.

"எனக்கு எனது உயிர் தேவைப்படாதபோது, அதைக் கொண்டிருக்குமாறு நான் கட்டாயப்படுத்தப்படுவது அநியாயம் என்று உங்களுக்குப் படவில்லையா?"

"உங்களது உயிர் உங்களுக்கு சொந்தமானது என்று நீங்கள் நம்புவது ஒரு தவறான கருத்தாகும். ஏனென்றால் அது உங்களுக்கு சொந்தமானது அல்ல. உங்களது உயிர் இந்தச் சமூகத்திற்குச் சொந்தமானது. அந்த உயிருக்கு நீங்கள் பெறுமதியும் கொடுக்காமல் இருக்கலாம். ஆனால், சமூகம் அதை மதிக்கிறது. ஒரு மனித உயிராகப் பிறப்பது என்பது மிகவும் உன்னதமான ஒரு வரப்பிரசாதம். அது ஒரு பெரும் முயற்சியின் விளைவாக கிடைக்கும் ஒரு பேறு. அப்படிப் பெறப்பட்ட அந்த உயிரைக் கொண்டு இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக, அதன் நலனுக்காக நீங்கள் எவ்வளவோ பெரிய சேவைகளைச் செய்யலாம். பல்வேறுவிதமான சிருஷ்டிகளை மனித அறிவும் மனிதக் கைகளும் சிருஷ்டிக்கும் படைப்பாற்றலைக் கொண்டவை. இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நலனுக்கும் இப்படைப்பாற்றல் எல்லாம் பயன்படுத்தப்பட முடியும். ஆகவே உங்கள் உயிரை அழிக்கும் உரிமை உங்கங்களுக்குக் கிடையாது. அவ்வாறு அழிப்பது, சமூகத்தின் முன்னோக்கிய பாதையில் குறுக்கிடும் பெருங்குற்றமாகும். மிகமோசமான நடவடிக்கையாகும். இத்தகைய அட்டூழியங்களை தடுப்பதற்காகத்தான் குற்றவியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது."

- என்னுடைய உயிர்பற்றிய விவரங்கள் குறித்த அறியாமையை நன்கு உயர்ந்து கொண்ட நீதிபதி எனக்கு மிகவும் பரிவாக அதை விளக்க முயன்றார்.

அதன் பின்னான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனது பெறுமதிவாய்ந்த உயிரைப் பாதுகாத்துப் பேணுவதில் நான் மிகவும் சிரத்தையுடன் முயன்று வந்தேன். இந்தச் சமூகத்தின் நலனுக்காக நான் என்ன பங்களிப்பைச் செய்யலாம் என்பதுதான் எனது ஒரே சிந்தனையாக இருந்தது. இந்தச் சமூகத்திற்கு எனது பெறுமதிவாய்ந்த அறிவாலும், கைகளாலும் உருவாக்கப்பட்ட ஏதாவது ஒரு படைப்பை வழங்கவேண்டும் என்று முடிவு செய்தேன்.


நான் ஒரு விமானத்தை அல்லது ஒரு கப்பலை உருவாக்க வேண்டும் என்று யோசித்தேன். அதற்காக அப்பேற்பட்ட பொருட்கள் செய்யப்படும் இடத்தைத்தேடி எல்லா இடமும் அலைந்தேன். தெற்கிலிருந்து வடக்காகவும் கிழக்கிலிருந்து மேற்காகவும் முழு நாட்டையும் சல்லடை போட்டுத்தேடி அலைந்த எனது பயணம் ஒரு முடிவேயில்லாத பயணமாக அமைந்தது. ஆனால், அந்தத் தேடலால் எந்தப்பயனும் கிட்டவில்லை. பிறகு நான் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு ஒரு காரைத் தயாரிக்கலாம் என்று முடிவு செய்தேன். ஆனால், என்னால், ஒரு காரை மட்டுமல்ல, ஒரு சைக்கிளை உற்பத்தி செய்கிற இடத்தைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. பிறகு ஒரு றேடியோவை அல்லது ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை தயார் செய்ய முயன்றேன். அவை தயாரிக்கப்படும் இடங்கள் கூட எனக்கு அகப்படவில்லை.

என்னுடைய பிரச்சினையை ஒரு புத்திஜீவியைச் சந்தித்துச் சொன்னேன். அவர் சொன்னார்:

"நீங்கள் விமானங்களை, கப்பல்களை, கார்களை, சைக்கிள்களை, றேடியோக்களை, டெலிவிசன்களை தயாரிக்க விரும்பினாலும், அவற்றைத் தயாரிப்பதற்கான விஞ்ஞான அறிவு உங்களிடம் இல்லை. இல்லையா?.... நீங்கள் முதலில் செய்ய வேண்டியதெல்லாம் அந்த விஞ்ஞான அறிவை திரட்டிக்கொள்ள வேண்டும். ஒரு கால் அந்த அறிவைத் திரட்டிக்கொண்டால், இந்தப் பொருட்களைத் தயார் செய்யும் நிறுவனங்கள் இங்கே இல்லை என்றாலும் கூட, நீங்கள் அவை தயாரிக்கப்படும் வெளிநாடுகளுக்கு போக முடியும்.

அன்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி எனது கூர்மையான அறிவுபற்றியும், கைகள் பற்றியும் சொன்னவை எவ்வளவு அரைகுறைவானவை என்பதை நான் இப்போது புரிந்துகொண்டேன்.

விஞ்ஞான அறிவைப் பெறக்கூடிய இடங்களைப் பற்றிய விசாரணையைத் தொடங்கினேன். பல்வேறு இடங்களிலும் காணப்பட்ட பெயர்ப் பலகைகளில் இருந்து அவை எல்லாவிடங்களிலும் காணப்படுகின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். நான் அவற்றுள் ஒன்றை தெரிவு செய்து கொண்டு அவர்களிடம் போனேன். இந்தச் சமூகத்திற்குப் பயனுள்ள ஏதாவதொன்றை சிருஷ்டிப்-பதற்கான விஞ்ஞான அறிவைப் பெற்றுக் கொள்ள விரும்புவதாக அவர்களிடம் கூறினேன்.



என்னால் அத்தகைய ஒரு கல்வியை கற்பதற்கான பணத்தை செலுத்த முடியுமானால், என்னை அதற்கு தயார் செய்ய முடியும் என்று அவர்கள்

கூறினார்கள்.

என்னால், அவ்வளவு பணத்தை செலுத்த முடியாது என்று நான் கூறியபோது, விஞ்ஞான அறிவைப் புகட்டும் அவர்கள் என்மீது இரக்கம் கொண்டு வேறு சில ஆலோசனைகளை தெரிவித்தார்கள்.

"உங்களுடைய நிலையில் நீங்கள் 'சாம்பிராணிக் குச்சி அல்லது சவர்க்காரக் குமிழி' போன்ற 'சிருஷ்டிகளைப்' பற்றிச் சிந்திப்பது தான் நல்லது"

அன்றிலிருந்து கடந்த இருபது வருடங்களாக நான் ஒரு சவர்க்காரக் குமிழிகள் தயாரிப்பவனாக இருந்து வருகிறேன். அவை எனது சமூகத்திற்கு என்ன சேவை செய்கின்றன என்பது ஒரு புறமிருக்க, நான் வரவர எனக்கும், எனது மனைவி பிள்ளைகட்கும் உணவூட்டக் கூட முடியாதளவு வருமானத்தையே இந்தச் சிருஷ்டிச் செயலில் தருவதாக உணர்ந்து கொள்கிறேன்.

யார் எதைச் சொன்னாலும், எனது உயிர் ஒன்றுக்கும் உதவாத ஒன்று என்பதை இப்போது நான் நன்றாக உணர்ந்து கொண்டுவிட்டேன். ஆனாலும் அந்தச் சட்டம் இன்னமும் என்னைப் பாதிக்கிறது.

நீண்ட, ஆழமான யோசனையின் பின் நான் இந்தச் சட்டத்தைச் செயலற்றதாக்கிவிட முடியும் என்று புரிந்து கொண்டேன். தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படலாம். அவருக்கு எதிராக தற்கொலைக்கு முயன்றதாக நடவடிக்கை எடுக்கப்படலாம். ஆனால், தற்கொலை செய்த ஒருவருக்கு எந்தத் தண்டனையும் வழங்கப்படுவதில்லை. நான் எனது ஆழகான உயிரை அழித்துவிடுவது என்று முடிவு செய்து கொண்டேன். ஆனால், அப்போதும் ஒரு புதிய, பெரிய பிரச்சினை தோன்றியது. ஆம். கொல்வதற்கு எனது உயிரை எப்படிப் பிடிப்பது? அது ஒரு போதும் ஓரிடத்தில் நிற்பதில்லை. குறைந்தது ஒரு செக்கனுக்குக் கூட அது ஓரிடத்தில் நிற்பதில்லை. காலையிலிருந்து மாலை வரை ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு அது அலைந்து கொண்டிருக்கிறது. நித்திரையில் கூட அது கனவில் வாழ்வதற்காக எதையாவது தேடி அலைகிறது.

நேற்று நான் எனது உயிரை துரத்திக் கொண்டு போனேன். ஒரு அடகு கடையில் வைத்து அவனைப் பிடித்துக் கொண்டேன். தனது வீட்டை நடாத்துவதற்காகப் பணம் பெறுவதற்கு மனைவியின் காதணிகளை அடகு வைத்துக் கொண்டிருந்தான் அவன். அவன் மிகவும் இரக்கம் தரும் விதத்தில் தான் உடனடியாக இறக்க முடியாது என்று சொன்னான்." எனது மனைவியிடம் இன்னமும் இந்த அடகு கடைக்காரனிடம் பெற்ற நானூற்று நாப்பது ரூபாவையும் கொடுக்காமல் எப்படி இறக்க முடியும்?"

ஆழந்த விரக்தியுடன் எனது உயிரின் கழுத்தில் பிடித்து அவனை அடகு கடைக்கு வெளியே தள்ளினேன்.


"உன்னால் சாகமுடியாவிட்டால் எங்காவது தொலைந்து போ."

ஒரு தனியார் பஸ்வண்டி, சாவுக்கு எழுதப்பட்டது போல இருந்த ஒரு முப்பது அல்லது நாற்பது பேரைச் சுமந்தபடி வளைவில் ஒருபுறம் சரிந்தபடி வந்தது. - கிராஸ் கிராஸ் என்ற உலோகச் சத்தத்தை எழுப்பியபடி.

நான் பார்த்துக் கொண்டிருக்க, எனது உயிர் அதை நோக்கி ஓடி, அதில் தொற்றிக் கொண்டது.

சிங்களத்திலிருந்து ஆங்கிலம் ஏ.சீ. தர்மப்பிரிய
ஆங்கிலம் வழி தமிழில் எஸ்.கே.விக்னேஸ்வரன்

# பின்னென்ன உயர்குல வேளாளன்



எலும்பை ஊடறுத்து
உயிரைத் தீண்டும்
ஊசிக்குளிர்

வாழ்வின் மிடறறுத்து
உயிரைத் துரத்தி
உறிஞ்சிக்குடிக்கும் வெஞ்சினம்

கொடுமைகளில் சிதைந்தது சுற்றம்
ஆன்மாவும் விறைக்கும்
கூதல் வெளியில்
தடுமாறிச் சுவாசிக்கும்
தட்டுக் கெட்டு மிஞ்சிய சுற்றம்

புல்லும் பூண்டும்
செடியும் கொடியும் பூவும்
நீயும் நானும் நம் மொழியும்
பிரளயத்தில் இல்லாது போய்விட்ட
மறுபொழுதின் அகால வேளையிலும்
உயிர் வாழ்வான்
'உயர்குல' வேளாளன்

யார் இந்த
'உயர்குல' வேளாளன்?

வலி பொங்கும்
நெடும் பொழுதுகளில்
நீர்ப்பை உடைந்து கசிய
பொசுங்கிப் பெருகும்
குருதிப் பெருக்கில்
பிறப்பைத் தவிர்த்து
பன்னீரும் பாலும்
பாய்ந்தோடும் யோனி வழியாகவா
பிறப்பெய்தினான் - இந்த
'உயர்குல' வேளாளன்

குப்பி விளக்கின் உச்சிப் புகை நிழல்,
சுவரில் நெளிந்து ஊர
மங்கிய மஞ்சள் வெளிச்சத்தில் - அந்த
மந்தகாச இரவுகளில்
அம்மையப்பன்
கூடிக் கொண்டாடும்
கலவி தவிர்த்து
மாங்கனி உண்ணும்
மந்திரத்தில் பிறந்தவனா - இந்த
'உயர்குல' வேளாளன்?

பள்ளரைப் போலும்
பறையரைப் போலும்
நாயைப் போலும்
அழுக்குண்ணும் புழுக்களைப் போலும்
முடிவெட்டும் என்னைப் போலும்
அழுக்ககற்றும் உன்னைப் போலும்
வெள்ளைப் பச்சை அரிசியில்
அவித்து உருட்டிய கட்டிக்காய்
உன்னதும் என்னதும் அல்லாத மொழியில்
முணுமுணுத்து மணியடிக்கும்
பிராமணரைப் போலும்
பிறப்படைந்தவன் தானே - இந்த
'உயர்குல' வேளாளன்

பின்னென்ன 'உயர்குல' வேளாளன்

களத்து மேட்டில்
கசிந்த வியர்வை
காய்ந்துபோக நான் விசிறி தந்தேன்
உழுத புஜத்தில்
வலி எழும் வேளையெல்லாம்
நீ களைப்பாற நான்
பதநீர் தந்தேன்
பதிலுக்கு நீ நெல்மணி தந்தாய்

எப்படி இடையில்
உயர்குலம் நீ ஆனாய்
எழிய சாதி நானானேன்?

ஒளி துப்பும் சூரியனும்
அடிவானில் விடிவெள்ளியும்
உதிக்காத இருண்ட காலங்களில்
மனுஸ்மிருதி சாஸ்திரம் - என்னை
மூத்திரம் கூட பெய்ய அனுமதித்ததில்லை

புறம் தள்ளி வாழ்தலும்
அடிமைகளுக்கு நீ
அரசனாவதும்
அடுப்படியிலும் படுக்கையிலும் மட்டுமே
உம் பெண்டிரை அனுமதிப்பதையும்
எப்படி நீ மனுநீதி என்றாய்?

என் குடிசைக் கூரைக்கு
கோரைப் புல்லும்
உன் வீட்டுக் கூரைக்கு
ஓலைக் கிடுகும் கட்டாயம் என்று
யார் இட்டது கட்டளை?

என் வீட்டுப் பெண்டிரை
மாராப்பு அணிய நீ
அன்றெல்லாம் அனுமதித்ததில்லை
இன்றும் உம் பெண்டிர்
படுக்கையின் சாளரம் தாண்டி
அப்பால் வீசும் தென்றல் சுகத்தை
சுவாசிக்க நீ விரும்புவதில்லைத் தானே?

பெண்பிள்ளைச் சிரிப்பையும்
புகையிலைப் பருவத்தையும்
ஒப்பிட்டுப் பாழும் மொழி சொன்னது

இந்த உயர்குலம் தானேஉன் மொழியில்
வக்கிரப் புத்திக்கு
உயர்குலம் என்றா பொருள்

நீ அறிந்ததுண்டா....
எங்கள் குடிசைத் தொகுதிக்குள் தான்
காதல் கலியாணம்
முதன் முதலில் அனுமதிக்கப் பட்டது.

போன வாரப் பத்திரிகையில் கூட நீ
சிவந்த நிற (?)
இந்துமத (?)
அழகான (?)
குடும்பப்பாங்கான (?)
உயர்குல வெள்ளாளிச்சி தேடிக்கொண்டிருக்கிறாய்.
நூற்றாண்டுகள் பின்தங்கிய உன்
வக்கிர ஆசைக்குத்
தடுமாறும் பத்திரிகைத் தர்மம்
எண்ணம் முழுவதும்
இருள் நிறைய
பகலின் திசையில்
பெயர் மட்டும் போதுமா?
நாகரிகம் அடைய வேண்டாமா?

அடுத்த நூற்றாண்டின் பெரும் சுவரை
முட்டி மோதி
இடித்துத் தகர்த்து விட்டு
நிமிர்ந்து நிற்கிறது எங்கள் உலகம்

ஆறுமுக நாவலரின்
ஐம்பாவச் சட்டத்துக்குள்
அடைபட்டுக் கிடக்கிறது
உங்கள் உலகம்

நஞ்சு கக்கும் கொடியவர்க்கும்
சூது விதைக்கும் பாதகர்க்கும்
எங்கள் மொழியில்
நாவலர் என்று பெயர் இல்லை

திண்ணைப் பள்ளியில்
மண்கூட்டிய வாகைமர நிழல் மணலில்
ஒதுங்கி ஓரமாய் நான்
'அ' கூட எழுத நீ அனுமதித்ததில்லை

பனையேறும் பள்ளனுக்கு
பாராளுமன்றம் எதற்கென்று அன்று
சந்தத்துடன் சத்தமிட நீ
நாவலரிடம் தானே கற்றுக் கொண்டாய்

சாதி தாழ்ந்தவனுடன் சம பந்தி போஜனம்
பாவச் செயல் என்பதையும்
உருத்திராட்சைக் கொட்டை சுற்றிய
மண்டைக்குள் இருந்துதானே நீ
பரிமாறிக் கொண்டாய்

பழங்கதையெல்லாம்
இப்போதெதற்கு என்கிறாய்
புதுக்கதையும் நாறித்தானே கிடக்கிறது

கிடுகு வேலி பிய்த்து
எங்கள் பெண்கள் வெளிவந்து
ஆணுக்கு நிகராய்
நிமிர்ந்து நிற்க ஆரம்பித்து
நூற்றாண்டு ஆயிற்று...

-ஆனாலும்-

உச்சாணி மாடியின் விளிம்பில் நின்று
தரை நோக்கிப் பாய்ந்து
உடலும் ஆன்மாவும்
சிதறிச் சாவது என் வீட்டுப் பெண்களல்ல...

ஆயிரம் பேரைச் சுமந்து
கனகதியில் பாயும்
தொடர் வண்டி முன் பாய்ந்து
உடலும் ஆன்மாவும்
சிதறிச் சாவது என் விட்டுப் பெண்களல்ல

அப்புறப் படுத்திக் கொள்
உன் வீட்டுக்குப்பைகளையும்
ஆறாயிரம் ஆண்டுகால வழக்குகளையும்
நீ உயர்குல வேளாளன் என்பதுவும்
உனையண்டி உன் ஊரில்
ஆயிரம் தாழ்சாதி உள்ளன என்பதுவும்
பெண் உன் சொல்
மீறாள் என்பதுவும்
நீல நிறக் கண்களும்
வெண்சருமமும் கொண்டவர்களுக்கு
தெரிந்தாலும் கலையில்லை
உன்னில் வீசும் மணம்
அவன் மூக்கை அரிக்கும்

விதி வலியது வேளாளனே
சிணி மணம்
உன் மூளையின்
ஞாபக செல்களை சுரண்டுகிறது அல்லவா...

எம் துன்பியல் கவிதையின் இருதயம்
தினம் தினம் கண்ணீருடன்
எவர்க்காக உருகிச் சாகிறதோ
அவர்கள் உனக்காகவும்
வெடித்துக் கொள்வதுதான்
இன்னும் என் பெரிய சோகம்.

-சக்கரவர்த்தி-
நன்றி: மூக்கன்

## நிலவோடு கை கோர்த்து...

அம்மா சோறூட்டிய
சின்ன வயது நாட்களில்
மாதமொருமுறை ஒளிந்து விளையாடும்
மாமாவாக அறிமுகமாகி
எனக்கு நெருக்கமான உறவாகிய நிலவை
எப்போது பார்த்தாலும்
என் மனம் பொங்கும்
பற்றைகளை ஊடறுத்து
செம்மஞ்சள் ஒளிதெறித்து
பனைமர உயரம் கடந்து
ஒளிவட்டக் குளிர் வடிவாய்
முழு நிலவு மேலெழுகையில்
என் மனம் துள்ளும்
நிலவின் தோள்களில்
தொங்கி ஊஞ்சலாடுவதற்காய்
இரு கைகளையும் மேலுயர்த்தி
சிறகு விரித்துப் பறக்கும்
ஒரு பறவையாய் எனை நினைத்து
முடிக் கற்றைகள் காற்றில் அலைய
நுனிக் காலில்குதிப்பேன்
எல்லையில்லாக் களிப்பில்
என் மனம் அலைவீச
கட்டற்றுச் சிரிப்பேன்
கனவுகள்
காண்பேன்
கதை சொல்லும் நிலவின்
காதோடு பேசுவேன்

என்னை நானே மறந்து
உயர ஒருமுறைகுதித்து
கால்கள் தரையைத் தொடும்போது
இப்போதெல்லாம்
மனதின் மூலையில்
மெல்ல ஒரு வலி நெருடும்
கொஞ்சம் கொஞ்சமாய்
உணர்வெங்கும் அது பரவும்
துள்ளமுடியாமல் என்னை அழுத்தும்

ooo

சூரியனுக்குப் பாய் விரித்து
போர்வை கொடுத்து அனுப்பிவிட்டு
எங்களூரின் பெரிசுகள்
அலைமோதும் கரையோரம்
வெள்ளிநிலா ஒளியில்
வெள்ளை மணலில்ஒன்றுகூடி
பல்லில்லா வாய்களால்
பழங்கதைகள் பல பேசி
மனப்பாரம்குறைத்ததும்
மனப்பாலம் அமைத்ததும்

வாடைக்காற்று வாசல் வந்ததும்
கொக்குப்பட்டம்,குருவிப்பட்டம்
பருந்துப்பட்டம் பாம்புப்பட்டம்
பெட்டிக்கொடி, எட்டுமூலை எல்லாம்
விண் கூவ ஏற்றி
மின்விளக்குப் பூட்டி
வலைகாயும் கரையோரம்
எங்களூர் இளைஞர்களின்
வல்லமை அரங்கேறியதும்

கரையோரம் கோலம்போட்டு
அலைவந்து அள்ளிப்போக
சளைக்காமல் மீண்டும் கீறி
மறுபடியும் அலைவீச
ஒரு அலை கடலோடு போய்
மறு அலை எழும் இடையில்
பெயரெழுதி ஓடி வரும்
எங்கள் சிறுபிள்ளை விளையாட்டும்

நீ அறிவாய் நிலவே

இப்போது
எங்களூரின் கடற்கரையில்
இரவுவேளைகளில்
உன்னைத்தவிர
ஒருவருமே இல்லையாமே
எப்போது உன் தனிமை கலையும்
என் நிலவே?

ooo

சித்திரை முழு நிலவில்
இந்திரபுரியே தோற்றுப்போக
என்னூர் புதுக்கோலம் கொள்ளும்
அலங்காரப் பந்தல்கள்
ஆங்காங்கே முளைத்திருக்கும்
ஊரெங்கும் வாழை, தோரணம்
நெற்றியிலே உரசும்

அண்ணாந்து பார்க்க வைக்கும்
அழகு ஓவியங்கள்
தொங்குகின்ற மேடைகள்
அதில் பொங்கியெழும் ஆட்டம், பாட்டம்
வீடெல்லாம் வெறிச்சோட
என்னூரே தெருவில் இறங்கி
களிநடனம் ஆடும்
கலகலத்துத் திரியும்
கவலைகளை மறக்கும்
விடியும் வரை உலவும்

இப்போது சித்திரை முழு நிலவில்
என்னூர் நித்திரை கொள்கிறதாம்
சிறகொன்று ஒடிந்து
வீழ்ந்த வலி எனக்குள்
இன்னொரு முறை நான்
வன்னி வானில் நிலவைக் கண்டு
எப்படித் துள்ள?

ooo

ஒரு நாள்
உப்புப் பெரு வெளியூடாக
ஊர்போகும் நெடுஞ்சாலையில்
நட்ட நடு இரவில்
நாலு நாலு பேர் சேர்ந்து
பாட்டுப்பாடி ஆட்டம் போடுவோம்
குதிப்போம் கூத்தாடுவோம்
கட்டற்றுச் சிரிப்போம்
கதைகள் பேசுவோம்
சிறகை விரிப்போம்
உயரப் பறப்போம்
உன் கையைப் பிடித்துக் கொண்டு
ஊர் போய்ச் சேருவோம்

அது வரை பொறுத்திருப்பேன்
அந்தப் பொன்னான பொழுதுக்காய்
விடியும்வரை விழித்திருப்பேன்

- மோகனா சிவானந்தகுரு

நன்றி - நூலகத்திட்டம்



**அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவுகள்:**

# பெண்கள் அமைப்புகள் எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?

வடக்கு கிழக்கில் தொடர்கிற யுத்தச்சூழல் அங்கு வாழும் பெண்கள் மீது இரட்டிப்புச் சுமையை ஏற்படுத்தி விடுகறது. அங்கு இடம்பெறும் தொடர்ச்சியான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நிற்கிற பாடாகவில்லை. பெண்கள் அதுவும் எதிரி இனத்துப் பெண்கள் என்கிற மனோபாவம், படையினரிடம் மட்டுமல்ல, ஊடகத் துறையினரிடமும், ஆட்சி செலுத்து வருவது அவற்றிற்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இடையூறுகளை ஏற்படுத்தி விடுகிறது.

இதேவேளை தெற்கிலும் யுத்தத்தின் தாக்கம் மற்றும் சமூக பொருளாதாரக் காரணங்களினால் இடம்பெறும் பாலியல் வல்லுறவின் எண்ணிகை அதிகரித்துச் செல்கின்றது.

மலையகத்திலோ ஏழ்மையும் அறியாமையும் சிறுமிகளின் வாழ்வைச் சிதைக்கக் காரணமாகின்றன.

இந்த நிலையில் பெண்கள் அமைப்புகள் அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவுகள் தொடர்பாக அவற்றைத் தடுத்து நிறுத்த அமைப்பு ரீதியாக எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களுடன் உரையாடிய போது அவ்வவ் அமைப்புகளின் சார்பாக அவர்கள் அளித்த பதில்கள் பின்வருமாறு:-

**ரோகிணி வீரசிங்க**

**காந்தா சக்தி பெண்கள் அமைப்பு**

வடக்கில் இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பற்றி எமக்கு நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் இல்லை. எனினும், சாராதாம்பாளின் நல்லடகத்தில் பெண்கள் அமைப்பு என்ற ரீதியில் பங்குபற்றினோம். மற்றும் எமது அமைப்பில் பாலியல் வல்லுறவு பற்றி விசேட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படுவதில்லை. எனினும் தொடர்ச்சியாக இடம்பெறும் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்தோம். பத்திரிகையாளர் மாநாடு வைத்து நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளோம். அத்துடன், நாம் தனித்து இவ்வாறான விடயங்களுக்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்க இயலாது. இதன்படி அனைவரும் ஒன்றுபடல் வேண்டும்.



**குமுதினி சாமுவேல்**

**பெண்கள் தொடர்பூகக் கூட்மைப்பு**

பாலியல் வல்லுறவு அன்று தொடக்கம் இன்று வரை நடைபெறுகின்ற ஒரு விடயமாகும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் பாலியல் வல்லுறவுகள் அதிகம் நிகழ்கின்றவா இல்லையா என்ற பிரச்சினையும் காணப்படுகின்றது. எனினும், இன்றைய யுத்த கலாசாரத்தின் வன்முறை சூழல் காரணமாக பெண்களுக்கெதிரான வன்முறைகள் பாலியல் வல்லுறவுகள் அதிகம் நடைபெறுகின்றன.

பாலியல் வல்லுறவு என்பது ஒரு மனித உரிமை மீறலாகும். இது பற்றி சமூகத்தில் உள்ள ஆண்களும், பெண்களும், கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இது தனியே பெண்கள் பிரச்சினை அல்ல. இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பு அரசாங்கத்தையும், சமூகத்தையும் சேர வேண்டும்.

பெண்கள் அமைப்பின் தலையீட்டின் காரணமாக 95ல் பாலியல் வல்லுறவு தொடர்பான சட்டம் மாற்றப்பட்டது. பலதரப்பட்ட பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் அது தொடர்பாக நாம் எடுத்து வந்த ஆர்ப்பாட்டங்கள் காரணமாக சம்பவங்கள் தொடர்புசாதனங்களின் கவனத்தைப் பெற்றன. 1985ம் ஆண்டு தௌவக்க ஞானவத்தி ஆசிரியை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட போது நாம் முன்னெடுத்த போராட்டங்கள் இங்கு குறிப்பிடத்தக்கவை. ஆனால், இவ்வாறு நாம் முன்னெடுத்த பல போராட்டங்கள் எந்தவொரு மனித உரிமை அமைப்புகளுமோ வேறு அமைப்புகளுமோ ஆதரவு தரவில்லை.

அதேவேளை 1988 காலப்பகுதியில் தெற்கில் சுமார் 15 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இதுவரை அந்த 15 பெண்களினது பெயர்களை எவரும் அறிந்திருக்கவில்லை. இதுபோல் தான் தெற்கில் உள்ள பெண்கள் அமைப்புகளோ, மனித உரிமைகள் அமைப்புகளோ, யுத்த கலாசாரத்தினால் தெற்கில் வாழும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்குவது பற்றி அறிந்து வைத்திருக்கவில்லை.

பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை அதிகபட்சம் தவிர்க்க நாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி கூறுவதாயின், பெண்களுக்கு சார்பான சட்டங்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். தென்பகுதி கிராமங்களில் 'பாதுகாப்பு குழு' என்ற பெயரில் இணைந்து பாலியல் வல்லுறவுக் குள்ளான பெண்கள் பற்றிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். கிராம மட்டங்களில் கருத்தரங்குகள் ஒழுங்கமைத்து, ஏன் பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்படுகின்றார்கள். இதில் ஆண்களின் பங்கு என்ன போன்ற கேள்விகளை எழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். பாடசாலை மட்டங்களில் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகின்றோம். இவ்விடயம் தொடர்பான வெளியீடுகளை மேற்கொள்கின்றோம்.

**முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயற்பாட்டு முன்னணி:**

பாலியல் வல்லுறவு சம்பவங்கள் தொடர்பாக எம்மிடம் தனியான செயற்திட்டங்கள் இல்லை. முஸ்லிம் பெண்கள் பற்றியே நாம் அதிகம் கவனம் கொள்கின்றோம். சட்டப்பிரச்சினை தொடர்பாக ஆலோசனைச் சேவையை நாம் மேற்கொள்கின்றோம். அதுவும் பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்களுக்கு என்று தனித்து நாம் ஆலோசனைச் சேவையை மேற்கொள்வதில்லையெனலாம். சமீபத்தில் பாலியல் வல்லுறவுக்குள்ளான ஒரு பெண் எங்களை அணுகினார். ஆனால் இந்தப் பிரச்சினையை ஒரு சட்டப்பிரச்சினையாக அணுக வேண்டுமா இல்லையா என்பதில் பிரச்சினை உள்ளது. அத்துடன் பொதுவாக பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றி நாம் கவனம் கொள்கின்ற போதிலும், பாலியல் வல்லுறவுகள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவில்லை எனலாம். போராட்டங்களுக்கு எதிர்ப்புகளுக்கு நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம். பங்குபற்றுகின்றோம்.

**பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்:**

நாம் அமைப்பினர் என்ற வகையில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்றவுடன் பிற பெண்கள் அமைப்புகளுக்கு அறிவிக்கின்றோம். எனினும், நாம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவை அல்ல எனலாம். நாம் ஜனாதிபதிக்கு இது பற்றி அறிவித்துள்ளளோம். சாரதாம்பாளின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோம்.

-ரத்னா

# 3வது ஆயிரம் ஆண்டில்

## உலக கனத்தொகை 6 மில்லியன்!

## 70 வீதமானவர்கள் கல்வியறிவற்றவர்கள்!

## 50 வீதமானவர்கள் போஸாக்கற்றவர்கள்!

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கணிப்பீட்டின்படி ஒவ்வொரு செக்கனிற்கும் உலகில் 05 குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றார்கள். அதாவது ஒரு நிமிடத்திற்கு 300, ஒரு மணித்தியாலயத்திற்கு 18ஆயிரம், ஒரு நாளில் 432ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றார்கள் என நாம் கொள்ள முடியும். உலக மக்கள் தொகையை நாங்கள் ஒரு கிராமத்திலுள்ள 100 பேராகச் சுருக்கிப் பார்ப்போமானால் அவர்களில் 57 ஆசியர்களும், 21 ஐரோப்பியர்களும், 14 அமெரிக்கர்களும், 08 ஆபிரிக்கர்களும் இருப்பார்கள். மேலும் பெண்களின் தொகை 52 ஆகவும், ஆண்கள் 48 ஆகவும் இருப்பார்கள். மேற்கூறிய வழியில் கிராமத்திலுள்ள கல்யாணமாகிய பெண்களில் அரைப்பங்கினர் குடும்பக்கட்டுப்பாடு செய்திருப்பார்கள். அத்துடன் பெண்களில் நாலில் ஒரு பங்கினர் பாலியல் வல்லுறவு அல்லது பாலியல் வல்லுறவு எத்தனிப்பிற்கு (Rape or An Attempted Rape) உள்ளாகி இருப்பார்கள். இவர்களில் 89பேர் இரு பாலியல் உறவைப் (Two Side - Hectrosexual) பேணுபவர்களாகவும் 11 பேர் ஒரு பாலியல் (Homosexual) உறவைப் பேணுபவர்களாகவும் இருப்பார்கள்.

அடுத்து வரும் மிக முக்கியமான விடயம் எம்மவரின் குறிப்பான கவனத்திற்குரியது. அதாவது மேற்படி சுருங்கிய உலகம் என்ற கிராமத்திலுள்ள 59% ஆன (உலக) கிராமத்தின் சொத்து 6 பேர்களுக்கு மாத்திரம் உரிமையானதாக இருப்பதுடன் அந்தச் சொத்தின் உரிமையாளர்களான அறுவரும் அமெரிக்கர்களாகவே இருப்பார்கள். (Just six people would own 59 percent of the village's wealth, and they would all be Americans.)

நாம் இங்கே முழு உலக மக்களையும் சுருக்கி ஒரு கிராமத்தில் வசிக்கும் 100 பேராக வைத்துக் கொண்டு தான் ஏனைய கணிப்புகளை விபரிக்கின்றோம் என்பதை மறக்கக்கூடாது. இந்த மாதிரி எங்களுக்கு தரப்படுவது சனத்தொகைக்கும் அபிவிருத்திக்குமான செயற்பாட்டுக் குழு-கனடா (Action Canada for Population and Development) என்ற அமைப்பினாலாகும். மேலும் மிகக்குழப்பமான ஒரு விடயத்தின் ஒரு பகுதியைத் தான் இந்தக் கணிப்பீடு வெளிப்படுத்துகின்றது. "இது மக்கள் தொகை இயங்கு முறையினை வெளிப்படுத்துகின்றது என்பது தான் இங்குள்ள மிக முக்கியமான விடயமாகும்" என அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிபரானகதரின் மக்டொனால்ட் (Katherine Mcdonald) கூறுகின்றார்.

தொடரும் இக்கணிப்பின்படி 100 பேரில் 80 பேர் மட்டரகமான வீடுகளில் தான் வசிப்பார்கள். இவர்களில் 70 பேர் வாசிக்கத் தெரியாதவர்களாவும், தலையங்கத்தில் குறிப்பிட்டது போல் 50 பேர் போசாக்கின்மையால் வாடுபவர்களாகவும் ஒருவர் இறக்கும்போது ஒருவர் பிறந்து கொண்டும் இருப்பார்கள். ஒருவர் கல்லூரிக் கல்வி தகமையுடையவராகவுள்ள வேளையில் ஒருவரிடம் மாத்திரம் சொந்தக் கொம்பியூட்டர் இருக்கும்.

உலக மக்கள் தொகையைப் பாதிக்கும் காரணிகளாக நோய்கள், சமூக நிலைப்பாடுகள் (Social Trends) தேசிய அரசியல் என்பன முக்கிய பங்களிப்பை வழங்கும். உதாரணமாகக் கனடாவை எடுத்துக் கொண்டால் அதனுடைய தற்போதைய தொகையான 30.6 மில்லியன்கள் குடியேற்றவாசிகள் (Immigrants)வராவிட்டால் சுருங்கி விடும். அத்துடன் பெரும்பான்மையானவர்கள் முதிர்ந்த, வயது போனவர்களைக் கொண்ட சமூகமாகவே இருக்கும். ஏனெனில், 1998 ஆண்டில்தேசிய ஆலோசனைச்சபை (National Advisory Council) இன் கணிப்பின்படி 12% ஆன கனடியர்கள் 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களே. இது மேலும் வளரும் போது சமுதாயத்திற்கு பாரிய சுமையாகவும், இருக்கப் போகின்றது. ஏதாவது சடுதியான குழந்தை பிறப்பில் உயர்ச்சி (Baby Boom) ஏற்படாவிட்டால் குடிவரவாளர்களின் வருகை தடைசெய்யப்பட்டால் தற்போதைய சனத்தொகை மேலும் சுருங்கி விடும். 65ற்கு மேற்பட்ட வயோதிபர்களின் தொகை 2041ம் ஆண்டளவில் 25% வீதமாக எகிறிவிடும். மக்கள் தொகையைப் பாதிக்கும் இன்னுமொரு முக்கியமான காரணியாக தற்போது வளர்ந்து கொண்டு வருவது எய்ட்ஸ் ஆகும். இதனது பாரிய தாக்கத்தை இன்று நாம் ஆபிரிக்காவில் காண்கின்றோம். World Watch Institute இன் ஒரு கணிப்பின்படி பொட்ஸ்வானா , தென்ஆபிரிக்கா, சிம்பாவே போன்ற நாடுகளில் எய்ட்சின் தாக்கத்தால் அடுத்த பத்து ஆண்டுகளில் வயதுவந்த மக்கள் தொகையில் (Adult Population) 01/05 பங்கிலும் கூடுதலாக இழக்க வேண்டிய பயங்கரமான ஒரு சூழலே நிலவுகின்றது. உதாரணமாக சிம்பாவேயில் மக்களின் வாழ்வின் சராசரி வயதெல்லைக்காலம் 1990இல் 60 வருடங்களாக இருந்தது. தற்போது 44 வருடங்களாகக் குறைந்து விட்டது. இவ்வளவிற்கும் இந்நாடு தான் ஆபிரிக்காவில் பொருளாதார வளர்ச்சியின் ஒரு சின்னமாகக் கருதப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் (United Nation Population Fund) என்ற ஸ்தாபனத்தின் குறிப்பின்படி 1960களில் 03 பில்லியன்களாக இருந்த உலகச் சனத்தொகை 40 வருடங்களில் இன்று 06 பில்லியன்களாக இரு மடங்காக உயர்ந்துள்ளது. இதிலும் நாங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் மக்கள் உற்பத்திப் பெருக்கம் வறிய நாடுகளிலே தான் மிகச் செறிவாக உள்ளது. 1960களில் உலக மக்கள் தொகையான 03 பில்லியன் (300கோடி) 70 சதவீதமானோர் - கிட்டத்தட்ட 2.1 பில்லியன்கள்- பின் தங்கிய நாடுகளிலே தான் வாழ்ந்தார்கள். இன்று 06 பில்லியன்கள் என்ற உலகச் சனத்தொகையில் 80 சதவீதமானோர் அதாவது 4.8 பில்லியன்கள் குறைவிருத்தியடைந்த நாடுகளிலே தான் வாழ்கின்றார்கள். 2025ம் ஆண்டளவில் உலக மக்கள் தொகை 09 - 11ற்கும் இடையில் (பில்லியன்களில்) இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மக்கள் பெருக்கம் ஏழ்மையான, அபிவிருத்தியடையாத நாடுகளில் மையம் கொண்டிருந்த போதும், இதன் தாக்கம் சமூகக் கட்டமைப்பினால் ஒரு ஒழுங்கு நிலைக்குக் கொண்டு வரப்படராம் என்பதற்கு உதாரணமாகச் சீனாவைக் கொள்ளலாம். ஆனால், இன்னும் கூட ஒரு அரைக்காலனித்துவ நாடாகச் சீரழிந்து போயுள்ள இந்தியா தனது மக்கள் தொகைப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியாமலும் மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமலும் உள்ளதை நாம் அவதானிக்கலாம். சீனாவில் கம்யூனிஸ்டுகளின் அதிகாரத்தின் கீழான அமைப்பில் கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரச் சமப்படுத்தலுக்கான நடவடிக்கையுடன் குடும்பக் கட்டுப்பாட்டின் கீழ் பல காலங்களாக குடும்பத்திற்கு ஒரு பிள்ளை என்ற எல்லையும் மக்கள் தொகையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளது. இவ்வளவிற்கும் சீனா தான் மக்கள் தொகை கூடிய ஒரு நாடு.

அதேவேளை இந்தியாவிலே நிலைமை மிக மோசமாக உள்ளது. இந்தியாவில் சனத்தொகை 982 மில்லியன்களிலிருந்து அடுத்த வருடத்தில் 01 பில்லியனாக (100கோடி) உயரவுள்ளதுடன் 2040 மட்டில் இந்தியாவின் சனத்தொகை சீனாவிலும் பார்க்க கூடுதலாக வருவதுடன் உலகில் சனத்தொகையில் கூடிய நாடாகவும் இருக்கும் இன்றைய மோசமான சமூக அமைப்பு முறை தொடர்ந்தால்.

- தேசபக்தன்

நன்றி - நூலகத்திட்டம்



# அவர்கள் உனக்காகவும் வெடித்துக் கொள்வது தான் இன்னும் என் பெரிய சோகம்!


கடந்த வருடம் மே மாதத்தில் கவி வியாபாரம் பண்ண கனடா வந்த வைரமுத்து-வும் இங்குள்ள வியாபாரக் கழிசடைகளின் ஆலாத்தியில் அறிவு மங்கியோ இல்லை, ஆனந்தப்பட்டோ சில வார்த்தைகளை உதிர்த்து சென்றார். அவைகளில் சில...

1. ஈழத் தமிழரின் வீரப் போராட்டத்தைக் காவியமாக்குவேன்.

2. அதையும் வன்னியில் போய் வாழ்ந்து விட்டே காவியமாக்குவேன்.

3. அக்காவியத்தைக் கனடாவிற்கு எடுத்து வந்து இங்கேயே அரங்கேற்றுவேன்.

இன்னும் தன் அபிமானத்தைக் காண்பிக்க முனைந்த வைரமுத்து "மலரப் போகும் தமிழீழத்-தின் தேசிய கீதத்தை நானே இயற்றித் தருவேன்" என்று மிகப் பெரிய நகைச்சுவையை உதிர்த்துப் போயிருந்தார். இன்று 'தமிழ் ஈழம்' என்ற வார்த்தையை உலகெல்லாம் புலம் பெயர்ந்து வாழும் நம்மவர் மாத்திரமல்ல தமிழகத்திலுள்ள சில புல்லுருவிகளும் பணம் பண்ணும் ஒரு களமாகப் பயன்படுத்துவது எம்மவரின் அறிவீனம் என்று அங்கலாய்ப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும். வந்தவன் போனவனெல்லாம் வெறும் வாயைச் சப்பவும், வாயில் வந்ததெல்லாம் உளறவும், பேனையில் வந்ததெல்லாம் எழுதவும் தமிழ் ஈழம் என்றவொரு பதம் கிடைத்தது வாய்ப்பாகப் போய் விட்டது. எல்லாமே சந்தர்ப்ப-வாதமாகவும் சுயநலமே முன்னிலைப்பட்ட-தாகவும், பணம் பண்ணுவதே நோக்கமாகிப் போனதானாலும் எல்லாவற்றிற்கும் மேலாக நேர்மையான புத்திஜீவிகள் சமூக உணர்வுள்ள உண்மையான செயல் வீரர்கள் எல்லாம் செயலிழந்த நிலையில் இவ்வாறான ஒரு பரிதாபமான நிலைமைக்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருப்பது சோகம் தான்.



மேற்கூறப்பட்ட விடயங்களை கனடா வாழ் தமிழ் மக்கள் திரும்பவும் நினைவு கூர்ந்து சிரிக்-கவும் வைரமுத்துவின் கவித்துவத்தை ஒரு முறை எடை போடவும் அதன் மூலம் தற்காலிகமாகவா-வது அவரது மாபெரும் முயற்சியை தடுக்குமாறு வேண்டியோ இல்லை, அவருக்கு அந்தத் தகுதி இல்லையென்பதை வெளிப்படுத்த வேண்டும் என்ற அவாவுடனோ, இல்லையோ ஜன. 7, 2000ம் ஆண்டு உதயன் பத்திரிகையில் உதயனின் வார்த்-தையில் கூறுவதானால் 'கவிப்பேரரசு டாக்டர் வைரமுத்துவின் கவிதை' என்ற பெயரிலான சில வசனக்கூட்டுக் குழம்பு முன் வைக்கப்பட்டுள்ளது.

பாவம் உதயன், இந்த வைரமுத்து தமிழீழத் தேசிய கீதத்தை இயற்றாமல் விட்டாலும் ஏதோ "ராணி"வார இதழிற்கு எழுதிய வசனக் குழம்பில் தமிழ் ஈழம் என்ற சொல்லை எங்கோ ஒரு மூலை-யில் போட்டதினைக் கண்டதின் மூலம் புளகாங்கிதம் அடைந்துள்ளதுடன் அதை மறு பிரசுரமும் செய்துள்ளது. நல்ல வேளை ராணி இதழிற்காவது உதயன் நன்றி சொல்ல முன்வந்தது அதன் பெருந்தன்மையே. ஏனெனில், விளம்பரப் பத்திரிகையான உதயன் கட்டுரைகளுக்கு வக்-கில்லாமல் அனேகமாக சரிநிகரில் வரும் தரமான தனக்குத் தேவையான சில கட்டுரைகளை நன்றி கூடப்போடாமல் ஏதோ தான் எழுதிப்பிரசுரிப்பது போல் அவற்றைப் பிரசுரித்து வந்தது தான் அதன் உச்ச வியாபார நடைமுறையாகும்.

"தொடர்ந்து உதயன் குறிப்பிடுவது போல், ஈழத்தமிழர் நலனில் (அதாவது அவர்கள் வார்த்-தையில் புரிந்து கொள்வதானால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியில் நடாத்தும் வியாபார நலனில்) அக்கறையோடு செயலாற்றியவரும் (அது என்ன செயலோ யாருக்கு வெளிச்சம்) கவிஞர் அவர்கள் ராணி வார இதழில் எழுதிய கவிதையை இப்போது பார்ப்போம். நான் முன்னரே குறிப்பிட்டது போல் அவை வெறும் வசனக் குழம்பு தான் என்றாலும் அவற்றை நாம் மீள் பார்வைக்கு உட்படுத்துவோம். சரி கவிதை இது தான் :

'பூக்கள் மட்டும் யாசிப்பவன்

புத்திசாலியில்லை என்றறிந்த பிறகும்

காலமே

பூக்களையே யாசிக்கிறேன் உன்னிடம்
முட்களை நுகர்ந்த காயம்
ஆறவில்லை மூக்கில் இன்னும்
பூக்கள் வேண்டும்
முட்கள் வேண்டாம்

...............

இவ்வாறு வேண்டும், வேண்டாம் தொடர்-கின்றது. இங்கேயே இக்கவிதையில் படிமங்கள் ஏதும் உள்ளனவா என்றால், இல்லையென்பதை ஒரு சிறுகுழந்தை கூடச் சொல்லி விடும். ஒரு கலைத்துவம் உண்டா? இசை நயம் கற்பனா சக்தி ஏதும் உண்டா? என்ன உண்டு? நானும் நீங்களும் கூட இவ்வாறு வசனம் எழுதலாம் தானே? இதேவேளை எமது கவிஞன் சக்கரவர்த்தியின் "பின்னென்ன உயர் குல வேளாளன்" (முழக்கம் டிசெம்பர் 7, 1999) கவிதையின் முதல் சிலவரிகளை எடுத்து கவிப்பேரரசின் கவிதையுடன் ஒப்பிடுவோம்.

எலும்பை ஊடறுத்து உயிரைத் தீண்டும்
ஊசிக்குளிர்
வாழ்வின் மிடறறுத்து
உயிரைத் துரத்தி
உறிஞ்சிக்குடிக்கும் வெஞ்சினம்

கொடுமைகளில் சிதைந்து சுற்றம்
ஆன்மாவும் சிறைக்கும் கூதல்
வெளியில்
தடுமாறிச் சுவாசிக்கும்
தட்டுக் கெட்டு மிஞ்சிய சுற்றம்
புல்லும் பூண்டும்
செடியும் கொடியும் பூவும்
நீயும் நானும் நம் மொழியும்
பிரளயத்தில் இல்லாது போய்விட்ட
மறு பொழுதின் அகால வேளையிலும்
உயிர் வாழ்வான்
உயர்குல வேளாளன்.

சரி இனி சக்கரவர்த்தியின் கவிதாவீச்சை இச்சிறு பகுதியை அடிப்படையாகக் கொண்டு முதலில் பார்ப்போம். இங்கே கவிஞன் தான் எடுத்துக் கொண்ட தலையங்கத்திற்கு எவ்வாறு உயிர் கொடுக்கின்றார் என்பது அவரது கவிதாவரியில் படிமங்களாக மிளிர்கின்றது. முதலில் கனடாவின் குலை நடுங்கும் குளிரையும் இக்குளிர் சூழலிலும் தன் மனதை அறுக்கும் ஆண்ட பரம்பரையின் சாதிவெறி மேலான வெஞ்சினத்தையும் வெளிப்படுத்தும் விதம் பிரமிக்கத் தக்க-தாகவுள்ளது. ஒரு வெப்ப வலயப் பிரதேசத்தி-லிருந்து புலம் பெயர்ந்து வந்த ஒருவரைப் பொறுத்தவரை கனடாக் குளிர் எவ்வளவு தாக்கமானது என்பதை பின்வரும் வரிகள் துல்லியமாக எடுத்தியம்புகின்றன.

'எலும்பை ஊடறுத்து
உயிரைத் தீண்டும்
ஊசிக்குளிர்'

இதைவிட மேலாக எந்தவொரு கவிஞனா-லும் கூறமுடியாது என்பது எனது கணிப்பாகும்.

இதேபோல் தன் மனக்கண்ணிலுள்ள வெறுப்-பையும் கூட எவ்வளவு சிறப்பாக மனதைக் குத்தும்படி வெளிப்படுத்துகின்றார். ஆகவே தான் எனது தலையங்கத்தில் வைரமுத்துவின் வசனங்-கள் சக்கரவர்த்தியின் கவிதா வரிகள் முன் தலைகுனிந்து நிற்கின்றன என்று கூறவேண்டி வந்தது. மேலும் இங்குள்ள வெறுமையையும் (குளிர் காலத்தில்) எமது இடம்பெயர்வு எமது மொழியின் சிறப்பின்மை (இங்கே) ஒரு அன்னியப்பட்ட சூழலிலும் சாதி உணர்வுகள் இன்னும் எம்மத்தியில் வாழ்வதை பின்வரும் படிமங்களூடாக வெகுசிறப்பாக வெளிக்-கொணர்கின்றார்.

'புல்லும் பூண்டும்
செடியும் கொடியும் பூவும்
நீயும் நானும் நம் மொழியும்
பிரளயத்தில் இல்லாது போய்விட்ட
மறு பொழுதின் அகால வேளையிலும்
உயிர் வாழ்வான்
உயர்குல வேளாளன்'

இங்கே புலப்பெயர்வை பிரளயம் என்ற படிமத்தின் மூலம் வெளிப்படுத்துவது மிக அழகான கவித்துவமாகவும், பல கற்பனை-களுக்குத் தூண்டுவதாகவும் உள்ளது.

அடுத்து வைரமுத்துவின் வசன கவிதையின் அடுத்த பகுதியைப் பார்ப்போம்.

பூமிக்கு வரும்
புதிய நூற்றாண்டே
சவுக்கை எறிந்து
சாமரம் கொண்டு வா
இரத்தம் சிந்திய களங்களில்
புத்தம் புதிய பூச்செடி நடு
பள்ளங்கள் நிரப்பு
பாலங்கள் எழுப்பு

மேலுள்ள வரிகளில் கொண்டுவா, பூச்செடி நடு, பள்ளங்கள் நிரப்பு, பாலங்கள் எழுப்பு என்பனவற்றில் என்ன படிமங்கள் என்ன கவித்துவம் என்ன அழகு அல்லது ஏதாவது கற்பனை வளம் தான் உண்டா? இவர்களெல்லாம் கவிப்பேரரசர் என்றால் சக்கரவர்த்தியை இந்தப் பிழைப்புவாதிகளின் வரிகளில் எப்படி அழைப்-பது? முதலில் அப்படி தம் முதுகைத் தாமே சொறி-யும் கொள்கை இல்லாத இந்த மூன்றாம் தரப் பேர்வழிகளால் சக்கரவர்த்தியையும் இழிவுபடுத்த விடலாமா? கனடாவில் எவ்வாறு இந்த மூன்றாம்தர வகையறாக்கள் மக்கள் முதுகில் சவாரிவிட முடிந்தது? இந்தக் கேள்வியை நாம் கேட்க வேண்டாமா? தேச விடுதலைப் போரின் ஆரம்ப கட்டத்தில் அதாவது 1984, 1985 இல் போராளிகள் மத்தியில் ஒரு தேடலும் தியாகமும், மனித நேயமும், சமூக உணர்வும் எல்லார் மத்தியிலும் நிரம்பியிருந்த வேளையில் தான் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் "மண் சுமந்த-மேனியர்" என்ற நாடகமும், கவிதா நிகழ்வும் நடாத்தப்பட்டன. அன்றைய நிகழ்வுகள் வெறும் இராணுவ ஒடுக்குமுறையையும், சமூக வக்கிரத்-தையும் வெளிக்கொணர்ந்த போதிலும் மிகவும் கலாபூர்வமாக இருந்தன. அன்றைய கவிஞர்களாக சேரன், இளவாலை விஜயேந்திரன், வ.ச.ஐ.-ஜெயபாலன், செழியன், நிலாந்தன் என்றழைக்-கப்படும் நிலா, மு.பொ., சு.வில்வரட்ணம் போன்றவர்களும் ஏனையோரும் மிகச் சிறந்த கவிதைகளை வெளிக் கொணர்ந்தார்கள். பின்னர் ஏற்பட்ட அரசியல் குளறுபடிகளாலும், மக்களின் ஜனநாயக, கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளாலும் பலரது முன்னேறிய குரல்-கள் மழுங்கடிக்கப்பட்டு சாகடிக்கப்பட்டன. ஆனால், இன்று 15 வருடங்களின் பின்னர் இங்கே கனடாவில் யார் யாரோ எல்லாம் கவிஞர்களாம் என்ற செய்தி காதைத் துளைக்கின்றது. அதை நண்பர் சக்கரவர்த்தியின் யுத்தத்தைத் தின்போம்" கவிதை வரிகளில் சொல்வதென்றால் அது வருமாறு,

போரின் பகைப்புலம் அறியாது
போர்ப்பரணி பாடும்
பாட்டுக்காரர்கள்
எவரோ - அவரே என் தேசம்
இன்னமும்
எரிந்து கொண்டிருக்க
முதற் காரணி என்பேன்.

இங்கே இரு கவிஞர்களினதும் ஒரே விடயம் சம்பந்தமான (இரத்தம் சிந்துதல், கலவி) கவிதா உணர்வை ஒரு முறை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

முதலில் வைரமுத்துவின் கவிதை வரிகளைப் பார்ப்போம்.

இருளின் மடியில்
இரவின் பிடியில்
ஆண் பெண் நிகழ்த்தும்
அகிம்சையான வன்முறை தவிர
வேறெங்கும் இரத்தம்
வெளிப்பட வேண்டாம்.

அடுத்து சக்ரவர்த்தியின் உயர்குல வேளாள-னில் வரும் பின்வரும் கவிதா வரிகளை மேலுள்ளதுடன் ஒப்புநோக்குவோம்.

வலி பொங்கும்
நெடும் பொழுதுகளில்
நீர்ப்பை உடைந்து கசிய
பொசுங்கிப் பெருகும்
குருதிப் பெருக்கில்
பிறப்பைத் தவிர்த்து
பன்னீரும் பாலும்
பாய்ந்தோடும் யோனி வழியாகவா
பிறப்பெய்தினான் - இந்த
உயர்குல வேளாளன்!

குப்பி விளக்கின் உச்சிப் புகைநிழல்
சுவரில் நெளிந்து ஊர
மங்கிய மஞ்சள் வெளிச்சத்தில் - அந்த
மந்தகாச இரவுகளில்
அம்மையப்பன்
கூடிக் கொண்டாடும்
கலவி தவிர்த்து
மாங்கனி உண்ணும்
மந்திரத்தில் பிறந்தவனா
இந்த உயர்குல வேளாளன்

மேலுள்ள கவிதா வரிகளில் பின்வரும் படிமத்திற்கு ஈடும் இணையுமாக வைரமுத்துவின் கவிதையில் ஒரு வரியையாவது காண முடியுமா?

குப்பி விளக்கின் உச்சிப் புகை நிழல்
சுவரில் நெளிந்து ஊர

மேற்படி வரிகளின் பின்னே ஒரு வறுமை மிகுந்து நொடிந்த ஒரு குடும்பத்தின் ஏழ்மை நிலை நம் மனக்கண்முன் வந்தாடவில்லையா? எங்களில் பலரும் இவ்வாறான குப்பிவிளக்கின் வெளிச்சத்தில் உதித்தவர்களில்லையா? அதற்கு மேலும் குப்பிவிளக்கின் சுடரின் அழகும், நளினமும் சுவரில் நெளிந்து ஊர்வது போல் எமது கடந்த கால வாழ்வை நினைவூட்டுகின்றதல்லவா? இங்கே தான் ஒரு கவிஞனின் வெற்றி தீர்மானிக்-கப்படுகின்றது. அதாவது அவன் ஒரு வரி மூலம் ஆயிரம், கற்பனைகளை வாசகன் மனத்தில் எழுப்ப வேண்டும். வைரமுத்துவின் வரிகளில் மூலம் இவ்வாறு உங்களுக்கு ஏற்படுகின்றதா?

உண்மையில் ஒரு கவிஞனின் கவித்துவம் சிறக்க வேண்டுமானால் பாரதியார் கூறியது போல் "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" ஆனால், வைரமுத்துவிற்கும் அவர் கால் பிடிக்கும் இங்-குள்ள வியாபாரக் கூட்டத்திற்கும் அடிப்படை-யான மன உணர்வு இல்லையே" பின் எப்படி கவிதைபிறக்கும். ஆனாலும் கூட இந்த மூன்றாம் தரத்தையும் ரசிக்கின்ற வானொலி தொடர்புப் பேச்சாளர் கூட்டமொன்று இங்குள்ளது அவர்களுக்கு வரப்பிரசாதம் தான். ஆனபடியால் தான் ஊமையர் கூட்டத்தில் உளறுவாயன் கெட்டிக்காரன்.

சரி, இனி உதயன் ஆதங்கப்படுவது போல் உதயனின் வியாபார மேடையில் வைரமுத்து கூறியது போல் தமிழீழ காவியத்தை பின்வரும் வரியில் எழுதி விட்டாராம். சரி அதையும் பார்ப்போமே.

இன்னும் ஒன்றே ஒன்று
ஐ.நா. வளாகத்தில்
தலை தூக்கிப் பறக்கட்டும்
தமிழீழக் கொடி.

திரும்பவும் வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புவது என்னவென்றால் சும்மா தமிழீழம் என்று சொல்லிவிட்டால் மட்டும் அதைக் கேட்டு ஏமாறாதீர்கள், கொஞ்சமாவது சிந்தியுங்-கள். சோக்கிரட்டீஸ் சொல்லியது போல் "அறிவாயுதம் தான் அனைத்துலகையும் அடிபணிய வைக்கும் ஆயுதம்." திணறெடுத்த தோள்களிலே தூக்கிய தீட்டிய ஈட்டிகள் மட்டும் போதாது தோழர்களே!

மேலுள்ள ஒரு வரியை வைரமுத்து எழுதி விட்டதில் உதயனிற்கு ஏற்பட்ட புளகாங்கிதம் எம்மவர்க்கும் ஏற்படாதென்றே நம்புகின்றேன்.

கடைசியாக சக்கரவர்த்தியின் கவிதையில் கூறப்பட்ட பல விடயங்களை அலசி ஆராய இந்தப் பக்கம் மாத்திரம் போதாதென்ற முறையில் அவரது கவிதையின் கடைசி உயிரோட்டமான கவிதை வரிகளை உங்கள் முன் வைத்து விடை-பெறுகின்றேன்.

என் துன்பியல் கவிதையின்
இருதயம்
தினம் தினம் கண்ணீருடன்
எவர்க்காக உருகிச் சாகிறதோ
அவர்கள் உனக்காகவும்
வெடித்துக் கொள்வது தான்
இன்னும் என் பெரிய சோகம்!

அக்கினிக்குஞ்சு

நன்றி - நூலகத்திட்டம்



### இரண்டாயிமாம் ஆண்டில் இனப்பிரச்சினை:

# மூன்றாம் தரப்பும் சந்தேகங்களும்

#### ஐக்கிய தேசியக் கட்சி

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இந்நாட்டு இனப்பிரச்சினை தொடர்பாக நேரடியான கருத்து எதனையும் தெரிவிக்காது தொடர்ந்தும் தவிர்த்து வந்துள்ளது. எதிர் விரோதமாகக் காணப்பட்ட நிலைப்பாடுகள் இரண்டு மீது ஐ.தே.கவின் கருத்து தங்கியிருந்தது. முதலாவதானது, ஒருமைப்பட்ட அரசியலமைப்பு ஒன்றின் கீழ் அன்றி அதற்கு அப்பால் செல்லும் தீர்வொன்றைத்தாம் விரும்பவில்லை என்பதாகும். அதாவது 1987இந்திய-இலங்கை ஒப்பந்தச் சந்தர்ப்பத்தில் அப்போதைய பிரதமரான ஆர்.பிரேமதாச கொண்டிருந்த நிலைப்பாடே அது ஆகும். இரண்டாவது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது தமிழ் மக்களின் பரந்துபட்ட ஆதரவைப் பெற்றுள்ளதால் அந்த இயக்கம் உடன்படாத அரசியல் தீர்வொன்றினால் பலன் ஏற்படாது என்பதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழ் மக்களையும் இரு பிரிவினராகக் கருதுவதை அது எதிர்க்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் கலந்துரையாடல் நடவடிக்கையொன்றைக் கட்டியெழுப்புவதும், இறுதித் தீர்வு வரை நின்று பார்த்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாகத் தற்காலிக நீண்ட யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்துவதும் அவசியம் என்பது ஐ.தே.கவின் கருத்து ஆகும்.

இந்த நாட்டின் இன முரண்பாட்டை ஒருமைப்பாடு அரசமைப்பினுள் மட்டுமே தீர்க்க வேண்டும் எனத் தெரிவிப்பதன் ஊடாகச் சிங்கள தேசியவாதச் சக்திகளையும், கூடவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது யுத்தமயமற்ற நெருக்கமொன்றை ஏற்படுத்துவதன் ஊடாகத் தமிழ்த் தேசியச் சக்திகளையும் திருப்திப்படுத்துவது தேர்தல் ஆண்டான 1999 பூராவும் ஐ.தே.கவின் கொள்கையாக இருந்தது.

ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியிருந்தார். "தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பேன். தேவை ஏற்பட்டால் மூன்றாம் தரப்பின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வேன். யுத்த நிலவரத்தைத் தணியச் செய்ய நடவடிக்கை எடுப்பேன்.



படம்: சூரியன்.கொம்

சமூகத்தில் எல்லோரும் உடன்படக் கூடிய நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்றை ஏற்படுத்தும்வரை அரசிலமைப்புச் சீர்திருத்தத்தைச் செய்ய மாட்டேன். வட - கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபையொன்றை நியமிப்பேன்.

உத்தேச இடைக்கால நிர்வாக சபையின் தலைமைப் பதவியைப் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு வழங்குவதாக ஐ.தே.க தெரிவித்தது. ஆனாலும், அந்தச் சபை பற்றிய மேலதிக விபரங்களைத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டது. ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஐ.தே.க, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாக ஒருவகை அனுசரித்துப் போகும் நடைமுறையையே பின்பற்றியது. வட-கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்றதான நிர்வாகமய மற்றும் பாதுகாப்புத் துன்புறுத்தல்கள் ஆகியனவற்றைக் குறைப்பதற்கு ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்குறுதியளித்தாலும் 1999 செப்டம்பர் மாதத்தில் அரசாங்கத்தின் சம வாய்ப்புச் சட்டத்தை ஐ.தே.க. எதிர்த்தது.

#### மக்கள் விடுதலை முன்னணி

#### (ஜே.வி.பி.)

மக்கள் விடுதலை முன்னணி இப்போது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக அரசியல் அமைப்பினுள் நிரந்தர இடமொன்றைப் பிடித்துக்கொண்டுள்ளது. பாரம்பரிய இடதுசாரிகளின் இடத்தைத் தற்போது மக்கள் விடுதலை முன்னணி பெற்றுக்கொண்டுள்ளது.

இடதுசாரி அரசியல் கட்சிகள் மத்தியில் அது மறுக்க முடியாத தலைமையாக மாறியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியும் 1999ம் வருடம் பூராவும் மாகாணசபை மற்றும் ஜனாதிபதித் தேர்தல்கள் தொடர்பாகவே தனது அடிப்படைக் கவனத்தைச் செலுத்தியது. அது தமிழ், முஸ்லிம் வாக்காளர்களை வென்றெடுப்பதற்கான கடுமையான முயற்சி எதனையும் எடுக்கவில்லை. இந்த நாட்டுத் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்கின்ற நவ சமசமாஜக் கட்சியுடன் ஐக்கிய முன்னணி ஒன்றுக்காக பயணம் செய்தாலும் இனப்பிரச்சினை தொடர்பாகத் தனது பழைய கொள்கைகளிலேயே தொங்கிக் கொண்டிருப்பதில் வெற்றி கண்டது மக்கள் விடுதலை முன்னணி.

யுத்தத்தை மக்கள் படுகொலை யுத்தமென்று கூறும் அது, யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமெனக்கூறி நின்றது. ஆனாலும், யுத்தத்தை நிறுத்தக் கூடிய வழியொன்றை அது முன்வைக்கவில்லை. அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத்திட்டமானது மக்கள் விடுதலை முன்னணியின் கருத்துப்படி நாட்டைப் பிரிக்கும் ஒரு பொறியாகும். வட-கிழக்கு தமிழ் மக்கள் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது ஆனது பிளாஸ்திரி ஒட்டுவது போன்றது என அது நிராகரித்தது. வன்னிப் பிரதேசத்திற்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் அனுப்பாமை தீர்வல்ல எனக்கூறி நிராகரித்த அது வட-கிழக்கில் இருந்து வெளியில் வாழும் தமிழ் மக்களின் மனித உரிமைகள் தொடர்பாகச் செயலூக்கமற்ற பிரதிபலிப்பொன்றையே காட்டியது.


மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வாவின் அபிப்பிராயப்படி இந்த நாட்டில் இருப்பது இன முரண்பாடல்ல. அது இலங்கையர் என்ற ஒரு இனம் உருவாக்கப்படாததால் ஏற்பட்ட தேசிய முரண்பாடு ஒன்றாகும். மக்கள் விடுதலை முன்னணி இலங்கையைப் பல்லின அரசொன்றாக ஏற்றுக்கொண்டது. ஆனாலும் மலையகத் தமிழ் மக்களைத் தனியாக அடையாளப் படுத்துவதை ஏற்றுக் கொள்ளவில்லை. அது போலவே தேசிய முரண்பாட்டுக்கு அரசியல் தீர்வொன்று தேவை என ஜனாதிபத் தேர்தலின்போது மக்கள் விடுதலை முன்னணி கூறியிருந்தது. ஆனாலும் முதலாளித்துவ முறையினுள் செய்யப்படும் எந்தவிதமான அதிகாரப் பகிர்வும் பிரச்சினைக்குத் தீர்வாகாது எனவும், அவ்வாறான அனைத்து நடவடிக்கைகளும் நாட்டை இரு கூறாகப் பிரிக்கத் துணை போகும் என்பதும் அதன் கருத்தாகும். மக்கள் விடுதலை முன்னணியின் அபிப்பிராயத்துக்கிணங்க இந்த நாட்டுத் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்ட சுயாட்சிப் பிரதேசமானது, ஜனநாயகம் முழுமையாக நிறுவப்பட்ட சமதர்ம ஆட்சி ஒன்றினுள் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

#### தமிழ் அரசியல் கட்சிகள்

பொதுவாகவே தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்துமே அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப்பொதி போதியதானதாக இல்லையெனக்கூறி நின்றன. அவர்களின் பொது உடன்பாடானது சமஷ்டி முறை ஒன்றாகும். வருடத்தின் ஆரம்பத்தில் இலங்கைக்கு வந்த வட-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப் பெருமாள், அரசாங்கத்தின் யோசனைகளைப் பூரணப்படுத்தும் நோக்கத்தோடு நீண்ட ஆவணம் ஒன்றைச் சமர்ப்பித்தார். சமஷ்டி ஆட்சி முறை ஒன்றே அவரது ஆலோசனைகளின் இலக்காகும். ஆனாலும் அ.வரதராஜப் பெருமாள் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகிய இருவருமே 13ம் திருத்தச் சட்டத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையை ஆரம்ப நடவடிக்கையாக ஏற்றுக் கொள்ள விருப்பத்தைத் தெரிவித்தனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், - புளொட் இயக்கமும் அந்த நடவடிக்கையையே பின்பற்ற இடமிருந்தது தெரிந்தது. த.வி.பு.இயக்கம் பங்குபற்றாத எந்த ஒரு மாகாண அரசாங்க முறையிலும் பங்குபற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி விருப்பமின்மையைத் தொடர்ந்தும் காட்டியது. தமிழீழ விடுதலை இயக்கமும் - ரெலோ அவ்வாறான ஒரு கருத்தையே கொண்டிருந்தது.

#### லிபரல் கட்சி

லிபரல் கட்சி இலங்கையிலுள்ள மிகச் சிறிய கட்சியாகும். ஆனாலும், இலங்கையில் அரசியல் கருத்தாடலை கலந்துரையாடலைப் போஷிக்கக் கூடிய கருத்துப் பரிமாற்றல்கள், வாதங்கள், கருத்துவாதங்களை முன்வைக்கக்கூடிய கட்சி ஒன்றாகும். விஷேடமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வை அடி நாதமாகக் கொண்ட அரசியல் அமைப்பொன்றை ஸ்தாபிக்க லிபரல் கட்சி ஆற்றியுள்ள பங்களிப்பு மிக முக்கியமானதாகும். 1999ஆம் ஆண்டு தொடக்கத்தில் லிபரல் கட்சியானது அரசாங்கத்தின் அரசியல் தீர்வுத்திட்டத்திற்கு மாற்று அரசியலமைப்புச் சீர்திருத்தக் கோவையொன்றை விரிவாகச் சமர்பித்தது. "21ஆம் நூற்றாண்டுக்கான ஒரு வெளியீடு" எனப் பெயரிடப்பட்ட அந்த ஆவணத்தினூடாக மாகாண சபைகளுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்படக்கூடிய விதத்தில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு இருந்தன. தற்போதைய மாகாண சபைச் சரத்து சட்டத்தில் அடங்கியுள்ள இடை நடுவிஷயப் பட்டியலை நீக்கவும், இலங்கையைச் மதசார்பற்ற அரசு ஒன்றாகப் பிரகடனப் படுத்தவும் அதனூடாக ஆலோசிக்கப்பட்டு இருந்தது. 1995இல் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் - மோர்ஜ் ஊடாகச் சமர்பிக்கப்பட்ட மாற்றுச் சமஷ்டி அரசியலமைப்பு வரைவின் அளவுக்கு விஸ்தீரணம் கொண்டதாக இல்லாவிடினும், இந்த ஆவணம் எளிதாக அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாகப் புதிய ஆலோசனைகளை முன்வைத்து. இந்த யோசனைகள் தொடர்பாகப் போதியளவு கலந்துரையாடல் ஒன்று எமது சமூகத்தில் ஏற்படவில்லையென்பது தேவனைக்குரியதும் கவலைக்குரியதுமாகும்.



படம்: சூரியன்.கொம்

#### தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1999ஆம் ஆண்டிலும் அரசியல் தீர்வு தொடர்பாக தனது கருத்தைப் பல சந்தர்ப்பங்களிலும் தெளிவுறுத்தியிருந்தது. 1985 திம்பு நகரில் இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழ் அரசியல் கட்சிகள் / இயக்கங்கள் ஆகியனவற்றுக்கு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட அடிப்படை யோசனைகள் நான்கும் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை / கலந்துரையாடல்களின் அடிப்படையாக இருக்க வேண்டும் என அது கூறியிருந்தது. அவையாவன,

1. இந்த நாட்டுத் தமிழ் மக்களைத் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளுதல்.
2. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது.
3. வடக்கு - கிழக்கை இந்த நாட்டுத் தமிழ் மக்களது பாரம்பரிய தாயகமாக ஏற்றுக் கொள்ளல்.
4. இந்திய வம்சாவளியான இந்த நாட்டில் வாழுகின்ற மலையகத் தோட்டப்புற மக்களது பிரஜாவுரிமையை ஏற்றுக் கொள்வது ஆகியனவாகும்.

1999 மே மாதம் 23 ஆம் திகதி கனடாவின் ஒட்டவா நகரில் நடைபெற்ற தமிழ்த் தேசியம் தொடர்பான மாநாட்டில் கீழ் வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

1. தமிழ் மக்களுக்கு விஷேடமான வரலாறு, கலாசாரம்,மற்றும் மொழி ஆகியன உள்ளன. இந்த விடயங்கள் ஒன்று சேர்வதால் இனமொன்று உருவாகும்.
2. இலங்கை எனும் தீவிலே உறுதியாக வேறாக்கப்பட்ட எல்லைகளுடன் கூடிய தமிழ் மக்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாக வாழ்ந்து இருக்கின்றார்கள்.
3. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மீறப்பட்ட முடியாததாகும்.

அதனால்,

அ. நாம் தமிழ் மக்கள் எனும் இனமாவோம்.

ஆ. எமது வரலாற்றுத் தாயகம் தமிழ் ஈழமாகும்.

இ. ஏனைய அனைத்து நபர்களுக்கும், இனங்களுக்கும் போல எமக்கும் சம உரிமை உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பிரதிநிதியான விஸ்வநாதன் ருத்திரகுமாரன் தனது உரையில் குறிப்பிட்டதாவது, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமின்றிச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்செல்லாது என்று ஆகும். யுத்தம் நடைபெறும் பிரதேசங்களிற்குச் செல்வதற்கு சர்வதேச நிவாரண சேவைகளுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தார். ருத்திரகுமாரனின் கூற்றுப்படி அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அரசியல் தீர்வுத்திட்டம் போதுமானதாக இல்லை. கொசோவோ, சிக்கலில் இரு தரப்பினருக்கும் இடையே உள்ள "றம்புல்லி" உடன்படிக்கையைப் போல், இரு தரப்பினருக்குமே தடை அதிகாரம், இராணுவத்தை விலக்குதல், சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் மூன்று வருடங்களின் பின் மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது போன்ற ஆலோசனைகள் எதுவுமே சந்திரிகாவின் தீர்வுப்பொதியில் இல்லையென ருத்திரமூர்த்தி கூறியிருந்தார். அதன்படி இந்தத் தீர்வுத்திட்டம் சர்வரோக நிவாரணியாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் ஏமாற்று வித்தையாகும். அந்தத் தீர்வுப் பொதியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரி நிற்பது நிந்தனையானதாகும்.

இதற்குப் புறம்பானதாக 1999 நவம்பர் 27ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

"அந்நியோன்னிய நம்பிக்கையும், நட்புறவு சூழ்நிலையினுள், சர்வதேச மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடனேயே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முடியும். சமாதானச் சூழ்நிலை எனப்படுவது யுத்தம் நிறுத்தப்பட்டு கைப்பற்றப்பட்டுள்ள இடங்களிலிருந்து அரசாங்கப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்டதும், பொருளாதாரத் தடைகள் இல்லாது நீக்கப்பட்டதுமான நிலையுமாகும்.


"நாம் சமாதானக் கதவைத் திறந்தே வைத்திருக்கிறோம். சிங்கள மக்களுக்கு நாம் சமாதானத்தையும் நல்லெண்ணத்திற்கான சமிக்ஞைகளையும், அனுப்புவோம். நாம் பிரேரிக்கும் சமாதானச் சூழலை உருவாக்குவதற்குச் சிங்களத் தலைமை உடன்படாது என்பதை நாம் அறிவோம். அதுபோலவே சிங்களப் பேரினவாதத் தலைமை தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தமய வன்முறையினை ஒடுக்குமுறையினை எளிதில் கைவிடாது என்பதை நாம் அறிவோம். அதனால் சிங்கள அரசியல் தலைமையுடன் கலந்துரையாடலில் ஈடுபடுவதனூடாக எமது தேசிய முரண்பாட்டைத் தீர்த்துக் கொள்ளலாம் என்ற கற்பனையில் நாம் வாழாதிருப்போம்." இதற்கிணங்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்கள அரசியல் தலைமை தொடர்பாக உள்ள தன்னுடைய நம்பிக்கையீனத்தைச் ஈடுகட்ட மூன்றாம் தரப்பு மத்தியஸ்தவமானது அத்தியாவசியமான நிபந்தனையொன்று எனக் கருதுவதாகத் தெரிகிறது. அதுபோலவே, அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதி தொடர்பாகக் கொள்கை ரீதியான எதிர்ப்பு ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைக்கும் என்பதாகும். தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சமாதானக் கோரிக்கைக்கும் இடையே தெளிவான முரண்பாடு ஒன்று உள்ளது.

**மோர்ஜ - இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன முரண்பாடு 1999 - 2000 வளர்ச்சியும், போக்கும்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள்.**

*தமிழில்: சி.செ.ராஜா*
*2000.03.22*

நன்றி - நூலகத்திட்டம்






# ஒரு பாலமாக இருக்க விரும்புகிறேன்!

நான் நடிக்கும் சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களின் பாத்திரங்கள் குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. ஜனவரி மாதம் 13ஆம் திகதி சரிநிகர் பத்திரிகையில் வெளியான கடிதத்தை எழுதியிருந்த மல்லாவியைச் சேர்ந்த இ. இளங்குமாரனும் சில கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அவர் குறிப்பிட்டிருந்த இராணுவத்தினர் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளைக் கொண்ட நாடகங்களை சிங்களத்தில் மட்டுமல்ல தமிழில் கூட தலைநகரில் தயாரிக்க முடியாத துர்ப்பாக்கியவான்களாக இந்தத் துறையில் இருக்கும் தமிழர் அனைவரும் உள்ளோம் என்பது உண்மை.

நான் நடிப்பு - (நாடகம்) மற்றும் பத்திரிகை போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றேன். தாய் மொழியில் ஆரம்பித்த நாடகப் பிரவேசத்திற்குப் பின்னர் சிங்கள தொலைக்காட்சி, சினிமாவிலும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன - ஒரு நடிகனாக, 'மாணவ வாரண' (மானிடத் தணிக்கை) என்ற சிங்களத் தமிழ் இணைத் தொலைக்காட்சித் தொடரில் முதலில் சிங்களத் துறையில் காலடி எடுத்து வைத்தேன். அந்த நாடகப் பிரதியை நிமல் தென்னக்கோன், முன்னாள் ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜாவுடன் கலந்தாலோசித்தே எழுதியிருந்தார். ஆதலால் அந்த நாடகம் இரு இனங்களையும் பிரச்சினைகளையும் நியாயமாகவே அணுகியது என்பது எனது அபிப்பிராயம்.

அதில் கிருஷ்ணா என்ற பாத்திரத்தை நான் ஏற்றிருந்தேன். அதற்குப் பின்னர் சிங்கள நாடகத் துறையில் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டேன். பெரும்பாலும் எனக்குக் கிடைத்த பாத்திரங்கள் தமிழ்ப் பேசும் போராளியாகவே இருந்துள்ளன.

இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய நாடங்கள் என்ற பெரியல் அமைந்தவை அவை. எனினும் வியாபார நோக்குடனே அவை தயாரிக்கப்பட்டன என ஈற்றில் நான் அறிந்து கொண்டேன்.

"உத்துறு குறு சட்டன" (குடாநாட்டுப் போர்) என்ற சிங்கள நாடகம் எனது நாடகத் துறையில் திருப்பத்தை ஏற்படுத்தியது என்றே நினைக்கிறேன். உண்மையில் இது ஒரு நாவல். அந்த நாவலை எழுதியவரின் சொந்த தங்கைக்கு நிகழ்ந்ததையே அவர் நாவலாக்கியிருந்தார்.

மட்டக்களப்புக்குச் சென்ற தம்பதியினரை தமிழ்ப் போராளிகள் தமது பிரதேசத்தில் அடைக்கலம் கொடுக்கிறார்கள். (தற்சமயம் இந்த தம்பதிகள் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர்.) தமிழ் டொக்டர் ஒருவரே நாவலாசிரியரின் தங்கையை திருமணம் செய்து கொண்டார். ஆனால், நாடகத்தில் அரச ஊடகத்தில் வெளியாக இருந்ததாலேயோ என்னவோ கதையின் முடிவு மாற்றப்பட்டிருந்தது.

அதில் என்னுடைய பாத்திரம் இராஜேந்திரன். ஒரு பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன். யுத்தத்தின் ஆரம்ப காலங்களை அறிந்திருப்பவன் என்பது மட்டும் எனக்குத் தெரிந்திருந்தது. அதைத் தவிர நாடகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய மாற்றங்களைப் பின்னரே அறிந்திருந்தேன். எனினும் தமிழ்ப் போராளியின் சீருடை என்ற பெயரில் வழங்கப்பட்ட ஆடைகளில் சில மாற்றங்களை நான் கேட்டிருந்த போது இராணுவ கப்டன் இலட்சினைகள் வழங்கப்பட்டன. இன்றைய போரில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டன. எனக்கு மேலதிகாரி ஒருவர் இருப்பதும் நீக்கப்பட்டது. குறிப்பாக இந்த நாடகம் 'சிங்கள சமூகத்துக்காக' எடுக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

மற்றுமொரு நாடகம் தற்சமயம் ரூபாவாஹினியில் ஒவ்வொரு புதன்கிழமையும் ஒளிபரப்பாகிறது. 'வலிக்கத்தறட அலுத் இரக்'' (பாலைவனத்தில் ஓர் உதயம்) என்ற நாடகம். பிரதியமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுடன் நானும் ஒரு பாத்திரமாக மட்டும் நடிக்கிறேன். அதிலும் கூட 'மாணவ வாரண'வைப் போன்று உயிர் நண்பனைக் காப்பற்ற எனது இனத்தவனையே நான் சுட்டுக் கொல்லுகின்றேன். இந்தக் கதையின் முடிவு வெறும் கற்பனை என்றே கூறவேண்டும்.

அதேபோன்று தற்போது ஒளிபரப்பாகும் சர்வதேச விருது கிடைத்த 'சரோஜா' திரைப்படம். இதில் இறுதி நேரத்தில் சக போராளிகளினால் நான் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றேன்.

உண்மையிலேயே இனப் பிரச்சினை தோன்றிய காரணம் தெரியாத ஒரு குடிமகனாகவே இத் திரைப்படத்தில் நான் தோன்றுகின்றேன். என்னில், உள்ள ஆத்திரத்தினால் சக போராளிகள் எனது மனைவியையும் சுட்டுக் கொல்லுகிறார்கள். இந்த கட்டம் நிஜமான வாழ்க்கையில் இல்லையென்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவற்றைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருப்பவன் நானில்லை. தயாரிப்பாளருடன் பெரும் வாக்குவாதத்தை மேற்கொண்டேன் ஆனால், அதனை மாற்றுதல் சாத்தியமாகவில்லை.

தமிழர் எவ்வாறு இருப்பார்கள் என்று தெரியாத சிங்களவர்கள் உள்ளனர். என்னைப் பொறுத்தவரை பெயர், புகழ், அனைத்தையும் விட, நாடகத்துறை மூலம் இரு இனங்கள் மத்தியில் ஒரு புரிதலை ஏற்படுத்த அடித்தள பாலமாக இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

பத்திரிகைத் துறையில் பாதுகாப்புச் செய்திகளுக்கு நிருபராக இருந்த போதே, பொலிஸ், முப்படைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியவனாக இருந்தேன்.

விடுதலைப் புலிகள் கூறும் சிங்கள இராணுவம் என்பதற்கு அர்த்தம் புரிகிறதா என்று சில வேளைகளில் அவர்களிடம் கேட்டிருக்கிறேன். ஒரு உயர் அதிகாரி பதிலளித்தார். நாம் சிங்களவர்களாக உள்ளதால் தான் என்று. நான் கூறினேன். அது மட்டுமல்ல உங்கள் வாகனங்கள் மற்றும், படைகளின் இலட்சினைகளில் சிங்கள எழுத்துக்கள் மாத்திரம் பொறிக்கப்பட்டிருப்பதை அவதானித்தீர்களா? சிங்களம், தமிழ் இரண்டு மொழிகளும் சரிக்கு சமனான அரச கரும மொழிகள் தானே என்று கேட்டிருக்கிறேன். அதை ஏற்றுக் கொள்ளும் அதிகாரிகளும் உள்ளனர். அதற்கு விளக்கம் இல்லாத விடைகளை அளிக்கும் அதிகாரிகளும் உள்ளனர். இவர்களுக்கு இடையில், அரச நிர்வாக பிரதேசங்களில் நாம் வாழ வேண்டியவர்களாக உள்ளோம் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

எனது கருத்துக்கள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களை இந்தப் பத்திரிகை வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மேர்வின் மகேசன்.**
**கொழும்பு-06**

# வடக்கு முஸ்லிம்கள்....

அவர்கள் மற்றக் காலங்களில் வடகிழக்கு பகுதிகளுக்குச் சென்று (முல்லைத்தீவு, திருமலை) மீன்பிடிப்பர். ஆனால், யுத்தம் இம்மக்களை வடக்கு கிழக்குக்கு செல்லவிடாமல் தடுத்துவிட்டுள்ளது.

### புத்தளத்தின் பொருளாதார ஸ்திரப்பாடு

இடம் பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றங்களில் பெரும்பாலானவை புத்தளம் மாவட்ட நிலப்பாவனை வரைபடத்தில் பயிர்ச்செய்கைக்கோ குடியேற்றத்திற்கோ உதவாதவை எனக்குறிப்பிடப்பட்ட பிரதேங்களிலேயே செய்யப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்த மக்கள், மீள்குடியேற்ற உதிவித் தொகையைப் பயன்படுத்தி வாங்கிய 10 பேர்ச் துண்டு நிலத்தினைத் தவிர வேறெந்தச் சொத்தும் அற்றவர்கள். இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதிகளில் தொழில் வாய்ப்பும் மிகவும் அரிதாகவே உள்ளது. இதனால் இம்மக்கள் மறு நாளாந்த வாழ்க்கைக்கு, உணவு, நிவாரணத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### அவர்களை தமது வீடுகளுக்கு திரும்ப விடாமல் தடுப்பது என்ன?

மேற்கூறப்பட்ட எல்லாப் பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் வடக்கிலுள்ள தமது வீடுகளுக்கு போக எத்தனித்துள்ளார்கள். உண்மையில், இவர்களில் சிலர் தமது இந்த முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளனர். உதாணரமாக கிட்டதட்ட 3000 முஸ்லிம் குடும்பங்கள் மன்னார் தீவுக்கு அதை அரச படைகள் 1991இல் கைப்பற்றிய பின் திரும்பிச் சென்றுள்ளன.

ஆனால், மற்றையவர்கள் திரும்பிப் போவதற்கு அஞ்சுகிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக இவர்களை விரட்டிய புலிகள் தான் இன்னமும் இவர்கள் போக விரும்பும் பிரதேசங்களை கட்டுப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். புலிகளின் அனுமதி இல்லாமல் அங்கு திரும்பிப் போவது பற்றி இடம் பெயர்ந்த மக்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

### திரும்பிச் செல்வதின் பின்னான சமூக பொருளாதார பாதுகாப்பு ஸ்திரப்பாடு

ஆகவே திரும்பிச் செல்தலில் பாதுகாப்பு ஒரு முக்கிய காரணியாகிறது. இரண்டாவதாக இடம்பெயர்ந்த மக்களின் வடக்கிலுள்ள இடங்களில் இப்போது யாரும் வசப்பதில்லை. யாரும் வசிக்காத கைவிடப்பட்ட நிலையில் உள்ள ஒரு பகுதிக்கு ஒரு முஸ்லிம் தனிநபரோ, குடும்பமோ தனிப்பட்ட முறையில் சென்று குடியேறுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். திரும்பிச் செல்லும் தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை அவர்களது நிலைமை வேறுபட்டது. ஏனென்றால், அவர்களது இருப்பிடங்கள் முற்றாகக் கைவிடப்பட்டவை அல்ல. இந்தக் காரணங்களுக்காக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தாம் ஒரு குழுவாகத் திரும்பிச் செல்வதையே விரும்புகிறார்கள்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களால் கடந்த காலங்களில் தெளிவாக தெரிவிக்கப்பட்டே வந்துள்ளன. (ஹஸ்புல்லா, 1997யு, 1997டீ) இதை மேலும் விளக்கலாம்.

1997இல் யுத்த நிலவரத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அரச படைகள் மன்னார் - மதவாச்சி மீதான பாதையை மீளக் கைப்பற்றினர். இந்த நடவடிக்கைக்கான பெயர் எடிபல. அரச படைகள் தமது கட்டுப்பாட்டின்கீழ் பெருமளவான நிலப்பகுதியை இந்த நடவடிக்கையின் பின் கொண்டுவந்தன. மன்னார் மாவட்டத்தின் தென்புறப்பகுதியை 'விடுவிக்கப்பட்ட் பிரதேசம்' என அறிவித்தன -அதாவது சிவில் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. முஸலி என்ற நிர்வாகப் பிரதேசம் - இது. மன்னாருக்கு தெற்கில் உள்ளது. - கூட விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

### முஸலி முஸ்லிம்களின் விருப்பம்

வடக்கிலிருந்து இவர்கள் வெளியேற்றப்பட முன்பு முஸலி பிரிவில் பெருமளவு முஸ்லிம்கள் செறிந்திருந்தனர். உதாரணமாக அப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 66வீதம் முஸ்லிம்களாகவே இருந்தனர். அங்கு 21 பெரிய முஸ்லிம் குடியிருப்புகள், கிட்டதட்ட 500சதுர கிலோமீற்றர் பரப்பைக் கொண்ட அப்பிரதேசத்தில் பரவியிருந்தனர். அப்பிரதேச மக்களின் பொருளாதாரம், விவசாயத்தையும் மீன்பிடியையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

விவசாயத்தைப் பொறுத்தவரை, 6162 ஏக்கர் நிலத்தில் ஒவ்வொரு காலத்திலும் நெல் சாகுபடி செய்யப்பட்டுவந்தது. முசலிக் கரையிலும் மன்னார்க் கரையிலும் வேண்டியளவுக்கு மீன்வளம் உண்டு என்பதை சொல்லத் தேவை இல்லை.

இத்தகைய வளம் நிறைந்த சூழலில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர்ந்த மக்கள் - தமது 'திரும்பும் நாளைப்'பார்த்தபடி 7 வருடங்களாகக் காத்திருந்தனர். 1997ல் இந்த யுத்த சூழலில் ஏற்பட்ட முன்னேற்றம் அவர்களைத் திரும்பிச் செல்வதற்கு உற்சாகமூட்டுவதாய் அமைந்தது. அவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லும் விருப்பத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் தமது 'வாழக்கூடிய நிலை', "ஸ்திரப்பாடு" என்பவை தாம் திரும்பும் போது இருக்குமா என்று அக்கறைப்பட்டனர். தமது அக்கறையை யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட புலிகளுக்கும் அரசுக்கும் தெரிவித்தனர். (ஹஸ்புல்லா, 1997யு) சுருக்கமாக சொல்வதானால்,

அவர்கள் தாம் இந்த நாட்டின் ஏனைய மக்களுடன் அந்நியோன்னியமாக வாழவே விரும்புகிறோம் என்று தான் அன்று சொன்னார்கள். இதை உறுதிபடுத்துவதற்காக அவர்கள் புலிகள், அரசாங்கம், சர்வதேச சமூகம் ஆகிய மூன்றினதும், உத்தரவாதத்தை எதிர்பார்த்திருந்தனர். வாழ்தலுக்கேற்ற நிலைமையும், பாதுகாப்பும் தம் சொந்த இடத்திற்கு திரும்ப அவசியமான அக்கறைக்குரிய விடயங்கள் என்று அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் தாம் புலிகளுடைய பூரண உத்தரவாதம் இல்லாமல் புனருத்தாரண வேலையில் இறங்குவதில் அர்த்தமில்லை என்று அறிவித்திருந்தார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக அரசோ புலிகளோ, சர்வதேச சமூகமோ எதையும் கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. இதனால் திரும்பிப் போதல் என்ற விருப்பம் பலவீனமடைந்தது. ஆயினும், எதிர்காலம் குறித்த நம்பிக்கைகள் அவர்கள் மனங்களில் இன்னமும் உள்ளன.

### முடிவு

அகதிகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மிகவும் விரும்பத்தக்க தெரிவு அவர்கள் தமது செந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வது தான் என்று ஐக்கிய நாடுகள் அங்கீகரிக்கின்றன அனுபவபூர்வமான தகவல்கள், திரும்பிச் செல்வதையே நிரந்தமான தீர்வாக உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றன. ஆனால், இந்த செயல்முறை, மிக அவதானமாக திட்டமிடப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டும். வெளியேற்றத்திற்கான காரணங்கள் முழுமையாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு புதிய சமாதானம் உறுதிப்பாடும் மிக்க சூழ்நிலை வெளியேற்றப்பட்டோர் நம்பிக்கையுடன் தம் வீடுகளுக்கு செல்லக்கூடியவிதத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

இவர்களில் இந்த யுத்தத்தால் ஏற்பட்ட விளைபொருள் இடப்பெயர்வு மட்டுமல்ல, அது இனத்துவ முறுகல் நிலைகளைக்கூட ஏற்படுத்தி விட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை இதுவரை நாட்டின் மொத்த இனப்பிரச்சினையிலிருந்து தனியாகவே எடுத்து ஆராயப்பட்டுவந்துள்ளது. இந்தக் கொள்கை பெருமளவு மக்களை உள்நாட்டிலும் வெளியிலும், பெருமளவான இடம்பெயர்ந்த நிலையிலேயே நீண்ட காலமாக வைத்திருக்கக் காரணமாகியுள்ளது. இந்த நாட்டின் அகதிகள் கொள்கையை மாற்ற வேண்டிய ஒரு தேவை இப்போது நிலவுகிறது. அகதிகள் தொடர்பான கொள்கையில் வேண்டிய மாற்றங்களைச் செய்வது குறுகிய காலத்தில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினைகளைக் கண்டறிவதன் மூலமாக இந்நாட்டின் இடப்பெயர்வுக்கு ஒரு நிரந்தர தீர்வைக் கண்டு கொள்ள முடியும்.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்களை வசதி குறைந்த புத்தளத்தில் விட்டுவிடுவதோ அல்லது அவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு பலவந்தமாக அனுப்புவதோ சரியானதல்ல. இவர்களது பிரச்சினை தனிப்பட்ட நிலைமைகளை கணக்கிலெடுத்து தீர்க்கப்பட வேண்டும். இது ஒரு தனித்துவமான பிரச்சினை. இந்தப்பிரச்சினை பொருண்மையாகப் பார்க்கப்படுமானால், இது மொத்த இனப்பிரச்சினையின் ஒரு பகுதி என்று உணரப்பட முடியும்.

தமது பகுதி நிலைமை சுமூக நிலையை அடைந்து ஆயிரக் கணக்கில் இடம்பெயர்ந்தத தமிழ் மக்கள் தம் இடங்களுக்கு திரும்பும் போதும், முஸ்லிம் மக்கள் வடக்கிலுள்ள தம் பிரதேசங்களுக்கு சுதந்திரமாகத் திரும்ப அஞ்சுகிறார்கள். இப்பிரச்சினைக்கான விடை காணப்படுவதுடன் இடப்பெயர்வுக்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்.

மறுபுறத்தில், இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இன்னமும் திரும்பிச் செல்லல் சாத்தியம் என்றே கருதுகிறார்கள். உண்மையில் இது இப்பிரச்சினையைத் தீர்க்க உற்சாகம் தரும் ஒரு சமிக்ஞையாகும். பொருளாதார காரணங்களுக்கு மேலதிகமாக வடக்கில் காலம் காலமாக நிலவிவந்த தமிழ், முஸ்லிம் இனங்களுக்கிடையேயான நல்லுறவு இவர்கள் திரும்பிச் செல்வதற்கான ஒரு நம்பிக்கை தரும் காரணியாகும். எனவே இதை அடைவதற்காக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் பெருமளவில் திரும்பிச் செல்லல் உடனடியாக சாத்தியமில்லாததால், பொருத்தமான இடைக்கால ஒழுங்குகள், அவர்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக புத்தளத்தில் நிலம் அரிதாக உள்ளமை, வேலையின்மை, அதிகரித்து வரும் வறுமை மட்டம் என்பன ஏழைகளையும், வசதிவாய்ப்பு அற்றவர்களையும் பெரிதும் பாதிக்கும். ஆகவே அபிவிருத்தி உதவிகள் கட்டாயமாக உணவு நிவாரணத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது தான் உணவுப் பங்கீட்டில் தங்கியிருக்கும் நிலைமையில் இருந்து இந்த இடம்பெயர்ந்த மக்கள் விடுபட முடியும். இந்நிலை அவர்களை தமது எதிர்கால 'திரும்பிச் செல்லலுக்கு' தயாரித்துக் கொள்ள உதவும்.

**கலாநிதி எம்.எல்.ஏ. ஹஸ்புல்லா**

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்:sarini@sltnet.lk

## பேச்சுவார்த்தை குசலம் விசாரிக்கவல்ல!

அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆளும் பொ.ஐ.முவுக்கும் ஐ.தே.கவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் மூன்றாவது சுற்று முடிந்து விட்டதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான அரசாங்க யோசனைகள், ஐ.தே.கவின் யோசனைகள் இரண்டுக்கும் இடையில் இணக்கம் காணப்படும் விடயங்கள் இச்சீர்திருத்தத்தின் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிகளாகக் கொள்ளப்படும் என்று கருதப்படுகிறது.

ஆனால், கடந்த மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும், இனப்பிரச்சினையுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட, அதற்கு ஒரு தீர்வைக் காணக்கூடியதான விடயங்கள் எதுவும் பேசப்பட்டதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இன்று ஐ.தே.க, பொ.ஐ.மு கூட்டாக வெளியிட்ட அறிக்கை பற்றிய விபரங்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இப்பேச்சுவார்த்தை கண்டிருப்பதாக டெய்லி நியூஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆயினும் பேசப்பட்ட விடயம் தொடர்பான விரிவான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

மாகாண ஆளுநர்களை நியமிப்பது தொடர்பான விடயம் ஆராயப்பட்டதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண ஆளுநர் நியமிக்கப்படும் விதம் தொடர்பான சர்ச்சை, மாகாண சபைகளது அதிகாரம் குறித்த ஒரு முக்கிய சர்ச்சையாக, மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட காலம் தொட்டு இருந்து வருவது தெரிந்ததே.

ஆயினும், அந்த விடயத்தில் இன்னமும் தெளிவான முடிவு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இதைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுக்கள் தமது அறிக்கையைச் சமர்ப்பித்த பின், அவை பற்றி சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், ஆளுநர் நியமனம் என்பது மத்திய அரசாங்கம், அரசு தலைவர் ஆகியோரின் அதிகாரங்களை மாகாண அரசாங்கத்துள் உறுதிசெய்வதற்காக உள்ள ஒரு நியமனம் என்பதே இந்த இரு கட்சிகளினதும் உள்ளக்கிடக்கை என்பது அவர்களது பேச்சுகளின் போக்கைக் கவனித்தால் புரிந்து கொள்ளலாம்.

ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவது என்பது ஒருவகைச் சம்பிரதாய அளவுக்கு மேல் இருக்காமல் இருப்பதும், மாகாண உள் மட்ட அலுவல்கள் எதிலும் ஆளுநர் தலையிடாமல் இருப்பதும் முக்கியமானது. நாட்டின் பாதுகாப்பு, இறைமை தவிர்ந்த ஏனைய துறைகளில் அப்பிராந்திய மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண அரசாங்கத்திற்கே நிறைவேற்று அதிகாரம் இருக்க வேண்டும். அப்போது தான் பிராந்தியங்களிற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவது என்பது உண்மையானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்.

'மாகாண ஆளுநர் முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர்' என்பது மாகாண சபை அதிகாரத்தை ஆளுநர் கட்டுப்படுத்தாமல் இருக்க அவசியமானதெனக் கருதப்பட்ட ஒரு ஏற்பாடு ஆகும். ஆனால்,

இதற்குப்பதிலாக அரசத்தலைவரின் பூரண அதிகாரத்துடன் நியமிக்கப்படும் ஒரு ஆளுநர் பற்றியே இப்போது இவ்விரு கட்சிகளும் பேசுவதாக சந்தேகிக்க இடம் இருக்கிறது. அத்தகைய ஒரு முடிவு மாகாண மட்டத்திலான அதிகாரப் பகிர்வை கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகவே முடியும் என்பதில் ஐயமில்லை.

அதிகாரப் பரவலாக்கம் என்பது பிராந்தியங்களின் சுயாதீனமான வளர்ச்சிக்கு உதவும் அதேவேளை, நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பெருமளவு சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்க முடியும்.

முதலமைச்சர் என்பவர் ஒரு பிராந்திய மக்களால் தெரிந்தெடுக்கப்படும் அம்மக்களின் அதிகபட்ச ஆதரவுடைய நபராக இருப்பதால், அப்பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அதிகளவுக்கு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தார்மீக உரிமை அவருக்கே உண்டு. மாகாணசபைகளை தான் நினைத்த மாத்திரத்தில் கலைக்கவும், அதன் அதிகார வரம்புக்குள் ஒதுக்கப்பட்ட விடயங்களை நினைத்த மாத்திரத்தில் பிடுங்கிக் கொள்ளவும் அதிகாரம் படைத்ததாக மத்திய அரசு இருக்குமானால் மாகாணசபைகள் இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. தவிரவும், நாட்டின் ஏனைய மாகாணங்களை விட வடக்கு கிழக்கு விசேட பிரச்சினைகளைக் கொண்ட மாகாணமாக இருப்பதால் ஆளுநரின் அதிகாரம் அப்பிராந்தியத்தின் மக்களது சுயாதீனத் தன்மையைப் பாதிக்கும் என்கிற சந்தேகத்தை வலுவாக கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சினைச் தீர்வுக்கு அடிப்படையான நம்பகத் தன்மையை உருவாக்க அவசியமான இந்த விடயத்தில் இரு கட்சிகளும் அக்கறை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

இதற்குப் பிறகு 'சிறுபான்மைக் கட்சிகளுடன் பேசிய பின்னரே' இறுதி முடிவு எடுப்பது என்பது வெறும் கண்துடைப்பாகவே இருக்க முடியும்.

உண்மையில் இம்மாதிரி விடயங்கள் தொடர்பாக சிறுபான்மைக் கட்சிகளின் அபிப்பிராயங்களைத் தொகுத்த பின்னரே பிரதான கட்சிகள் அவைகுறித்து தீர்மானம் எடுக்க முயன்றிருக்க வேண்டும்.

இங்கே எல்லாமே தலைகீழாக நடப்பது தான் வழமை.

இது நிலமையை முன்னேற்ற உதவுவதற்குப் பதில் அதை இன்னமும் கீழ்நிலைக்கே இட்டுச் செல்லவே செய்யும்.

நோர்வே மத்தியஸ்தத்துடன், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில், ஒப்புக்கொள்ளப்படக்கூடிய குறைந்தபட்ச அடிப்படைகளைக் கொண்டதாகவேனும் இந்த சீர்த்திருத்தம் அமைய வேண்டுமானால், அரசும், ஐ.தே.கவும் தாம் எடுக்கும் தீர்மானங்கள் குறித்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கும் ஐ.தே.கவிற்கும் தாம் பேசிக் கொண்டிருப்பது குசலம் விசாரிக்கவும், சட்ட விவாதம் செய்யவுமல்ல, மாறாக தினமும் மனித உயிர்கள் பறி போய்க்கொண்டிருக்கும் உக்கரமான யுத்தம் நடக்கின்ற ஒரு நாட்டில் இருந்து, அதன் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பொறுப்பினச் சுமந்தபடி என்பதை ஒரு முறை ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

## தப்பிப் பிழைக்க வழி!

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியை நான்கு கட்டங்களில் பூரணப்படுத்தப் போவதாக அரசு அறிவித்து இப்பொழுது மூன்றாவது கட்டத்தில் வந்து நிற்கிறது.

இரண்டாவது கட்டமான தமிழ்க்கட்சிகளுனான உடன்பாடு விடயத்தில் அரசு சரியாகச் செயல்பட்டபின் தான் மூன்றாவது கட்டத்துக்க வந்திருக்க வேண்டும். ஆனால், அரசு அவ்வாறு முறையாக இரண்டாவது கட்டத்தைத் தாண்டவில்லை. ஏனோதானோ என்று "வழவழ"ப் பேச்சுத்தான் நடந்திருக்கிறது.

இதற்கு அரச தரப்பை மாத்திரம் குறை சொல்ல முடியாது. அரச தரப்பை அண்ணார்ந்து பார்த்துப் பிரமித்துச் செயலிழந்து போவதையே நடைமுறையாகக் கொண்ட தமிழ்க் கட்சிகளிலும் பாரிய பிழையுண்டு.

அரசு மூன்றாவது கட்ட நடைமுறைக்குச் செல்ல முன்னர் அது இரண்டாவது கட்டத்தையே சரியாகச் செய்யவில்லை என்று உரக்கக்கூறி அரசை இழுத்து நிறுத்த வேண்டிய கடமையிலிருந்து தமிழ்க் கட்சிகள் தவறிவிட்டன. அதில் உடன் பாடு காணப்படவில்லை. இதில் தமிழ்க் கட்சிகள் கொடுக்கும் அறிக்கைகள் எல்லாம் தமிழர்கள் காதில் பூச்சுற்றுவதாகவே இருக்கின்றன.

இப்போது அரசு மூன்றாவது கட்டத்தில் அதாவது எதிர்க்கட்சியுடன் தீர்வு பற்றிய இணக்கப்பாடு காணும் பணியில் இறங்கியுள்ளது. அரசின் ஒவ்வொரு அசைவையும் பாராட்டிப் பழக்கப்பட்டுப்போன தமிழ்க்கட்சிகள் அரசு - எதிர்க்கட்சிச் சந்திப்பு வரலாறு காணாத திருப்பம், நல்ல ஆரம்பம் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கின்றன.

உண்மையில், இரண்டு தரப்பாரும் நேர்மையுடன் கூடிப்பேசுகின்றனரா என்பது தமிழ் மக்களிடையே எழுந்துள்ள நியாயமான சந்தேகம். இரண்டு கட்சிகளின் வரலாறுகள் அப்படி. பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என உடன்பாடு காணப்பட்டவற்றையே நடைமுறைப்படுத்த விடாமல் கிழித்தெறிய வைத்த புண்ணிய வரலாறுகள் இரு கட்சிகளுக்கும் சொந்தமானவை.

எரியும் பிரச்சினைக்கு இரு சாராரும் இணைந்து நிரூற்றி அணைக்க முயல்கிறார்களா அல்லது எண்ணெயை நாசூக்காக ஊற்றி எதிராளியின் தலையில் பழியைப் போட்டு அரசியல் குளிர்காயத் தருணம் பார்க்கிறார்களா என்பது விளங்காத ஒன்றாகவே இருந்து வருகிறது.

பிரச்சினையைத் தொடர்ந்து வைத்திருக்கும் வரையில் தான் இலகு விளம்பரங்கள் மூலம் அரசியல் நடத்தலாம் என எண்ணுபவர்கள் இவர்கள். அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்கு வலைவீசல்களாகக் கூட இவர்களது பேச்சுவார்த்தை அமையக்கூடும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் பேச்சுவார்த்தையை இழுத்தடிக்கும் மறைமுக முயற்சியில் இறங்கியிருக்கிறார் போலத் தோன்றுகிறது. தன்னால் ஏற்கெனவே நிராகரிக்கப்பட்ட 97ம் ஆண்டு வரைபு பற்றிப் பேசுவோம் எனக் கூறும் இவரின் போக்கில் திசை திருப்பலே தெரிகிறது.

அவரது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரொருவர், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும். இதற்கு 7 லட்சம் பேர் கொண்ட இராணுவப் படை அமைக்கப்படவேண்டும். ஆரம்ப கட்டமாக ஒன்றரை லட்சம் பேரை உடனடியாகத் திரட்ட வேண்டும் என்றெல்லாம் பத்தாம்பசலித்தனமாக உளறிக் கொட்டியிருக்கிறார். இவரது கூற்று இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியால் கண்டிக்கப்பட வில்லை. இதை வைத்துப் பார்த்தால் இப்படியான கருத்துக்கள் விதைக்கப்படுவது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் தேவைகளில் ஒன்றாக இருக்கக்கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது.

ஆளும் கட்சியும் தனது பங்குக்கு எந்த அரசியல் தீர்வானாலும் பௌத்த மகா சங்கத்திடம் அனுமதி பெற்றபின்பே அமுலாகும் என்று இப்போது கூறத் தொடங்கியுள்ளது. இந்தக் கூற்று பௌத்த மகா சங்கத்தைக் கனம் பண்ணும் பண்பு என்பதைவிட, தீர்வு அமுலாகாமல் புத்தி சாலித்தனமாக இடைநிறுத்தி விடுவதற்கான முயற்சியாகவே தோன்றுகிறது.

'இலங்கையில் இன்று நடைபெறும் யுத்தம் பயங்கரவாதச் சிந்தனையின் விளைவேயன்றி வேறொன்றுமில்லை" என்ற கற்பனைக் கோட்பாட்டில் உறுதியாக நிற்கும் மகா சங்கம் தமிழருக்குப் பிரச்சினை உண்டென்றும் அது தீர்க்கப்பட வேண்டியது என்றும் எழுதப்பட்ட அரசியல் யாப்பில் ஒரு வரியைத்தானும் அங்கீகரிக்கப் போவதில்லை. இது அமைச்சர் பீரிசுக்குத் தெரியாததல்ல. என்றாலும் அவர்களிடம் ஆசி பெறுவதும் சமர்ப்பிப்பதும் அரசின் அரசியல் வங்குரோத்துத் தனத்தை மறைக்கும் ஒரு முயற்சியேயன்றி வேறல்ல.

இலங்கை இப்படி சீர்கெட்டுப் போனதற்குக் காரணம் அரசியல்வாதிகள் பிக்குகளை அதி உயர் பீடத்தில் வைத்துப் பூஜிக்கவும், கருத்துக்கள் கேட்கவும் பழக்கப்படுத்திக் கொண்டமை தான். போகும் வழிக்குத் தாமும் புண்ணியம் தேடிப் பிறரையும் புண்ணியம் தேட வைக்க வேண்டிய பிக்குகள் துறவின் நோக்கத்தை மறந்து அரசியலில் தலையிடுவது இலங்கையின் பிரதான சாபக்கேடு.

எந்தச் சிங்கள - தமிழ் இளைஞனது மரணமும் அவனவன் பெற்றோரையும் குடும்பத்தவரையும் தான் உண்மையில் பாதிக்கும். அவர்கள் நெஞ்சங்களைத் தான் காலங்காலமாக அழுத்திக் கொண்டிருக்கும். புத்தபிக்கு உட்பட எந்தச் சமயக்குழுவும் இதனால் நேரடியாகப் பாதிக்கப்படப்போவதில்லை. எனவே இத்தகையோர் யுத்தத்தை வலியுறுத்துவதில் ஆச்சரியமும் இல்லை.

பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து இனவாத இடதுசாரிகளான ஜே.வி.பியினரும் மக்கள் மத்தியில் விஷக் கருத்துக்களை விதைக்கத் தொடங்கியுள்ளனர் என்பதை இலங்கை நாட்டின் நலனில் அக்கறையுள்ள சக்திகள் கவனிக்க வேண்டும்.

அரசு உண்மையில் பிரச்சினைகளற்ற இலங்கையைச் சந்திக்கச் சங்கற்பம் கொண்டிருக்குமானால் அதன் முன்னாலுள்ள பிரதான எதிரி யார் என்பதைச் சரியாக அடையாளங் கண்டு அவர்களை வெற்றி கொள்ளும் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

நாடு தப்பிப் பிழைக்க அரசுக்குள்ள ஒரே வழி இது தான்.

அரசே இனவாதத்திலீருந்து விடுபடாத போது அது சாத்தியம் தானா?

*-திரிபுரன்-*

## காணமல் போன பகுதிகள்

இலங்கையில் படையினரால் பெண்களும், சிறுமிகளும் - குறிப்பாகத் தமிழ்ப்பெண்கள், சிறுமிகள் - பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்படுவதும் பின்னர் அவர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்படுவதும், குறித்து, பெண்களுக்கெதிரான வன்செயல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட இணைப்பார் செல்வி ராதிகா குமாரசாமி அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளதோடு இது சம்பந்தமாக அவர் வெளியுறவு அமைச்சுக்கும் கடிதம் எழுதி அரசு இது சம்பந்தமாக எந்தவித அக்கறையுடனும், விசாரணை நடத்தாதது பற்றி விசனம் தெரிவித்துமிருக்கிறார்.

இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுள்ளது. அரசு மேற்படி தமிழ்ப்பெண்களுக்கெதிராக படையினரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளைத் தடுப்பதற்கு மனமொத்து முயலவில்லை என்பது ஒரு புறமிருக்க அது சம்பந்தமாக தமிழ்ப் பத்திரிகைகளைத் தவிர்ந்த ஏனைய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும் சரி ஏனைய ஊடகங்களும் சரி எந்தவிதப் போக்கைக் கைக்கொள்கின்றன என்பதே எமது அக்கறைக்குரிய விஷயமாகும்.

ஐ.நா. அலுவலகம் விடுத்த அறிக்கையில் அண்மையில் இலங்கையில் இடம் பெற்ற மூன்று (தமிழ்ப் பெண்கள்) பாலியல் வன்புணர்வுக் கொலைச் சம்பவங்களை ராதிகா குமாரசாமி சுட்டிக் காட்டியுள்ளார். முதலாவது கடந்த டிசெம்பர் 28ம் திகதி புங்குடுதீவில் கடற்படையினரால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சாராதாம்பாள். இரண்டாவது, ஜூலை 12 அன்று மன்னாரில் இவ்வாறு கொலைசெய்யப்பட்ட ஜடா கமாலிட்டா, அடுத்து 1998 ஒக்டோபரில் சாவகச்சேரியைச் சேர்ந்த 12வயது மாணவியான புஷ்பமலர் என்பவருக்கு நிகழ்ந்த துயரம்.

இவைபற்றி தமிழ்ப்பத்திரிகைகளில் செய்தி தரப்பட்ட அளவுக்கு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் ஏனைய ஊடங்கள் செய்தி வெளிக்கொணர் முன்வரவில்லை. முன்வருவதில்லை இது ஏன்? இராணுவத்திற்கு எதிரான செய்திகளை வெளியிட இப் பத்திரிகைகள் தயங்குகின்றனவா? அல்லது பாதிக்கப்படுவது தமிழ்ப் பெண்கள் தானே என்ற புறக்கணிப்பா?

இச்சந்தர்ப்பத்தில் அண்மையில் கோடீஸ்வரர் ஒருவரைக் காதலித்த இராணுவ பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக எல்லாப் பத்திரிகைகளும் ஏனைய ஊடங்களும் பக்கம் பக்கமாகப் பெரிதுபடுத்தியதை நாம் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இவற்றிலிருந்து நாம் ஒன்றை அறியலாம். ப்டையினர் புரியும் பாதகமான விஷயங்களை குறிப்பாக தமிழர்களுக்கோ, தமிழ்ப் பெண்களுக்கோ எதிரான விஷயங்களை அவை வெளிக்கொணரத் தயங்குகின்றன.

அண்மையில் ராதிகா குமாரசாமி அவர்கள் இது சம்பந்தமாக வெளியிட்ட ஐ.நா.வின் அறிக்கையை சண்டே லீடர் பத்திரிகை 2ம் பக்கத்தில் உள்ள ஒரு மூலையில் ஒரு சிறு செய்தியாக வெளியிட்டிருப்பதில் இருந்தே இப்போக்கை அறியலாம். அதுமட்டுமல்ல இவ்வறிக்கையை வெளியிட்ட ஐலண்டும் தமிழ்ப் பெண்கள் படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட தகவல்களை மறைத்து விட்டு அனோஜா வீரசிங்கவின் வீடு தாக்கப்பட்ட தகவலை மட்டுமே வெளியிட்டிருக்கிறது.

இச்செய்திகளைப்பார்த்துவிட்டு தமிழ் மக்கள் ஒரே ஒரு விடயத்திற்காகத் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். அந்தத் தமிழ்ப் பெண்களை புலிகள் தான் பாலியல் வல்லுறவு செய்து கொன்றார்கள் என்று எழுதாமல் விட்டார்களே என்பதற்காக.

தமிழ்ப் பத்திரிகைகள் இனவாதத்தைக் கக்குகின்றன என்று புலம்புபவர்களுக்கெல்லாம் இந்த இனவாதம் தான் கண்ணில் படுவதில்லையே!